★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஜனவரி 30 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

91

வரு. 92 இல. 26 | Tuesday 30, January, 2024 | 16பக்கங்கள் | 50/-




### வரி வீத அதிகரிப்புகள் உட்பட

## புதிய வரிகளை அமுல்படுத்தும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

மறைமுக வரிகளை அறிமுகப்படுத்தவோ அல்லது வரி வீதத்தை மேலும் அதிகரிக்கவோ அரசாங்கம் தீர்மானிக்கவில்லை என, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் அரசாங்கத்தின் வரி விதிப்பு தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே, இராஜாங்க அமைச்சர் இவ்வாறு 06

## வங்குரோத்து நிலையிலிருந்து மீண்ட நாடாக இலங்கை மாறும்

### IMFவிரைவில் இந்த அறிவிப்பை வெளியிடும்



சர்வதேச நாணய நிதியம் (IMF) இலங்கையை வங்குரோத்து நிலையிலிருந்து மீண்ட நாடாக அடுத்த மாதம் அறிவிக்குமென ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் டொக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

மிகக் குறுகிய காலத்தில் வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு வந்த நாடாக இலங்கை மாறுமென, டொக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

“கிரேக்க மக்கள் வங்குரோத்து நிலைமையின் பின்னர் நான்கு அரசாங்கங்களை கவிழ்த்தனர். வங்குரோத்து நிலையிலிருந்து மீள பத்து வருடங்களானது. ஆர்ஜென்டினாவிலும் 06

## இராஜாங்க அமைச்சராக லொஹான் ரத்வத்த



பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக லொஹான் ரத்வத்த நேற்று (29) ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். இந்நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் கலந்துகொண்டார்.

### 'லொரன்சோ புத்தா 4' ஆழ்கடல் படகுடன்



# சோமாலியாவில் கடத்தப்பட்ட இலங்கை மீனவர்கள் மீட்பு

### சீசெல்ஸ் கடலோர பாதுகாப்புப்படை அதிரடி; கடற்கொள்ளையர் மூவரும் கைது

**மீனவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கான பணிகள், ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்கவின் வழிகாட்டலின் கீழ் ஆரம்பம்**

அரபிக்கடலில் காணாமல்போன "லொரன்சோ புத்தா 4 " படகு சீசெல்ஸ் கடலோர பாதுகாப்புப் படையினரால் மீட்கப்பட்டதாக அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சீசெல்ஸ் கரையோரப் பாதுகாப்புப் படையினர் நேற்று (29) பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவுக்கு இதனை, உத்தியோக பூர்வமாக அறிவித்தனர்.

ஆழ்கடல் மீன்பிடிப்படகான ''லொரன்சோ புத்தா 4'' கடந்த ஜனவரி 12 இல், ஆறு மீனவர்களுடன் திக்கோவிட்ட மீன்பிடி துறைமுகத்திலிருந்து முதல் பயணத்தை ஆரம்பித்தது. பின்னர், கரையிலிருந்து 1,160 கடல் மைல் தொலைவிலுள்ள அரபிக் கடலில் சோமாலிய கடற்கொள்ளையர்களால் இப்படகு கைப்பற்றப்பட்டதாக மீன்பிடிக் கூட்டுத்தாபனத்துக்கு அறிவிக்கப்பட்டது.

காணாமல்போன படகு தொடர்பில் தகவல்களை அறியுமாறு இலங்கை கடற்படையினர், பஹ்ரைனில் அமைந்துள்ள 40 நாடுகளை உள்ளடக்கிய கூட்டு கடல் படையணிக்கு அறிவித்தனர். சோமாலிய கடற்கொள்ளையர்களால்கைப்பற்றப்பட்ட மீன்பிடிப் படகைக் கண்டுபிடிக்க, சீசெல்ஸ் கரையோரப் பாதுகாப்புப் படை விசேட தேடுதல் நடவடிக்கையைத் தொடங்கியது. இதையடுத்து, சோமாலிய கடற்கொள்ளையர்களின் பிடியிலிருந்த படகை அவர்கள் கண்டுபிடித்தனர். அத்துடன், இரண்டு சோமாலிய கடற்கொள்ளையர்களும் சீசெல்ஸ் கரையோரப் பாதுகாப்புப் படையினால் கைது செய்யப்பட்டனர். "லொரன்சோ புத்தா 4" ஆழ்கடல் மீன்பிடிப் படகிலிருந்த 06 மீனவர்களும் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சோமாலியக் கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட ஆழ்கடல் மீன்பிடிப் படகை இலங்கைக்கு கொண்டுவருவதற்கான பணிகள், ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவின் வழிகாட்டலின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 06

## தேசிய ரின்மீன் தொழில்களை பாதுகாக்க பூரண ஒத்துழைப்பு



உள்ளூர் தேசிய ரின் மீன் உற்பத்தித் துறையைப் பாதுகாப்பதற்காக சகல ஒத்துழைப்புக்களையும் வழங்கவுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

சிலாபம், மஹவெவ பகுதியிலுள்ள PRF Sea Food தனியார் நிறுவனத்துக்கு கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 06

## 2023: அந்நியச் செலாவணி வருவாயாக 14.94 பில்லியன் அமெரிக்க டொலர்

### இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி அதிகார சபை அறிவிப்பு



நாட்டுக்குள் அந்நிய செலாவணியை கொண்டு வரும் அரசின் வேலைத்திட்டத்துக்கு பெரும் பங்களிப்பை வழங்குவதன் மூலம் 2023 இல், 4,75,000 கோடி ரூபாவை (14.94 பில்லியன் அமெரிக்க டொலர்) ஏற்றுமதி வருவாயாக இலங்கை பெற்றுள்ளதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு இலங்கையின் பொருட்கள் ஏற்றுமதி மற்றும் மதிப்பிடப்பட்ட சேவை ஏற்றுமதி உட்பட இலங்கையின் மொத்த 06

## திருமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி காணிப் பிரச்சினைக்கு தீர்வு



### முப்பது வருட குத்தகைக்கு காணியை பெற்றுக்கொடுத்தார் கிழக்கு ஆளுநர்

நூறு வருட வரலாறுள்ள திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் நீண்டகாலமாக நிலவிவந்த காணி பிரச்சினையை, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தீர்த்துள்ளார். 06

## அரிசி உற்பத்தியில் தன்னிறைவு 2024இல், இறக்குமதிகள் இல்லை



### மரக்கறி விலைகளும் குறையும் சாத்தியம்

அரிசி தேவையில் நாடு தன்னிறைவு அடைந்துள்ளதால், 2024இல் அரிசி இறக்குமதி செய்யப்படாதென, கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

2024 இல், தன்னிறைவடையும் வகையில், நெல், சோளம், உருளைக்கிழங்கு மற்றும் மிளகாய் பயிர்களுக்கு முன்னுரிமை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (29) நடைபெற்ற ஊடக 06

### பல்கலைக்கழக விரிவுரைகள்

## அரசியல்வாதிகளை அழைப்பதை அவசரமாக நிறுத்த வேண்டும்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

பல்கலைக்கழகங்களில் விரிவுரைகளை நடத்துவதற்காக அரசியல்வாதிகள் மற்றும் ஜனாதிபதி வேட்பாளர்களை வரவழைப்பதற்கு சில பல்கலைக்கழகங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அதனை உடனடியாக நிறுத்துவது அவசியமென்றும் உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார். பல்கலைக்கழகங்களில் விரிவுரைகளை நடத்துவதற்காக 06

## கைதான பல்கலைக்கழக மாணவர்கள் விடுதலை




**லோரன்ஸ் செல்வநாயகம்**

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் பகிடிவதை குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் ஏழு பேரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் தரப்பினர் குறுப் புகைப்படம் ஒன்றை எடுக்கும் 06

## குற்றமிழைத்த 610 சாரதிகள் இனங்காணப்பட்டு எச்சரிக்கை

### பெப்ரவரி முதல் கடும் நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வீதிகளில் விசேட கமரா கட்டமைப்புக்களை பொருத்தியுள்ள நிலையில், கொழும்பு நகர்ப்புறத்தில் வாகன போக்குவரத்தின் போது, குற்றமிழைத்துள்ள 06

## கட்டுப்பாட்டை இழந்த வேன் புளியமரத்தில் மோதி விபத்து

### இரு இளைஞர்கள் பலி, 04 பேர் படுகாயம்



செல்லக்கதிர்காமம் கதிர்காமம் வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்து, மேலும் நால்வர் காயமடைந்தனர்.

செல்லக்கதிர்காமத்திலிருந்து கதிர்காமம் நோக்கி நேற்று முன்தினம் 06



# நகர்வலம்



## ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தில் நாற்பெரும் விழா நிகழ்வுகள்

### பிரதம அதிதியாக மர்ஜான் பளீல் எம்.பி பங்கேற்பு

பேருவளை, ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் ஐம்பதாண்டு நிறைவை யொட்டிய பொன்விழா நிகழ்ச்சித் தொடரின் மற்றுமொரு வரலாற்று நிகழ்வு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.45 மணிக்கு ஜாமிஆ நளீமிய்யா கலாபீட மாநாட்டு மண்டபத்தில் வெகுவிமர்சையாக நடைபெறவுள்ளது.

ஜாமிஆ நளீமிய்யா கலாபீட நிர்வாக சபையும் ராபிததுந் நளீமிய்யீன் பேருவளை வலயமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் கலந்து சிறப்பிப்பார். விசேட அதிதியாக நளீமிய்யா பரிபாலன சபைத்தலைவர் யாகூத் நளீம் மற்றும் கௌரவ அதிதியாக கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் மொஹமட் (நளீமி) ஆகியோரும் கலந்து சிறப்பிப்பர்.

இவ்விழா நிகழ்வில் நளீமிய்யாவின் ஐம்பதாண்டு நிறைவையொட்டிய நினைவு முத்திரை வெளியீடு, நளீமிய்யா உருவாக்கத்திற்கு நளீம் ஹாஜியாருடன் இணைந்து உழைத்த ஸ்தாபகர்களை கௌரவிக்கும் ஸ்தாபகர் தினம், நளீமிய்யாவின் உருவாக்க வரலாற்று நூல் வெளியீடு மற்றும் நளீமிய்யா கலாபீடத்திற்கான 'SOLAR POWER PROJECT' சூரிய சக்தி மின் உற்பத்தி திட்டமும் இந்நிகழ்வின்போது அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளமை விசேட அம்சமாகும்.

## புத்தளம் பள்ளிவாசல் நிர்வாகிகளுடன் டெங்கு அபாயம் தொடர்பில் அதிகாரிகள் கலந்துரையாடல்

(புத்தளம் தினகரன் நிருபர்)

புத்தளம் நகரசபை மற்றும் புத்தளம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த புத்தளம் பள்ளிவாசல்கள் நிர்வாகப் பிரதிநிதிகளுடன் டெங்கு அபாயம் குறித்த விஷேட கலந்துரையாடல் நகரசபை செயலாளர் எல்.பீ.ஜீ. பிரீத்திகா தலைமையில் அண்மையில் புத்தளம் நகர மண்டபத்தில் நடைபெற்றது. தற்போது புத்தளம் பிரதேசத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து காணப்படுவதையும் துரதிஷ்டவசமாக சில உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளதையும் குறிப்பிட்டு இதனைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமாக புத்தளம் பிரதான பொது சுகாதார பரிசோதகர் என்.சுரேஷ் மற்றும் நகரசபை சுகாதார பிரிவு அதிகாரிகள் விவரித்தனர்.



அண்மையில் நகரசபை மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தினால் டெங்கு தொற்றாளர்கள் எண்ணிக்கை கணிசமாக குறைவடைந்திருந்தது. எனினும் தற்போது மீண்டும் பிரதேசத்தில் வாரத்திற்கு சராசரியாக 30 க்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் இனம் காணப்படுவதாகவும் இது ஆபத்தான நிலைமையை நோக்கி நகருவதாகவும் குறிப்பிட்ட பிரதான பொது சுகாதார பரிசோதகர், பள்ளி நிர்வாகங்களினதும் பொதுமக்களினதும் ஒத்துழைப்பு மூலமே இவற்றை வெற்றிகரமாக கட்டுப்படுத்த முடியும் எனவும் மேலும் தெரிவித்தார்.

இதனடிப்படையில் எதிர்வரும் காலங்களில் ஒவ்வொரு பள்ளிவாசல் மஹல்லாக்களிலும் நிர்வாகத்தினரையும் தன்னார்வலர்களையும் இணைத்துக்கொண்டு புத்தளம் நகரசபை, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகியன இணைந்து டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சட்டக்கல்லூரிக்கு 2024ஆம் கல்வியாண்டிற்கு 239 பேர் தெரிவு

(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

இலங்கை சட்டக்கல்லூரியின் 2024 ஆம் கல்வியாண்டுக்கான மாணவர்களை உள் இணைக்கும் 'பொது நுழைவுப் பரீட்சை2023' இல் இருநூற்றி முப்பத்தொன்பது பேர் சித்தியடைந்து கல்வியை தொடர தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இப் பரீட்சையில் சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியில் பரீட்சார்த்திகள் தோற்றியுள்ளனர். இந்த பரீட்சையில் சிங்களம் மற்றும் ஆங்கில மொழியில் முறையே 145 புள்ளிகள் பெற்றவர்கள் பரீட்சையில் முதலாவது நிலை பெற்றுள்ளதோடு பரீட்சையில் 107 புள்ளிகள் பெற்ற பதிமூன்று பேர் பரீட்சையில் 227 ஆவது நிலை பெற்றுள்ளனர். சட்டக் கல்லூரியின் புதிய மாணவர் பதிவு தொடர்பான வழி முறைகள் சட்டக் கல்லூரியின் இணைய தளத்தில் வெளியிடப்படவுள்ளது.



புதிய அலை கலை வட்டத்தின் 'எவோட்ஸ் 2023' ஆம் ஆண்டுக்கான கலை, இலக்கியப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு கடந்த ஞாயிறன்று கொழும்பு 14 சுகததாச ஸ்போர்ட்ஸ் ஹோட்டலில் விமர்சையாக நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட புரவலர் ஹாசிம் உமர், வெற்றி பெற்ற ஒருவருவருக்கு பரிசு வழங்குவதை படத்தில் காணலாம்.



யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக காளிங்க ஜெயசிங்க நேற்றையதினம் திங்கட்கிழமை பதவியேற்றார். யாழ்ப்பாணத்திலுள்ள பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் இவர் தனது கடமைகளை தனது குடும்ப அங்கத்தவர் முன்னிலை பொறுப்பேற்றபோது எடுக்கப்பட்ட படம்.

## அத்தனகல்ல அல் முஸ்தபாவில் வருடாந்த பரிசளிப்பு விழா



கம்பஹா மாவட்டத்தின் அத்தனகல்ல, அல் முஸ்தபா மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா 2023 நிகழ்வுகள் பாடசாலை அதிபர் அஷ்ஷெய்க் எம்.இஸட்.எம். சம்ரிஹான் (நளீமி) தலைமையில் அண்மையில் வெகுவிமர்சையாக நடைபெற்றது. நிகழ்வில் களனி, கம்பஹா வலய தமிழ் மொழிமூல பாடசாலைகளுக்கான பிரதிக்கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.எம். தௌஸீர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

விஷேட அதிதியாக களனி வலய முறைசாராக் கல்விக்கு பொறுப்பான கல்வி அதிகாரி உட்பட முன்னாள் எமது பாடசாலையின் அதிபர்கள் மற்றும் அண்மைய பாடசாலை அதிபர்கள், ஊர் பிரமுகர்கள் உட்பட பள்ளிவாசல் நிர்வாகத்தினர்கள், இமாம்கள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

2023 ஆம் ஆண்டில் சாதனை படைத்த அனைத்து மாணவர்களும் இதன்போது கௌரவிக்கப்பட்டனர். இவ் விழாவின் போது பாடசாலையின் பழைய மாணவரும் தொழிலதிபருமான எம்.எச்.எம். ரஸ்மில் ஹாஜியாரால் புலமைப் பரிசில் பரிட்சையில் சித்தி பெற்ற எம்.என்.எம். மிக்தாத் என்ற மாணவனுக்கும் அவரது வகுப்பாசிரியை கே. கிருஷ்னவேனிக்கும் தலா ஒருலட்சம் ரூபா பரிசு வழங்கப்பட்டது.

## மறைந்த பவதாரணிக்கு இரங்கல் தெரிவிக்கும் நிகழ்வு



(கொழும்பு கோட்டை தினகரன் நிருபர்)

இசைஞானி இளையராஜாவின் புதல்வி மறைந்த பவதாரணிக்கு இரங்கல் தெரிவிக்கும் நிகழ்வு கொழும்பு 7, சுதர்ஷி மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (28) மாலை நடைபெற்றது.

இலங்கை தமிழ் கலைஞர்கள் மன்றம் ஏற்பாட்டில் கலைஞர்கள் மன்றத் தலைவர் சுருதி பிரபா தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. நிலுக்ஷி வீரசிங்கம் தீப விளக்கை ஏற்றி அஞ்சலி செலத்தியதுடன் வருகை தந்திருந்த கலைஞர்கள் அனைவரும் மறைந்த பவதாரணியின் உருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இரங்கல் உரைகளை கலைஞர்கள் மன்றத் தலைவர் சுருதி பிரபா, சுதர்ஷி மண்டப தலைவர் சமன்பிரிய மாரசிங்க, இசையமைப்பாளர் கருப்பையாபிள்ளை பிரபாகரன், சிரேஷ்ட ஊடகவியலாளர் சீதா ராமன், ஊடகவியலாளர் சியாவுர் ரஹ்மான் உள்ளிட்ட பலர் நிகழ்த்தினர்.


## பெறுகை அறிவித்தல்

### குண்டசாலை பிரதேச சபைக்குச் சொந்தமான சபைச் சொத்துக்களை குத்தகைக்கு விடுவதற்காக மேற்கொள்ளப்படும் அழைப்பு

குண்டசாலை பிரதேச சபைக்குச் சொந்தமான கீழ்க்காணும் 02 செயற்றிட்டங்களை குத்தகைக்கு விடுவதற்கு பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

* மொரகஹபிட்டிய பல்நோக்குக் கட்டிடத்தின் இரண்டாம் மாடியின் தரைப்பகுதி
* குண்டசாலை புதிய நகரில் பாழடைந்துள்ள மலசலகூடக் கட்டிடம்

02. அதனடிப்படையில் உங்களால் இக்கடை அறை, அறைகளை குத்தகைக்கு பெறுவதற்கு உத்தேசித்திருப்பின் நிபந்தனையுடனான விண்ணப்பங்களை கீழேயுள்ள அட்டவணையின் பிரகாரம் காசு செலுத்தி 2024.01.30 முதல் 2024.02.10 வரை சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை குண்டசாலை பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

03. அதனடிப்படையில் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட 02 தொகுதிகள் கொண்ட விண்ணப்பங்களை செயலாளர், குண்டசாலை பிரதேச சபை மெனிக்ஹின்ன என்ற முகவரிக்கு 2024.02.12 பி.ப. 2.00 இற்கு முன்பு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுவந்து அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். சமர்ப்பித்தல் கேள்வி விண்ணப்பங்கள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகைக்கு பெறுவதற்கு உத்தேசித்திருத்திருக்கும் குத்தகைச் சொத்துக்களை குறிப்பிட்டு மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென குறிப்பிட்டு வேறுவேறு உறைகளில் இட்டு இருத்தல் வேண்டும்.

05. அக் கேள்விகளை சமர்ப்பிக்கும் போது கீழே அட்டவணையின் பிரகாரம் வைப்பு ஒன்றை குண்டசாலை பிரதேச சபையின் பெயரில் செலுத்தி சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விகள் திறக்கப்படும் தினம் கேள்விகளை சமர்ப்பிக்கும் நபருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் அல்லது வேரேதும் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் குண்டசாலை பிரதேச சபையின் பெறுகைக் குழுவிற்கு உரியது.

**அட்டவணை**

| குத்தகை வழங்குவதற்கு உத்தேசிக்கும் குத்தகை சொத்து | சதுர அடி அளவு | உத்தேச வியாபார விடயம் | நிர்மாணிப்பதற்கு செலவாகும் மதிப்பீட்டுத் தொகை | மாதாந்த குறைந்தபட்ச கேள்வி | மீளளிக்கப்படும் பிணை வைப்புத் தொகை |
| --- | --- | --- | --- | --- | --- |
| மொரகஹபிட்டிய பலநோக்குத் கட்டிடத்தின் இரண்டாம் மாடியின் தரைப்பகுதி | 8,528 | கேள்விதாரரின் செலவில் உணவகம் மற்றும் விடுதி அறையை நிர்மாணித்து சபைக்கு மாதாந்த குத்தகையை செலுத்துதல் | 63960,000.00 | - | 25,000.00 |
| குண்டசாலை புதிய நகரின் பாழடைந்துள்ள மலசலகூட கட்டிடம் | 20x30 | களஞ்சியத்திற்காக | - | 3,500.00 | 1500.00 |

**எஸ்.ஆர். அதாவுத**
**செயலாளர்,**
**குண்டசாலை பிரதேச சபை,**
**மெனிக்ஹின்ன.**



## இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

## பொது அறிவித்தல்

### கால எல்லை நீட்டிப்பு - 5G ஆய்வு பத்திரம்

இலங்கையில் தொலைத்தொடர்பு சேவைகளை மேம்படுத்த இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (TRCSL) 2024 ஆம் ஆண்டின் முற்பகுதியில் மொபைல் சேவைகள் உட்பட உகந்த பிரோட்பேண்ட் சேவைகளை வழங்குவதற்காக நாட்டிலுள்ள தொலைத்தொடர்பு ஆபரேட்டர்களுக்கு மேலதிக பிரோட்பேண்டினை ஒதுக்க உத்தேசித்துள்ளது.

இதைக் கருத்தில் கொண்டு **"5G உட்பட மேம்பட்ட பிராட்பேண்ட் சேவைக்கான ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு செய்யும் திட்டமிடல்"** செயல்பாட்டில் கருத்துக்களை இணைத்து கருத்து மற்றும் பரிந்துரைகளை வழங்க தொலைத்தொடர்பு நிறுவனப் பிரிவின் பங்குதாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது. **நாடு முழுவதும்** தொலைத்தொடர்பு சேவைப் பயன்பாட்டாளர்களுக்கு அதிகபட்ச நன்மைகளை வழங்கும் முன்னோக்கி செல்லும் பாதையை நிர்ணயிக்கும் நோக்கத்துடனான உயர்ந்த செயற்திட்டமாகும்.

பின்வரும் இணைப்பைப் பயன்படுத்தி ஆலோசனைத் படிவத்தினை பதிவிறக்கம் செய்யலாம்: **https://www.trc.gov.lk/images/pdf/SpectrumAassignmentConsultation.pdf**

கலந்தாய்வு படிவத்தினை தெளிவுபடுத்துவதற்கான கோரிக்கைகளை சமர்ப்பிக்கும் இறுதி திகதி **2024 பெப்ரவரி 05 திங்கட்கிழமை, 17:00 வரை** நீடிக்கப்பட்டுள்ளது. தெளிவுபடுத்துவதற்கான கோரிக்கையினை **spectrum5g@trc.gov.lk.** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

இந்தக் ஆலோசனை படிவத்திற்கு பதிலளிக்கும் வகையில் கருத்துகள் / முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் இறுதித்திகதி **2024 பெப்ரவரி 19 திங்கட்கிழமை, 17:00 வரை** நீடிக்கப்பட்டுள்ளது. தெளிவுபடுத்துவதற்கான கோரிக்கைகளை PDF வடிவில் **spectrum5g@trc.gov.lk** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். அச்சிடப்பட்ட நகல் பிரதியினை அனுப்பி வைத்தல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (TRCSL),**
**இல.276, எல்விடிகல மாவத்தை,**
**கொழும்பு 08.**

பதில்களின் விரிவான மதிப்பாய்வுக்குப் பிறகு, TRCSL தனது முடிவுகளை TRCSL இணையதளத்தில் ஒரு கொள்கை அறிக்கை மூலம் (PP) வெளியிடப்படும். ஆர்வமுள்ள தரப்பினருக்கு அலைவரிசைகளை ஒதுக்கீடு செய்தல் செயல்பாட்டில் எவ்வாறு பங்கேற்பது என்பது பற்றிய விரிவான வழிமுறைகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஆலோசனைகள் வழங்கப்படும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (TRCSL),**
**இல.276, எல்விடிகல மாவத்தை,**
**கொழும்பு 08,**
**www.trc.gov.lk.**

SELACINE

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2024 ஜனவரி 30 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN

தொழுகை நேரம்
30 முதல் 31 வரை
சுபஹ் - 05.11
லுஹர் - 12.25
அஸர் - 03.47
மஃரிப் - 06.19
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் தை 16
ராகுகாலம் : பகல் : 3.35 - 3.06வரை
சுபநேரம் : காலை : 11.06 - 12.36வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# 89 பிரதேச செயலர் பிரிவை உள்ளடக்கி மலைநாட்டு எழுச்சி வேலைத்திட்டம்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



மலைநாட்டு எழுச்சி வேலைத்திட்டத்தின் கீழ் இவ்வருடத்திற்குள் 10 மாட்டங்களில் அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளதாக நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். மலைநாட்டு எழுச்சி வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில் அப்பகுதி மாவட்டங்களின் 89 பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கி 4498 கிராம சேவகர் பிரிவுகள் இதற்காக இனங்காணப்பட்டுள்ளன.

அபிவிருத்தியை கிராமங்களுக்கு கொண்டு செல்லும் அரசாங்கத்தின் நோக்கத்தில் மலைநாட்டு எழுச்சி 10 வருட வேலைத்திட்டம் மற்றும் கிராமிய, சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மாவட்ட மட்டத்தில் முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும்

06

# தையிட்டி ஞானவைரவர் ஆலய மகாகும்பாபிஷேகம்

யாழ் காங்கேசன்துறை கிழக்கு, தையிட்டி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானத்தின் மகாகும்பாபிஷேகம் 29.01.2024 ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகின்றன. பக்தர்கள் இன்று காலை 9.30 முதல் பி.ப 4 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்தலாம். இன்று மாலை 5 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் வழிபாடுகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

நாளை 31 ஆம் திகதி காலை 6 மணி முதல் கிரியைகள் மற்றும் மகாகும்பாபிஷேகம் நடைபெற்று விசேட பூசையுடன் அன்னதானம் வழங்கப்படும். பிரதிஷ்டா பிரதமகுரு சிவஸ்ரீ துரை. உதயராகவக் குருக்கள் தலைமையிலான குருமார்கள் கும்பாபிஷேகக் கிரியைகளை நடத்துகின்றனர்.

# வவுச்சர்களின் செல்லுபடி காலம் பெப்.17 வரை நீடிப்பு

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள காலணிகளுக்கான வவுச்சர்களின் செல்லுபடியாகும் காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான காலணிகளுக்கான வவுச்சர்களின் செல்லுபடியாகும் காலம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதி வரை குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையில்,எதிர்வரும் பெப்ரவரி மாதம் 17 வரை கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதுபற்றி காலணி விநியோகஸ்தர்களுக்கும் பொதுமக்களுக்கும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.


## வ/ ப லங்கா கட்டிட பொருட்கள் கூட்டுத்தாபனம்
## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

வ/ப லங்கா கட்டிட பொருட்கள் கூட்டுத்தாபனத்திலுள்ள பின்வரும் பதவிக்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி: நிதி முகாமையாளர்**

ப.மா.ஆ. இனால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகம்/ கணக்கிடல் துறையில் பெற்ற இளமாணிப் பட்டமொன்று

மற்றும்

முதலாம் பட்டத்தைப் பெற்ற பின்னர், பதவிக்குரித்தான துறையில் ஒரு வருட பட்டப்பின் தகைமைப்பட்டத்துடன் ஆகக் குறைந்தது ஒரு வருட அனுபவம்.

அல்லது

இலங்கை பட்டய கணக்காளர்களின் நிறுவகத்தின் அங்கத்தவரொருவர்.

**பொதுவான நிபந்தனைகள்:**

1. நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு தேவைப்படும் உடல் மற்றும் உள ஆரோக்கியம் கொண்டவராகவிருத்தல் வேண்டும்
2. மிகவும் சிறந்த நன்னடத்தையுடையவராகவிருத்தல் வேண்டும்.
3. 22 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும்.
4. சம்பள மட்டம்: எம்எம்1-1 53,175-10x1,1375-15x1,910-95,575.00 – 95,575.00 + வாழ்கைச் செலவு 7800 ரூபா
5. அரச துறையிலுள்ள ஊழியர்களின் விண்ணப்பங்கள் குறிப்பிட்ட நிறுவனத்தின் பிரிவுத் தலைவரூடாகவே அனுப்பப்படல் வேண்டும்.
6. பதவியின் தலைப்பானது தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும். சுயதரவு மற்றும் சான்றிதழ்களின் பிரதிகள் அத்துடன் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகளுடன் 2024.02.13 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக வ/ப லங்கா கட்டிட பொருட்கள் கூட்டுத்தாபன தலைவருக்கு கிடைக்கும் தன்மையில் அனுப்பப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**வ/ப லங்கா கட்டிட பொருட்கள் கூட்டுத்தாபனம்,**
**இல. 541, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,**
**கொழும்பு-10.**

தொலைபேசி: 011-2326701/02



## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2024.01.08 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. மாத்தறை பிரசித்த நொத்தாரிசு திருமதி. கே.ஏ.றீ.எஸ்.டி சில்வா அத்தாட்சிப்படுத்திய 2022.02.01 திகதியிட்ட ஈட்டு முறி இல. 563 இன் பேரில் கட்டுவன, ரிற்றிகாயாய, “நில்மினி” என்னும் முகவரியைச் சேர்ந்த திருமதி. ஷாமலி நில்மினி கரநாயக்க மற்றும் வராபிட்டிய, ரம்மல, தல்கஹவத்த எனும் முகவரியைச் சேர்ந்த திரு. கண்டம்பிகே சமந்த சமரசிங்ஹ ஆகியோரிடமிருந்து தவணைக் கடன் மீது 2023.10.12 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ.7,358,818.97 (ஏழு மில்லியன் முந்நூற்று ஐம்பத்தெட்டு ஆயிரத்து எண்ணூற்று பதினெட்டு ரூபாய் தொண்ணூற்றேழு சதமும்) அத்துடன் ரூ.5,549,126.99 (ஐந்து மில்லியன் ஐந்நூற்று நாற்பத்தொன்பது ஆயிரத்து நூற்று இருபத்தாறு ரூபாய் தொண்ணூற்றொன்பது சதம்) மீது ஆண்டுக்கு இருபத்தேழு தசம் ஏழு ஐந்து (27.75%) வீதத்தில் 2023.10.13 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,
2. மேற்குறிப்பிட்ட 2022.02.01 திகதியிட்ட ஈட்டு முறி இல. 563 இன் பேரில் தவணைக் கடன் மீது ரூ.7,358,818.97 (ஏழு மில்லியன் முந்நூற்று ஐம்பத்தெட்டு ஆயிரத்து எண்ணூற்று பதினெட்டு ரூபாய் தொண்ணூற்றேழு சதமும்) அத்துடன் 2023.10.13 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3 விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த T&.H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. முதுகமுவாவே ஹேவாவசம் துசித்த கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி வராப்பிட்டிய மேற்தரக் கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை**

தென் மாகாணம் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் கிருவாபற்று வடக்கில் கட்டுவன பிரதேச செயலகப் பிரிவு மற்றும் கட்டுவன பிரதேச சபை எல்லைகளுள் ரிட்டிகஹயாய 513ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் ரிட்டிகஹயாயவில் அமைந்த “கெட்டகலகஹவத்த” என அழைக்கும் காணியின் காணித்துண்டு 6 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு 6. வடக்கில் கெட்டகலகஹவத்தயின் காணித்துண்டு 2 T யும் கிழக்கில் கெட்டகலகஹவத்தயின் காணித்துண்டு 5உம், தெற்கில் பெருந்தெருவும் மேற்கில் கெட்டகலகஹவத்தயின் காணித்துண்டு 7உம் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் நான்கு பேர்ச்சுகள் (ஏ.0,றூ1,பே.4) விஸ்தீரணமுடையதுடன் அங்கு காணப்படும் மண், மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி வலஸ்முல்ல காணிப் பதிவகத்தில் K 104/57இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறிய காணித்துண்டு 6 உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ.எச்.வீ.எச். ரணசிங்ஹ தயாரித்த 2021 ஜனவரி 02 திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. Ma/129இல் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட ரிட்டிகஹயாயவில் அமைந்த “கெட்டகலகஹவத்த” என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ.எச்.வீ.எச். ரணசிங்ஹ தயாரித்த 2021 ஜனவரி 02 திகதியிட்ட வரைபடம் இல. Ma/129இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு A என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு, வடக்கில் கெட்டகலகஹவத்தயின் காணித்துண்டு 2 T யும் கிழக்கில் வரைபடம் இல. 1470 இல் காணித்துண்டு 5உம், தெற்கில் வலஸ்முல்ல மித்தெனிய பெருந்தெருவும் மேற்கில் வரைபடம் இல. 1470 இல் காணித்துண்டு 7உம் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் நான்கு பேர்ச்சுகள் (ஏ.0,றூ1,பே.4) விஸ்தீரணமுடையதுடன் அங்கு காணப்படும் மண், மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும்.

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,**

**திரு.எம்.பீ.கே. தாருக**
**முகாமையாளர்**

**வராபிட்டியக் கிளை**
**இலங்கை வங்கி**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்



## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்
### (தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு)

### பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்திலுள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு சுழற்சி முறை அடிப்படையில் 24/7 சேவைக்கு முப்பது (30) சேவை ஆளணியினரை வாடகைக்கு வழங்குவதற்கான சேவை வழங்குநரைத் தெரிவு செய்தல்

## பெறுகை அறிவித்தல்

பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் ஊடாக புலம்பெயர் தொழிலாளர்கள் புறப்படும்போதும், வருகைதரும் போதும் அவர்களுக்கு போதுமான பிரத்தியேக சேவைகளை வழங்குவதற்காக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலுள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு சுழற்சி முறை அடிப்படையில் 24/7 சேவைக்கு முப்பது (30) சேவை ஆளணியினரை வாடகைக்கு வழங்குவதற்கான சேவை வழங்குநரைத் தெரிவு செய்வதற்காக மனிதவலு வழங்கல் நிறுவனங்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பத்தரமுல்ல, கொஸ்வத்த, இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

ஆர்வமுள்ள தரப்பினர் அவர்களின் இது தொடர்பிலான விலைமனுக்களை முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கடித உறையில் இட்டு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

மீளளிக்கப்படாத 10,000.00 ரூபா கட்டணத்தை 2024-01-31ஆம் திகதி முதல் 2024-02-20ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணிக்கிடையில் செலுத்தி மற்றும் எழுத்துமூலமான வேண்டுகோள் ஒன்றுடன் நிறுவனத்தின் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் (BRC) மூலப்பிரதி மற்றும் புகைப்படப் பிரதியொன்றையும் சமர்ப்பித்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரப் பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதி உறுதிசெய்துகொண்டதன் பின் அதே நாளில் மீளளிக்கப்படும்.

விலைமனுதாரர்கள் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட 420,000.00 ரூபாவிற்கான வங்கி உத்தரவாதமொன்றை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் தலைவரின் பெயரில் பெற்று விலைக்கோரல் பிணை முறியாக விலைமனுவுடன் இணைத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறி 2024-06-03ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

விலைக்கோரலுடன் முன்மொழிவுகள் மற்றும் சேவைத் திட்டங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **‘‘பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்திலுள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு சுழற்சி முறை அடிப்படையில் 24/7 சேவைக்கு முப்பது (30) சேவை ஆளணியினரை வாடகைக்கு வழங்குவதற்கான சேவை வழங்குநரைத் தெரிவு செய்தல்’’** எனக் குறிப்பிட்டு 2024-02-21ஆம் திகதி பி.ப. 1.00 மணி அல்லது அதற்கு முன் தலைமை அலுவலகத்தின் 2ஆம் மாடியில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

விலைமனுக்கள் 2024-02-21ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் அதன் பின் சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் 2ஆம் மாடி பெறுகைப் பிரிவில் மூடப்பட்டு உடன் திறக்கப்படும்.

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் 2ஆம் மாடியிலுள்ள பணிப்பாளர் சபை அறையில் 2024-02-07ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு இடம்பெறும்.

எந்தக் காரணத்தைக் காட்டாமல் எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை திணைக்கள பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் எந்தவொரு விலைமனுவையும் தயாரித்தல் தொடர்பிலான நேரடியான அல்லது மறைமுகமான எவ்விதமான செலவையும் மீள்செலுத்தும் பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இது தொடர்பில் திணைக்களப் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

மேலதிக விபரங்களை பெறுகை முகாமையாளரைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 011-2887585, தொலைநகல்: 0112880564)

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்,**
**இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொஸ்வத்த, பத்தரமுல்ல.**

**‘‘அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்போம்’’**



## INVITATION FOR BIDS (IFB)

**THUNUKKAI PRADESHIYA SABHA, MULLAITIVU DISTRICT**
**LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT (LDSP) - LOAN NUMBER: P163305**

1) The Democratic Socialist Republic of Sri Lanka has received a loan from the World Bank (WB) towards the cost of Local Development Support Project (LDSP), and intends to apply part of the proceeds of this loan to payments under the Contract for **Renovation of Office (Thunukkai PS) Building at Thunukkai.**

2) The Chairman, Local Authority Procurement Committee (LAPC) on behalf of the Thunukkai Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for **Renovation of Office (Thunukkai PS Building at Thunukkai** as described below.

| No | Contract No | Contract Name | Tentative Est. Cost (Rs.Mn) | Required Min. CIDA Grade & Specialty | Contract Period (Days) | Bid Security Amount (Rs) | Bid Validity Period | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/MU /TNKPS/2024 /PT-III-02 | Renovation of Office (Thunukkai PS) Building at Thunukkai | 5.68 | C7 or above Building Construction | 84 | 100,000.00 | 12.05.2024 | 09.06.2024 |

3) Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** procedure.

4) To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty mentioned in Schedule for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).

5) Qualification requirements are indicated in Section 5 (Bidding Data and Contract Data) of the Bidding document.

6) Interested bidders may obtain further information from **Secretary, Thunukkai Pradeshiya Sabha,Thunukkai, Mullaitivu.**(T.P No: 0212284532, Fax No: 0212283478) and inspect the bidding documents at the address given below from **30th January 2024** until **25th February 2024** during **09:00**Hrs to **15:00**Hrs on normal working days.

7) A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Thunukkai Pradeshiya Sabha, Thunukkai, Mullaitivu.** from **30th January 2024** until **25th February 2024** during **09:00**Hrs to **15:00**Hrs on normal working days upon payment of a non-refundable fee of Three Thousand Rupees (Rs.3,000.00). The method of payment will be by cash.

8) Bids shall be delivered in duplicate to the address below at **Chairman, Local Authority Procurement Committee, Thunukkai Pradeshiya Sabha, Thunukkai, Mullaitivu.**on or before**14.00**Hrs on **26th February 2024** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

9) A pre-bid meeting will be held on **13rd February 2024** at 11.00 Hrs in **ThunukkaiPradeshiya Sabha,Thunukkai, Mullaitivu.**

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC)**
**Thunukkai Pradeshiya Sabha,**
**Thunukkai, Mullaitivu.**
**30.01.2024**

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் தை மாதம் 16ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரஜப் பிறை 18

### குறள் தரும் சிந்தனை



பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்

மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்பொறிகளையும் கட்டுப்படுத்திய தூயவனின் உண்மையான ஒழுக்கமுடைய நெறியைப் பின்பற்றி நிற்பவர்களின் புகழ்வாழ்வு நிலையானதாக அமையும்.

## அதிகரித்த வேகத்தினால் தினமும் பரிதாப மரணங்கள்!

நாட்டில் வாகனப் போக்குவரத்து விபத்துக்கள் பெரிதும் அதிகரித்துள்ளன. இவ்விபத்துகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இருந்த போதிலும் விபத்துக்கள் குறிப்பிடத்தக்களவில் குறைந்தபாடிலில்லை.

நாட்டில் அண்மையில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மரணத்திற்கும் அவர் பயணித்த வாகனம் அதிக வேகத்தில் செலுத்தப்பட்டதே காரணம் என பொலிஸ் விசாரணைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.

அதேபோன்று அண்மையில் கிளிநொச்சியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரு பெண்மணி உயிரிழக்கவும், 8 பேர் கடும் காயங்களுக்கு உள்ளாகவும் அதிக வேகத்தில் பஸ் வண்டியை செலுத்தியமையே காரணம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த விபத்தின் போது எட்டு மாடுகளும் கூட கொல்லப்பட்டன.

இதேவேளை நாட்டிலுள்ள அதிவேக நெடுஞ்சாலைகளில் இடம்பெறுகின்ற விபத்துக்களிலும் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கின்றது.

இவ்வாறு நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் பதிவாகும் வீதிப் போக்குவரத்து வாகன விபத்துக்களுக்கு அதிகரித்த வேகமே மூலகாரணமாக அமைந்திருக்கின்றது.

அந்த வகையில், சுகாதார அமைச்சின் தொற்றா நோய்கள் பிரிவின் விபத்து தடுப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் தலைவர் டொக்டர் சமிதா சிறிதுங்க குறிப்பிடுகையில், 'நேரத்தை மீதப்படுத்துவதனைக் கருத்தில் கொண்டு அதிக வேகமாக வாகனம் செலுத்துவதால்தான் அதிவேக நெடுஞ்சாலைகளிலும் விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. பாதுகாப்பற்ற முறையில் வாகனங்களைச் செலுத்துவதே இந்த விபத்துக்களுக்குக் காரணம்' என்றுள்ளதோடு, 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிவேக நெடுஞ்சாலைகளில் வீதிப் போக்குவரத்து வாகன விபத்துக்கள் ஒப்பீட்டளவில் அதிகரித்திருப்பதனை எம்மால் அவதானிக்க முடிகிறது. எனவே, அதிவேக வீதிகளில் விபத்துக்களை தவிர்ப்பதற்காக அனைவரும் கவனம் செலுத்த வேண்டும்' எனவும் கூறியுள்ளார்.

உண்மையில் பெரும்பாலான வீதிப் போக்குவரத்து வாகன விபத்துக்களுக்கு அதிகரித்த வேகமே பங்களிக்கிறது. இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை என்பதுதான் வீதிப் போக்குவரத்து பொலிஸாரின் கருத்தாகும். அதனால் வீதிப் போக்குவரத்து சட்டங்களை மதித்து செயற்படுவதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அதற்கான பொறுப்பு சாரதிக்குரியதாகும். இவர்கள் அதிக வேகத்தில் வாகனங்களைச் செலுத்துவதால் தங்களது உயிருக்கு மாத்திரமல்லாமல், வாகனத்தில் பயணிக்கும் ஏனையவர்களின் உயிர்களுக்கும் ஆபத்தை ஏற்படுத்தி விடுகின்றனர்.

இந்த வகையில் நாளொன்றுக்கு 7, 8 வாகன விபத்து மரணங்கள் பதிவாகின்றன. இலங்கையில் இடம்பெறுகின்ற மரணங்களில் நான்கில் ஒரு பகுதி மரணங்கள் வீதி விபத்துக்கள் காரணமாகவே இடம்பெறுகின்றன என்று பொலிஸ் திணைக்களத்தின் போக்குவரத்துப் பிரிவினர் தெரிவித்திருக்கின்றனர். நாட்டில் நாளொன்றுக்கு பல்லாயிரம் மரணங்கள் பதிவாகின்றன. அவற்றில் நான்கிலொரு பகுதி மரணங்கள் வீதி வாகனப் போக்குவரத்து விபத்து மரணங்களாகும். ஒவ்வொரு மூன்று மணித்தியாலயத்திற்கும் 10 வீதி விபத்துக்கள் இடம்பெறுகின்ற அதேநேரம், அவற்றில் குறைந்தது ஒரு மரணமாவது நேருகின்றது. இந்த விபத்துகளுக்கு வீதிப் போக்குவரத்து சட்டங்களை மதிக்காமல் வாகனங்களை செலுத்துவதும் ஒரு முக்கிய காரணமாகும்.

இந்நிலையில்தான் வீதிப் போக்குவரத்து சட்டங்களை பொருட்படுத்தாது செயற்படும் சாரதிகளைக் கண்டுபிடித்து சட்ட ரீதியிலான நடவடிக்கைகளை முன்னெடுக்கவென சி.சி.ரி.வி கமெரா கட்டமைப்புக்ளைப் பயன்படுத்தும் முறைமையை பொலிஸார் அறிமுகப்படுத்தியுள்ளனர். இதன் ஊடாக போக்குவரத்து விதிகளை மீறுபவர்களுக்கு அபராதம் விதிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும். அதற்கான அபராத ஆவணம் சாரதியின் இல்லத்திற்கே அனுப்பி வைக்கப்படும். அதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்விதமான விபத்துக்களைக் குறைத்துக் கட்டுப்படுத்துவதை இலக்காகக் கொண்டு இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு இருக்கின்றது. ஆனால் சில தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கங்கள் இம்முறைமைக்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றன.

சாரதிகளை வீதிப் போக்குவரத்து சட்டங்களை மதித்து செயற்படச் செய்து விபத்துக்களை குறைத்து கட்டுப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றாகும். இவ்வாறான ஏற்பாடுகள் உலகின் பல நாடுகளிலும் அமுலில் இருக்கின்றன. ஆனால் இந்நாட்டில் இவ்வேற்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் சாரதிகள் மிகவும் பொறுப்புடனும் முன்னவதானத்துடனும் வாகனங்களைச் செலுத்தும் போது வாகன விபத்துக்களைப் பெரிதும் குறைத்துக் கொள்ளலாம். அதுவே அனைத்துத் தரப்பினரதும் தேவையும் எதிர்பார்ப்பும் ஆகும். அதற்கு ஏற்ப செயற்படுவது வாகன சாரதிகளின் பொறுப்பு ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# கடற்றொழிலாளரின் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு பெற்றுக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை

அதற்கான வாக்குறுதியை ஜனாதிபதி தனக்கு வழங்கியுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

**வெல்லமங்கரவில் கடற்றொழிலாளர் நல வலுவூட்டல் நிகழ்வு**

ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் கடற்றொழிலாளர்கள் முகங்கொடுத்துவரும் முக்கிய பிரச்சினைகளான எரிபொருள், மீன் இறக்குமதி மற்றும் கடற்றொழில் உபகரணங்களின் விலை அதிகரிப்பு உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வைப் பெற்றுத் தருமெனவும், அதற்கான வாக்குறுதியை ஜனாதிபதி தனக்கு வழங்கியிருப்பதாகவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடந்த 26.01.2024 ஆம் திகதி வெல்லமங்கரவில் இடம்பெற்ற கடற்றொழிலாளர் நலவலுவூட்டல் நிகழ்வில் கடற்றொழிலாளர்களுக்கு முதலுதவி மற்றும் மருத்துவச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறுதெரிவித்தார்.





இந்நிகழ்வில்அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்ததாவது:

இவ்வருடம் கடற்றொழிலாளர்களின் நலன் கருதிஅரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் பாரிய திட்டம் கடற்றொழிலாளர் நலவூட்டல் திட்டமாகும். கடந்த காலங்களில் கடற்றொழிலாளர்கள் கடலில் தொழில் செய்யும் போது, அவர்கள் திடீரென நோய்வாய்ப்பட்டால் எவ்வாறு அவர்களுக்கு சிகிச்சை வழங்குவது எனும் பிரச்சினை முக்கிய பிரச்சினையாக இருந்து வந்தது.

அதனால் கடலில் நோய்வாய்ப்படும் மீனவர்கள் பலர் மீன்பிடிப் படகுகளில் மரணமடைந்த சம்பவங்களும் கடந்த காலங்களில் பதிவாகியுள்ளன. ஒருசில மீனவர்கள் நோய்வாய்ப்படும் போது அவர்கள் தொழில் புரியும் பகுதிகளுக்கு சமீபமாகவுள்ள நாடுகளின் உதவி பெற்றுக் கொள்ளப்பட்டது. ஒருசில நேரங்களில் இலங்கை கடற்படையின் உதவியுடன் அவர்கள் கரைக்கு அழைத்து வரப்பட்ட போதும் அதற்காக பெருமளவு பணம் செலவாகியது. இப்பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காகவே இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இதற்காக கடற்றொழிலார்கள்வசிக்கும்பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளின் உதவி பெற்றுக் கொள்ளப்படும்.

கடற்றொழிலாளர்கள் முகங்கொடுத்து வரும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தினால் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தை வகுப்பதில் முக்கிய பங்கு வகித்த கடற்றொழில் அமைச்சு, கடற்றொழில் திணைக்களம், இலங்கை கடற்படை மற்றும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண, இத்திட்டத்தை துரிதமாக அமுல்படுத்துவதற்கு பங்களிப்பு வழங்கிய அதிகாரிகள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்".

இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கடற்றொழில் இராஜாங்கஅமைச்சர் பியல் நிசாந்த உரையாற்றுகையில் "உலகளாவிய ரீதியில் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதால் கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அதனால் இன்று தொடக்கி வைக்கப்பட்டுள்ள கடற்றொழில் நலவலுவூட்டல் திட்டம் கடற்றொழிலாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். நாடெங்குமுள்ள 24 வைத்தியசாலைகளில் இத்திட்டம் இன்றுமுதல் அமுல்படுத்தப்படும். மாதக் கணக்கில் கடலில் தொழில் புரியும் ஆழ்கடல் மீனவர்களுக்கு முதலுதவிக்குத் தேவையான மருந்து உள்ளிட்ட பொருட்களை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது" எனத் தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் பயிற்சிகளை நிறைவு செய்த கடற்றொழிலாளர்களுக்கு சான்றிதழ் மற்றும் மருத்துவச் சான்றிதழ்கள் அமைச்சர் மற்றும் இராஜாங்கஅமைச்சரினால் வழங்கப்பட்டன.

கடற்றொழில் அமைச்சின் செயலாளர் செல்வி நயனாகுமாரி சோமரத்ன, கடற்றொழில் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த ,சுகாதார திணைக்கள தொற்றாநோய்ப்பிரிவின் பணிப்பாளர் டொக்டர் திருமதி சம்பிகா விக்கிரம ஆராச்சி, இலங்கை கடற்படை மருத்துவப் பிரிவின் மருத்துவர் தினேஷ் ஆரியதேவ, இலங்கை கடற்றொழில் துறைமுகக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சத்தியநாதன்,வடமேல்மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எர்வின் பெர்னாண்டோ உள்ளிட்ட பலர் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.





# கனடா சர்வதேச வர்த்தகக் கண்காட்சி, வியாபார முதலீட்டாளர்கள் மாநாடு

**கொழும்பில் ஆரம்ப நிகழ்வு, கலந்துரையாடல்**

கனடா சர்வதேச வர்த்தகக் கண்காட்சி, வியாபார மற்றும் முதலீட்டாளர்கள் மாநாடு_ 2024 இற்கான ஆரம்ப நிகழ்வும் வர்த்தக மற்றும் பாரிய சிறுகைத்தொழில் முயற்சியாளர்களுடனான கலந்துரையாடலும் அண்மையில் கொழும்பு_ 7 ஜெட்வின் ஹோட்டலில் நடைபெற்றன.

இலங்கையில் உள்ள கொமன்வெல்த் ஐகொனிக் சம்மேளனம் மற்றும் சர்வதேச வர்த்த இணைப்பாளர் கூட்டிணைப்பு ஆகியன ஒன்றிணைந்து மேற்படி நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தன.

கொமன்வெல்த் ஐகொனிக் சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி அம்ரி நிசாம் மற்றும் சர்வதேச வர்த்தக இணைப்பாளர் கூட்டிணைப்பின் பணிப்பாளர் தன்வீர் ஆர். எம் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிங்கப்பூர் வர்த்தக போரத்தின் ஆளுநர் கலாநிதி சிந்தியா சாங் விசேட அதிதியாகக் கலந்து கொண்டார்.

மேற்படி நிகழ்வில் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இங்கு சர்வதேச வர்த்த இணைப்பாளர் கூட்டிணைப்பின் பணிப்பாளர் தன்வீர் ஆர். எம் கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையின் பொருளாதாரம் மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரம் ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் எமது அமைப்பு பல்வேறு வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளது. குறிப்பாக பாரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழிலாளர்களின் உற்பத்தி மற்றும் சேவைகளை சர்வதேச சந்தையில் அறிமுகப்படுத்த சிறந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க உள்ளோம்.



இதனூடாக இலங்கைக்கு அந்நிய செலாவணியைப் பெற்றுக் கொள்ள முடியுமென்பதுடன் சர்வதேச வர்த்தகத்தை மேம்படுத்தவும் முடியும். திறந்த பொருளாதாரக் கொள்கையின் ஊடாகவே நாட்டின் பொருளாதாரம் துரித வளர்ச்சியடையும் என்பதுடன் இலங்கையிலுள்ள முன்னணி வர்த்தகர்கள் போட்டிச் சந்தைக்கு முகம்கொடுக்கக் கூடியதாகவும் இருக்கும்" என்றார்.

இந்நிகழ்வுக்கு இலங்கையின் சகல பிரதேசங்களில் இருந்தும் முயற்சியாளர்கள் வருகை தந்திருந்ததுடன், சிறுமுயற்சியாளர்கள் தங்கள் உற்பத்தி மற்றும் சேவைகளை அறிமுகம் செய்தமையும் குறிப்பிடத்தக்கது.





# ராணி சீதரன் எழுதிய நூல் அறிமுக விழா



அன்பின் பாதை எண்ணம்போல் வாழ்க்கை' கலை இலக்கிய மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ராணி சீதரனின் 'கடவுள்தான் அனுப்பினாரா' என்ற நூல் அறிமுக விழா திருகோணமலை நகராட்சி மன்ற பொதுநூலக கேட்போர் கூடத்தில் சமீபத்தில் நடைபெற்றது.





'அன்பின் பாதை எண்ணம்போல் வாழ்க்கை' கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் கனக. தீபகாந்தன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவுக்கு பிரதம அதிதியாக ஓய்வுபெற்ற அதிபர் சிரேஷ்ட ஊடகவியலாளர் திருமலை நவம் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

சிறப்பு அதிதிகளாக வைத்தியலிங்கம் ஜெயச்சந்திரன், சிரேஷ்ட சட்டத்தரணி சுபாசினி சித்திரவேலு, இலங்கை மத்திய வங்கியின் கிழக்கு மாகாண பிராந்திய முகாமையாளர் க.பிரபாகரன், கணக்காளர் தயாளலிங்கம் பிரசாதனன் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நூலின் அறிமுகம் மற்றும் நயவுரையை எழுத்தாளர் தில்லைநாதன் பவித்திரன், நன்றியுரையை அன்பின் பாதை றொசில்டா அன்டன் ஆகியோர் நிகழ்த்தினர். இந்நிகழ்வில் எழுத்தாளர்கள், கவிஞர்கள், பிரமுகர்கள் என பல நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டதுடன், அதிதிகள் சமகால ஆக்கபூர்வமான கருத்துக்களையும் தெளிவுரைகளையும் வழங்கியிருந்தனர்.

எம்.எப். நவாஸ்
(திராய்க்கேணி தினகரன் நிருபர்)

# உலக துறவியர் தினம்

## பெப்ரவரி 2 ஆம் திகதி திருச்சபை சிறப்பிக்கின்றது




"துறவிகள் இல்லாத உலகத்தையோ திரு அவையையோ நினைத்துப்பார்க்க முடியாது" – திருத்தந்தை பிரான்ஸிஸ்

திருத்தந்தை புனித 2ம் ஜோன் போல் அவர்கள், 1997ம் ஆண்டில் அர்ப்பணிக்கப்பட்ட துறவியருக்கான உலக தினத்தை உருவாக்கினார்.

இல்லறம் தவிர்த்து, இறையோடு மகிழ்ந்து, தனிமையில் நிலைத்து, தபத்தில் சிறந்து, துறவை தூய்மையாக போற்றியவர்கள் துறவிகள்.

துறவு என்பது ஆசையைத் தவிர்த்து அன்பை விதைத்து அன்போடு பயணிப்பதே. ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி 2 ஆம் திகதி அதாவது, இயேசு பிறப்பின் 40ஆவது நாள் கோவிலில் காணிக்கையாக அவர் அர்ப்பணிக்கப்பட்ட நாளன்று அர்ப்பணிக்கப்பட்ட துறவிகளின் உலக நாளை திருச்சபை சிறப்பிக்கின்றது.

அதன்படி வரும் பெப்ரவரி 2 வெள்ளிக்கிழமை 27ஆவது ஆண்டு அர்ப்பணிக்கப்பட்ட துறவியருக்கான உலக நாள் சிறப்பிக்கப்படவு ள்ளது.

ஏழ்மை, கற்பு, கீழ்ப்படிதல் என்னும் வார்த்தைப்பாடுகளை ஏற்று தங்களையே இறைவனுக்கு அர்ப்பணித்த, ஆண் பெண் துறவிகளின் வாழ்க்கை அழகையும் அதன் தாக்கத்தையும் உலக மக்களுக்கு அடையாளப்படுத்துவதற்காகவே இந் நாளானது கொண்டாடப்படுகின்றது.

இயேசு கோவிலில் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட அன்னை மரியாவிற்கான தூய்மைச்சடங்கு என்று சிறப்பிக்கப்படும் இந்த நாளில் மெழுகுதிரிகள் ஆசீர்வதிக்கப்படுகின்றன.

மெழுகுதிரிகள் தியாகத்தின் அடையாளம். தன்னையே உருக்கி உலகிற்கு ஒளி கொடுக்கும் திரிகள், குடும்பத்திற்காக சமூக முன்னேற்றத்திற்காக என்று தன்னையே அர்ப்பணித்து வாழும் மனிதர்களுக்கு அடையாளமாக குறிப்பிடப்படுகின்றன.

மேலும் தியாகத்தின் இலக்கணமாய் தன்னையும் தன் வாழ்வையும் இறைத் திருவுளத்திற்காக அர்ப்பணித்து, உலகின் ஒளியாகத் திகழும் இயேசுவையும் அடையாளப்படுத்துகின்றன. இயேசுவைப் பின்பற்றி அவர்பணி செய்ய தங்களையே அர்ப்பணித்திருக்கும் துறவிகளும், உலகின் ஒளியான இயேசுவின் ஒளியைப் பிரதிபலிக்கக்கூடியவர்களாக வாழவும் இந்த மெழுகுதிரியானது அர்ச்சிக்கப்பட்டு வழங்கப்படுகின்றது.

அர்ப்பணிக்கப்பட்ட துறவிகளின் மறைபணி வாழ்க்கையானது திருஅவையின் நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் என்றும் இந்த சிறப்பானது துறவற அழைத்தலைப் பெற்றவர்கள் மட்டுமன்றி முழு கிறிஸ்தவ சமூகத்திற்குமானது என்றும்





திருத்தந்தை புனித 2ஆம் ஜோன் போல் இந்நாள் தொடர்பில் எடுத்துரைக்கின்றார்.

துறவிகள் அழைத்தல் என்னும் கடவுளின் அற்புதமான பரிசிற்காக நன்றி தெரிவிக்கும் இந்த நாளில் கடவுளை மிகவும் உறுதியாக ஆராதித்தல், அழைத்தல் என்னும் உயரிய கொடைக்காக நன்றி தெரிவித்தல் என்பதனை அதிகதிகமாக வலியுறுத்துகின்றார் புனித இரண்டாம் ஜோன் போல்.

உலக மக்கள் அனைவரும் அர்ப்பணிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை பற்றிய அறிவையும் அவர்கள் வாழ்வின் மதிப்பையும் நன்று அறிந்து ஊக்குவிக்கவேண்டும். அர்ப்பணிக்கப்பட்ட துறவிகள், இறைவன் தங்களுக்குச் செய்த அற்புதங்களை எல்லாம் நினைத்துக் கொண்டாடி மகிழ வேண்டும்.

தூய ஆவியால் பரவிய தெய்வீக அழகின் கதிர்களை தங்களின் வாழ்க்கை முறைகளில் ஒளிரும் நம்பிக்கையால் கண்டறியவும் மேலும் பல அற்புதங்களைப் பெறவும் துறவிகள் அழைக்கப்படுகின்றார்கள். இதன் வழியாக திருஅவையிலும், உலகிலும் அவர்களின் ஈடுசெய்ய முடியாத பணியின் தெளிவான உணர்வானது வெளிப்படுகின்றது.

திருப்பீட துறவியர் பேராயத் தலைவர் கர்தினால் Braz de Aviz அவர்கள் துறவிகள் தங்களையே மற்றவருக்கு வழங்காதபோது, அவர்கள் தங்கள் வாழ்வில் தளர்ச்சியை அனுபவிக்கின்றனர். இவ்வுலகின் கடினமான சூழல்கள் மத்தியில் துறவியரின் வாழ்வு சாட்சியம் பகரக்கூடியதாய் அமைய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

அர்ப்பணிக்கப்பட்ட துறவிகள் இல்லாத உலகத்தையோ, திரு அவையையோ நினைத்துப் பார்க்க முடியாது. ஏனெனில் நீதியும் அமைதியும் நிறைந்த சமூகத்தின் வளர்ச்சிக்கும், இளையோரோடும் ஏழைகளோடும் இறைவாக்கைப் பகிர்ந்து கொள்வதிலும் துறவிகள் புளிக்காரமாய் உள்ளனர் என்று வலியுறுத்துகின்றார் திருத்தந்தை பிரான்ஸிஸ்.

மெரினா ராஜ்

## கல்லடி டச்பார் புனித அந்தோனியார் ஆலய திருவிழா






மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் கல்லடி டச்பார் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா அணமையில் இடமபெற்றது. செங்கலடி மறைக்கோட்ட முதல்வர் ஏ.தேவதாசன் அடிகளார் தலைமையில்திருவிழா கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.அருட்தந்தை கிறைட்டன் அவுஸ்கோன் மற்றும் இயேசு சபைத்துறவிகளான ஜோன் ஜோசப்மோரி, சு.றொசான், அனிஸ்டன் மொறாயஸ் அடிகளார் உள்ளிட்ட அருட்தந்தையர்கள், அருட்சகோதரர் லியோ காண், அருட்சகோதரிகள்ளன அதிகளவிலானோர் திருவிழா திருப்பலியில் கலந்து கொண்டனர்.

(படம்: கல்லடி குறூப் நிருபர்)

### இவ்வார புனிதர்

# புனித பிரிஜட்



புனித பிரிஜட்அயர்லாந்தின் பாதுகாவலர்களுள் ஒருவர் ஆவார். பிரிஜட் நிஜமாகவே ஒரு மனிதர்தானா என்ற விவாதமும் உண்டு. பிரிஜட் எனும் "செல்டிக்" பெண் தெய்வத்துக்கும் இவருக்குமுள்ள பெயர் நினைவுத் திருநாள் தினம், இயற்கை நிகழ்வுகள், புனைவுகள் மற்றும் அவரது தொடர்புடைய நாட்டுப்புறப் பண்பாடுகள் ஆகியன இருவரும் ஒருவர்தானா என்ற விவாதத்தை எப்போதுமே முன்னிறுத்துகின்றன.அறிஞர்களோ, அவர் செல்டிக் பெண் தெய்வத்தின் பண்புகளைக் கொண்ட சாதாரண பெண்தான் என்று கூறுகின்றனர். அவரது வாழ்க்கையின் நம்பகத்தன்மையைப் பற்றிய ஏற்கனவே இருந்த பழம்பெரும் தரமான மாறுபட்ட மற்றும் முரண்பாடு கொண்ட வரலாறு காரணமாக மதச்சார்பற்ற மற்றும் கிறிஸ்தவ அறிஞர்களிடையே எப்போதுமே விவாதங்கள் நிகழ்ந்து வந்துள்ளன. ஆரம்பத்திலிருந்தே பிரிஜட் பரிசுத்தமானவராக இருந்தார். அவரை வாங்கிய பாதிரியார் அவருக்கு உணவு கொடுக்க முயலும்போதெல்லாம் அவர் பாதிரியின் அசுத்தம் காரணமாக வாந்தி எடுத்தார் என்பர். ஆனால், அப்போதெல்லாம் செந்நிற காதுகளைக் கொண்ட ஒரு வெண்ணிற பசு வந்து அதிசயமாக அவரை இரட்சித்தது என்பர். அவர் வளர்கையிலேயே பல அதிசயங்களை நிகழ்த்தினார்.

நோயுற்றோரின் நோய் நீக்கினார். ஏழைகளுக்கு உணவிட்டார். ஒருமுறை தமது தாய் வைத்திருந்த வெண்ணெய் முழுதும் எடுத்து அவர் ஏழைகளுக்கு கொடுத்தார். ஆனால், அவரது செபத்தின் பயனாக, காலி செய்யப்பட்ட வெண்ணெய் மீண்டும் நிரப்பப்பட்டதாக கூறுகிறார்கள். பத்து வயதான பிரிஜிட்ஒரு வீட்டு வேலைக்கார பெண்ணாக தமது தந்தையின் வீட்டுக்கே சென்றார். அவரது தாராள தொண்டுள்ளமானது, இல்லையென்று கேட்பவர்களுக்கு தனது தந்தையின் பொருட்களை வழங்கினார். சுமார் 480ம் ஆண்டுபிரிஜட் தமது ஏழு உதவியாளர் பெண்களுடன் இணைந்து கில்டேர் நகரில் ஒரு துறவு மடத்தினை நிறுவினார். அது அங்கே அவர்களால் ஒரு நித்திய சுடர் எரிய காரணமானது. அவர் ஆண்களுக்கான ஒரு துறவு மடமும், பெண்களுக்கான ஒரு துறவு மடமும் நிறுவினார்.

பிரிஜட்டின் சிறு வாக்குவன்மைகில் டேர் நகரை ஒரு ஆன்மிகம் மற்றும் கற்பதற்கான ஒரு மையமாக மாற்றியது. அத்துடன் ஒரு ஆலயங்களின் நகராக உருவெடுத்தது. அவர் உலோக வேலைகள் மற்றும் ஒளியமைக்கும் பணிகள் உள்ளிட்ட கலைப் பள்ளியொன்றையும் நிறுவி நடத்தினார்.

# இயேசுவுக்கும் இருளின் சக்திக்கும் இடையிலான கடுமையான போராட்டம்

## ஞாயிறு நற்செய்தி தரும் சிந்தனை

இறைமகனாக உலகில் வலம் வந்த போதிலும் அடிப்படையில் இயேசு இறைவாக்கினராகவே செயல்பட்டார். தூய ஆவியின் வல்லமை நிறைந்தவராய், ஆற்றல்மிக்க அதிகாரம் உள்ளவராகப் போதித்தார். மனிதனின் அதிகாரம் குறுகியது. கடவுளின் அதிகாரம் பரந்தது.

நிலம் அளக்கும் அரசு ஊழியர் ஒருவர் ஒரு குடியானவரின் நிலத்துக்கு உரிய ஆவணங்களுடன் சென்றார். உறுதியான வேலிகளால் பாதுகாக்கப்பட்டிருந்த நிலத்துக்கு வெளியே நின்றுகொண்டு வழியைத் திறக்கும்படி உரக்கக் கத்தினார். சில நிமிடங்களுக்குப் பின் ஒரு மனிதன் வருவதைக் கண்டு அவனிடம் கடுமையாகப் பேசினார்.

அந்த மனிதனோ சற்றும் பதற்றமின்றி அமைதியாகக் கதவைச் சாத்திவிட்டுப் போய்க்கொண்டே இருந்தார். அதைக் கண்ட அதிகாரி, “உனக்கு எவ்வளவு திமிர்? நான் நினைத்தால் உன் நிலத்தின் அளவையே மாற்றி அமைத்து விடுவேன்” என்றார் கோபமாக.

அதற்கு அந்த மனிதன், “ஐயா, எனக்கு கன்னற்கையல்ல கூட நிலமில்லை. அப்படி இருக்க உம்மால் என்ன செய்ய முடியும்?” என்று சொல்லிவிட்டுத் தன் வழியே போகலானான்.

ஆத்திரமடைந்த அரசு அலுவலர் இன்னும் அந்த இடத்திலேயே நின்று கொண்டு நிலத்தின் உரிமையாளரை கூவி அழைத்தார். அவர் வந்ததும் “உன் நிலத்தை நான் அளந்து பார்கக வேண்டும். வாசலைத் திறந்துவிடு” என்றான். அவன் உள்ளே விட மறுக்கவே தன் அடையாள அட்டையைக் காட்டி அந்தக் குடியானவனை சிறையில் தள்ளித் தண்டிக்கக்கூடத் தன்னால் முடியும் என்று கூறி மிரட்டினான்.

கொஞ்சம் பயந்துவிட்ட குடியானவன் கதவைத் திறந்துவிடவே அந்த அதிகாரி பயிர் நன்கு விளைந்த இடத்தில்



கட்டிலைப் போடச் சொல்லி அதில் அமர்ந்து கொண்டான். குடியானவனுக்குச் சொல்ல முடியாத கோபம். அதனால் தன் தொழுவத்திலிருந்த முரட்டுக் காளையை அவிழ்த்து அதிகாரியின் பக்கமாக ஓட்டிவிட்டான். பயந்து போன அதிகாரி காளையைத் தடுத்து நிறுத்துமாறு கெஞ்சினான். அப்போது அந்த குடியானவன், “உனது அடையாள அட்டையையும் அரசு ஆணையையும் அதிகாரத்தையும் அந்தக் காளையிடம் காட்டு” என்றான். அதிகாரம், ஏற்றிருக்கும் பதவியிலா? இல்லை.

கடந்த ஞாயிறு நற்செய்தி இயேசுவுக்கும் சாத்தானுக்குமிடேயே ஏதோ மற்போரே நடப்பது போன்ற பிரமிப்பை ஏற்படுத்துகிறது. விவிலிய அறிஞர்களின் கூற்றுப்படி, இயேசுவின் வரலாற்றை நற்சய்தியாளர் மாற்கு இயேசுவுக்கும் சாத்தானுக்கும் இடையே நடக்கும் ஒரு பெரும் பிரபஞ்ச யுத்தமாகவே சித்தரிக்கிறார்.

சில எடுத்துககாட்டுக்கள் : மாற்கு 1 : 1213 பாலைவனச் சோதனை, 1:3234 பல பேய்கள் விரட்டப்படுகின்றன, 3:30 பெயல் சேபூல் சர்ச்சை, 5:120 இலேகியோன் என்ற பேய்ப்பட்டாளம், 7:2430 பேயின் பிடியிலிருந்து சிறுமி விடுதலை, 6:7 சீடர்களுக்கு பேய்கள் மீது அதிகாரம், 16:17 தன் மீது நம்பிக்கை கொள்வோர் பேய்களை ஓட்ட முடியும் என்ற உறுதிப்பாடு, ...

இவ்வாறு இயேசுவுக்கும் இருளின் சக்திக்கும் இடையே ஒரு கடுமையான போராட்டமே மாற்கு எழுதிய நற்செய்தியின் மையச் சரடாகும்.

அருட்திரு லூர்துராஜ்

# கடுவெல, அத்துருகிரிய பகுதிகளில் போக்குவரத்து நெரிசல்களை குறைக்க வீதி அபிவிருத்திகள்

கடுவெல மற்றும் அத்துருகிரிய நகரங்களில் போக்குவரத்து நெரிசலை தடுக்கும் வகையில் விரைவான வீதி அபிவிருத்தி வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர்.கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

போக்குவரத்தை மையமாகக் கொண்ட அத்துருகிரிய மற்றும் கடுவெல நகர அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிப்பது தொடர்பான இறுதிக் கலந்துரையாடல் கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி மேஜர் பிரதீப் உதுகொடவின் அழைப்பின் பேரில், போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தனவின் தலைமையில் கடுவெல மாநகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது

அத்துருகிரிய கடுவெல பிரதேசங்களில் மக்கள் நாளாந்தம் எதிர்கொள்ளும் போக்குவரத்து சிரமங்களை குறைப்பதற்கு எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் மற்றும் யோசனைகள் தொடர்பில் இங்கு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.



அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மேஜர் பிரதீப் உதுகொட மற்றும் ஏனைய அதிகாரிகள் அண்மையில் இந்த நகரங்களின் போக்குவரத்து நெரிசலை அவதானிப்பதற்காக அந்த பகுதிகளில் கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டனர்.இதனடிப்படையில்,

சுமார் 3 ஆண்டுகளாக முடங்கிக் கிடந்த உட்கட்டமைப்பு அபிவிருத்தி பணிகளை மீண்டும் தொடங்குவதற்கான பணிகள் ஆரம்பமாக உள்ளன.நிதி வசதிகளைப் பெற்று, இந்த அபிவிருத்தி பணிகளை மேற்கொள்வதன் முக்கியத்துவம் குறித்து அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அத்துருகிரிய பகுதியில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் நடவடிக்கையாக, தற்போதுள்ள பஸ் நிலையத்தை, மில்லேனியம் சிட்டி குடியிருப்புக்களை சுற்றியுள்ள பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்ட காலி நிலத்தில் அமைக்கவும், மக்களின் கோரிக்கையை கருத்தில் கொண்டு, சாலைகளை விரிவுபடுத்த அடையாளம் காணப்பட்ட இடங்களுக்கு நட்ட ஈடு வழங்கவும் நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் உத்தரவிட்டார்.

அத்துடன் நகரின் மத்தியில் தற்போதுள்ள மணிக்கூட்டு கோபுரத்தினால் போக்குவரத்துக்கு ஏற்படும் இடையூறுகளை தவிர்க்க மாற்று நடவடிக்கை எடுப்பது குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

# மகனின் துப்பாக்கி சூட்டில் தந்தை பலி

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

வேட்டையாடச் சென்ற மகனின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி தந்தை உயிரிழந்தார். இச்சம்பவம் மாவனல்லை காட்டுப் பிரதேசமொன்றில் நேற்று முன்தினம் (28) இரவு இடம் பெற்றுள்ளது. தந்தையும், மகனும் காட்டுக்கு வேட்டைக்குச் சென்ற சந்தர்ப்பத்தில் மகனின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகியே தந்தை பலியானார். மாவனல்லை ஜயலத்கந்த பிரதேசத்தை சேர்ந்த தந்தையும் மகனுமே வேட்டைக்குச் சென்றுள்ளனர்.

17 வயதுடைய மகன் விலங்கொன்றுக்கு இலக்கு வைத்து சுட்ட போது, அது தவறுதலாக தந்தையை தாக்கியது. இதில் படுகாயமுற்ற தந்தை பலியாகியுள்ளார். சந்தேகத்தின் பேரில் அவரது 17 வயதான மகன் கைது செய்யப்பட்டுள்ளார். மாவனல்லை பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# இன்றைய பலன்கள்

(30.01.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா

(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
முக்கியமான நண்பர்கள் சந்திக்க இயலாத காரணத்தால் சில காரியங்களில் தளர்வுகளை சந்திப்பீர்கள்.

**ரிஷபம் :**
செயல்களில் முன்னேற்றமான பலன்களை பெறுவீர்கள். நண்பர்களும் உறவினர்களும் உங்கள் முயற்சிக்கு உறுதுணையாக இருப்பார்கள்.

**மிதுனம்:**
எடுத்துக் கொண்ட செயல்கள் சிலவற்றில் மட்டும் அதிக முயற்சியினால் வெற்றி அடைவீர்கள். சில செயல்களில் தொடர்புகள் ஏற்படும்.

**கடகம்:**
நண்பர்கள் உதவியுடன் முயன்று சில செயல்களை வெற்றி பெறுவீர்கள். தனவரவுகள் திட்டமிட்டபடி வந்து சேர்ந்தாலும் செலவுகள் அதிகமாகலாம்.

**சிம்மம்:**
எதிர்பார்த்த செயல்களில் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். திட்டமிட்ட பண வரவு சிறிது தள்ளி போக நேரிடும்.

**கன்னி:**
செயல்கள் பலவற்றின் முயற்சியுடன் ஈடுபட்டு முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். பணவரவு திட்டமிட்டபடி வந்து சேரும்.

**துலாம்:**
செய்யும் செயல்கள் பலவற்றில் வெற்றிகரமான பலன்களை அடைவீர்கள். தளர்வடைந்த செயல்களை நண்பர்களின் உதவியோடு செய்து முன்னேற்றம் பெற முயற்சிப்பீர்கள்.

**விருச்சிகம்:**
முயற்சியோடு செய்யும் சில செயல்களில் முன்னேற்றமான போக்கை காண்பீர்கள். என்றாலும் சில காரியங்களில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்காமல் போகும்.

**தனுசு:**
எதிலும் அதிக கவனத்துடன் செயல்படுவது அவசியம். விலை உயர்ந்த பொருட்களை கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டும்.

**மகரம்:**
சில செயல்களில் எதிர்பாராத தளர்வுகள் உண்டாகக் கூடும். மிக முக்கியமான காரியங்களை கவனத்துடன் செய்வது நல்லது.

**கும்பம்:**
பண பரிவர்த்தனைகளை கவனத்துடன் செய்யுங்கள். நீண்ட காலமாக பிரிந்து இருந்த நண்பரை சந்திக்கும் வாய்ப்பு உண்டாகும்.

**மீனம்:**
பயணங்களை தவிர்ப்பதே நல்லது. தீவிர முயற்சியுடன் சில காரியங்களில் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள்.



ஓமான் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றி தற்போது நியூஸிலாந்து பல்கலைக்கழகத்துக்கு பதவியுயர்வு பெற்றுச் செல்லவுள்ள அக்கரைப்பற்றைச் சேர்ந்த பேராசிரியர் அப்துர் றஊப் அண்மையில் அக்கரைப்பற்று "அமான் ஸ்ரீலங்கா" அமைப்பினால் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். அமைப்பின் உயர் பீட உறுப்பினர்கள் பேராசிரியருக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்குவதைக் காணலாம்.

(பாலமுனை தினகரன் நிருபர்

# குருநாகல் மாநகரசபை புதிய ஆணையாளர் கடமை ஏற்பு



குருநாகல் மாநகர சபையின் புதிய ஆணையாளராக அஜந்த குணவர்த்தன கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

இப்புதிய பதவியை பொறுப்பேற்க முன்னர் அவர், குருநாகல் மாநகர பிரதி ஆணையாளராக பணியாற்றினார்.

குருநாகல் மாநகர ஆணையாளர் பதவி கடந்த காலங்களில் குருநாகலின் பழமை வாய்ந்த ராஜசபை பந்தல் இடிப்பு காரணமாக சர்ச்சைக்குரிய பதவியாக இருந்து வந்தது.

புதிய ஆணையாளராக அஜந்த குணவர்த்தன தனது கடமைகளை பொறுப்பேற்ற நிகழ்வின்போது, வடமேல் மாகாண பிரதம செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன, குருநாகல் மாவட்ட செயலாளர் ஆர்.எம்.எம்.ரத்நாயக்க, முன்னாள் மேயர் சுமேதா அருணசாந்த, முன்னாள் மாநகர சபை உறுப்பினர்களான மொய்னுதீன் அஸாருதீன், டிலான் லிவேரா, புத்திக அலேபொல, வருண பிரேமரத்ன, முன்னாள் குருநாகல் மாநகர ஆணையாளர் ஏ. அலோக பண்டார மற்றும் வடமேல் மாகாண சபை அமைச்சின் செயலாளர்களும் கலந்து கொண்டனர்.

# சுதந்திர தின நிகழ்வில் பங்கேற்க தாய்லாந்து பிரதமர் இலங்கை வருகை

தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிஸின் இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு, எதிர்வரும் பெப்ரவரி (03) நாட்டுக்கு வருகை தரவுள்ளதாக வெளி விவகார அமைச்சு தெரிவித்தது.

தாய்லாந்து பிரதமர் இலங்கையில் தங்கியுள்ள நாட்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன உள்ளிட்ட முக்கிய தரப்பினருடன் விசேட பேச்சு வார்த்தைகளை நடத்தவுள்ளதாகவும் வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரில் இலங்கை வரும் தாய்லாந்து பிரதமர் நாட்டின் 76 ஆவது சுதந்திர தின விழா நிகழ்வுகளில் பிரதம அதிதியாக பங்கேற்கவுள்ளதாக அமைச்சு தெரிவித்தது.

அத்துடன் இலங்கை தாய்லாந்துக்கிடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் நிகழ்விலும், அவர் பங்கேற்பாரென வெளி விவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## சோமாலியாவில் கடத்தப்பட்ட...

தற்போது படகு சீசெல்ஸில் உள்ள விக்டோரியா துறைமுகத்துக்கு எடுத்துச் செல்லப்படுவதாக வும் அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை கடற்படை தொடர்ந்தும் சோமாலிய கடறபடையுடன் தொடர்புகொண்டு நிலைமையை அவதானித்து வந்ததுடன், மீனவர்களை மீட்கும் நடவடிக்கையில் தொடந்தும் செயற்பட்டு வந்ததாகவும் இலங்கை கடற்படை தெரிவித்தது.

## வேகக்கட்டுப்பாட்டை இழந்த வேன்...

இரவு (28) பயணித்த வேன் ஒன்றே, இவ்வாறு கோர விபத்துக்குள்ளாகியது.

கதிர்காமம் நோக்கி பயணித்த வேன், பசரயாய என்ற சந்திக்கு அருகில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதிக்கருகில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளியது. பின்னர்,வீதியில் வந்துகொண்டிருந்த இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான பாரவூர்தியுடன் இந்த வேன் மோதி வீதியை விட்டு விலகி புளியமரத்தில் மோதியது. இந்த வேனில் ஆறு இளைஞர்கள் இருந் ததாகவும், அவர்களில் ஒருவர் பலத்த காயமடைந்து கதிர்காமம் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்துள்ளார். மற்றுமொருவர் ஹம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

## கைதான பல்கலைக்கழக...

போது ஏற்பட்ட மோதல் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு, மாணவர் குழுவினால் 1997 என்ற தொலைபேசி இலக்கம் மூலம் முறைப்பாடு செய்யப்பட்டது. இதையடுத்து அவர்கள் கைதுசெய்யப்பட்டு சமனலவெவ பொலிஸாரினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். இதனையடுத்து அவர்கள் 7 பேரும் பலாங்கொடை மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டனர். இந்நிலையில் நீதிமன்றமானது தலா ஒரு இலட்சம் ரூபா சரீரப்பிணையில் அவர்களை விடுதலை செய்துள்ளது.இவ்வாறு கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட மாணவர்கள் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானம் மற்றும் மொழித்துறையில் 4 ஆம் ஆண்டில் கல்வி கற்றவர்களாவர்.

## வங்குரோத்து நிலையிலிருந்து...

லெபனானிலும் அதே நிலைமைதான். எனினும், மிகக் குறுகிய காலத்தில் வங்குரோத்து நிலையிலிருந்து மீளும் நாடாக நமது நாடு மாறப்போகிறது.அடுத்த மாதம் மீண்டுவரும் பொருளாதாரம் கொண்ட நாடாக இலங்கையை சர்வதேச நாணய நிதியம் பிரகடனப்படுத்த வாய்ப்புள்ளது" என சேனாரத்ன தெரிவித்தார். 'நாம் வாழ்வதற்கு ஒரு நாடு வேண்டும். நான் நாட்டுக்கு ஆதரவான அரசியல் வாதி. உண்மையைப் பேச நாம் பயப்படக் கூடாது. சர்வதேச நாணய நிதியம் (IMF) தொடர்பான பிரச்சினைகள் வரும் போது நான், அரசியல் கட்சிகளின் நிறக் கண்ணாடியைப் பார்ப்பதில்லை. மக்களின் துன்பங்களை வைத்து அரசியல் செய்வது எனது கொள்கையல்ல.

சர்வதேச நாணய நிதியம் இலங்கையை வங்குரோத்து நிலையில்லாத நாடாக மிக விரைவில் பிரகடனம் செய்யும். இது, அரசியலுக்கு அப்பாற்பட்டு வெளியிடும் அறிக்கை எனவும் டொக்டர் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.

## குற்றமிழைத்த 610 சாரதிகள்...

610 சாரதிகள் இனங்காணப்பட்டுள்ளதாக போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முதற்கட்டமாக இவ்வாறு இனங்காணப்பட்ட நபர்களுக்கு தண்டனைப்பத்திரம் வழங்காது அவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள தாகவும் போக்குவரத்து பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும், பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் போக்குவரத்து செயற்பாடுகளின் போது, குற்றமிழைக்கும் சகல நபர்களும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு கடும் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவர்..

கடந்த 22 முதல் கொழும்பு நகருக்குள் வாகனங்களை செலுத்தும் போது குற்றமிழைப்போரை இனங்காண்பதற்காக விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு ள்ளது. அந்தவகையில் கொழும்பு நகரின் அனைத்துப் பிரதேசங்களிலும் 108 சிசிரிவி கமரா தொகுதிகள் பொருத்தப்பட்டுள்ளன.

அவ்வாறான நிலையில், பொலிஸாரால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய முறைமையின் மூலம், கொழும்பு நகரின் வீதி சட்டங்களை மீறும் ஏனைய பிரதேச நபர்களுக்கும் தண்டப்பத்திரம் வழங்கப்படுமென்றும் போக்குவரத்து பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## 89 பிரதேச செயலர்... (03ஆம் பக்க தொடர்ச்சி)

அமைச்சர் தெரிவித்துள்ளார். அந்த வகையில் கண்டி, மாத்தளை, நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, மாத்தறை, காலி, பதுளை, களுத்துறை, குருநாகலை ஆகிய மாவட்டங்களில் இந்த வேலைத் திட்டங்கள் நடைமுறைக்கு வர உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். இந்த வேலைத்திட்டங்களுக்காக கடல் மட்டத்திலிருந்து 200 மீற்றருக்கும் அதிகமான உயரத்தில் உள்ள பிரதேச செயலாளர் பிரிவுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

## புதிய வரிகளை அமுல்படுத்தும்...

தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்,அரச வருமானத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மறைமுக வரி விதிப்பால் பொருட்களின் விலைகள் அதிகரிக்காது என்றும், பொருட்களி ன் தேவை மற்றும் விநியோகத்தின் அடிப்ப டையில் பொருட்களின் விலைகள் நிர்ணயிக் கப்படும் என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## அரசியல்வாதிகளை அழைப்பதை...

வெளியிலிருந்து விரிவுரையாளர்களை வரவழைப்பது தொடர்பில், பல்கலைக்கழகத்தின் கல்விமான்கள் சபையே தீர்மானிக்க வேண்டும் என்றும் பல்கலைக்கழகத்தை அரசியல்மயமாக்கக்கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றிலே,இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## தேசிய ரின்மீன் தொழில்களை...

அமைச்சர் அங்குமேலும் தெரிவிக்கையில், வெளிநாடுகளிலிருந்து ரின்மீன்கள் இறக்குமதி செய்வதற்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் ரின்மீன் உற்பத்தித்துறையை ஊக்குவிப்பதற்கு தொடர்ந்தும் நடவடிக் கை எடுக்கப் பட்டுவருகிறது. இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் ரின்மீன்களின் தரத்தை மேம்படுத்துவதற்கு உற்பத்தியாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ரின்மீன்க ளின் தரம் வெளிநாடுகளில் உற்பத்தி செய்யப் படும் மீன்களின் தரத்திற்கு நிகராக இல்லை என்பது பல்வேறு தரப்பின் கருத்தாகும். இக்க ருத்தில் உண்மை இல்லையென நிரூபிப்பது தேசிய ரின்மீன் உற்பத்தியாளர்களின் பொறுப்பாகும். இலங்கை தரக் கட்டுப்பாட்டுப் பணியகத்தால் அனுமதிக்கப்பட்ட 18 உள்ளூர் ரின்மீன் தொழிற்சாலைகள் நாட்டிலுள்ளன. அனுமதி வழங்கப்படாத தொழிற்சாலைகளும் இருப்பதாக எனது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. உள்ளூர் ரின்மீன் உற்பத்தித் தொழிற்சாலைகளை அபிவிருத்தி செய்வது அவசியம். இவ்வா று செய்தால், அறுவடை செய்யப்படும் மீன்களை இத் தொழிற்சாலைகளுக்கு விற்பனை செய்ய முடியும். இதனால், உள்ளூர் மீனவர்கள் நன்மையடைவர் என்றார்.

## 2023: அந்நியச் செலாவணி...

ஏற்றுமதி வருமானம் இதுவாகுமென்றும் அச்சபை தெரிவித்துள்ளது.

இலங்கையின் பொருட்கள் ஏற்றுமதி 3,76,830 கோடி ரூபாய் (11.85 பில்லியன் அமெரிக்க டொலர்) என்றும் மற்றும் மதிப்பிடப்பட்ட சேவை ஏற்றுமதி வருவாய் 97,944 கோடி ரூபாய் (3.08 பில்லியன் அமெரிக்க டொலர்) எனவும் இலங்கை அபிவிருத்தி ஏற்றுமதி அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது. எவ்வாறாயினும், இது கடந்த ஆண்டு 2022 இல் பதிவான 14.99 பில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடுகையில் 0.39 வீத வீழ்ச்சியைக் காட்டுகிறது, ஆனால், சேவை ஏற்றுமதியின் மதிப்பிடப்பட்ட வளர்ச்சி சுமார் 63 சதவீதமாக உள்ளதாகவும் ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.இலங்கை சுங்கத்தால் வெளியிடப்பட்ட தற்காலிக தரவுகளின்படி, 2023 டிசம்பரில் இலங்கையின் பொருட்கள் ஏற்றுமதி 2022 டிசம்பருடன் ஒப்பிடுகையில் 11.25 சதவீதத்தால் 947.5 மில்லியன் அமெரிக்க டொலர்களாக குறைந்துள்ளது, இது, 2023 நவம்பரில் பதிவான எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது 5.16 சதவீதம் குறைவு. எவ்வாறாயினும், டிசம்பர் 2023 இல், ஆடை மற்றும் ஜவுளி ஏற்றுமதிகள் நேர்மறையான அறிகுறியைக் காட்டியுள்ளன, இது ஆண்டின் மிக உயர்ந்த மதிப்பைப் பதிவு செய்தது. மேலும் 2023 ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான காலப்பகுதியில் சேவை ஏற்றுமதியின் மதிப்பிடப்பட்ட மதிப்பு 3,080.9 மில்லியன் அமெரிக்க டொலராகும். ஒப்பிடும்போது இது, 63.1 சதவீதம் ஆகும். 2022 இன் தொடர்புடைய காலகட்டத்துக்கு அதிகரித்துள்ளது ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் மதிப்பிடப்பட்ட சேவைகள் ஏற்றுமதி தகவல் தொழில்நுட்பம்/வணிக செயல்முறை முகாமைத்துவம் (ICT/BPM), கட்டுமானம், நிதிச் சேவைகள், போக்குவரத்து மற்றும் தளபாடங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதென, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

## திருமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர்...

சண்முகா மகளிர் தமிழ் வித்தியாலயத்தில் கடந்த பத்து வருடங்களாக காணிப் பிரச்சினை நிலவி வருகிறது. இதுதொடர்பில் கடந்த காலங்களில் பாடசாலை நிர்வாகம் பல தரப்பினரிடம் தீர்வை பெற்றுக்கொள்ள முயற் சித்த போதிலும் அது சாத்தியப்படவில்லை.

இந்நிலையில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் கவனத்துக்கு இந்த விடயம் கொண்டுவரப்பட்டது.இதை தொடர்ந்து 30 வருட குத்தகைக்கு புதிய காணி பெற்றுக் கொடுக்கப்பட்டது. குத்தகை தொகையை வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கிழக்கு ஆளுநரின் இச்செயற்பாட்டை வரவேற்றுள்ள பாடசாலை நிர்வாகம், ஆளுநருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளது.

காணி வழங்கும் நிகழ்வில் உரையாற்றிய கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இந்த பாடசாலையில் நீண்டகாலமாக காணிப்பிரசினை காணப்படுவதாகவும், அதற்கான தீர்வு இதுவரை கிடைக்கவில்லை எனவும், பாடசாலைகளுக்கான காணியை உடனடியாக பெற்றுத்தருமாறு பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன்,சுமந்திரன், சாணக்கியன் மற்றும் தமிழரசு கட்சியின் செயலாளர் குகதாசன் ஆகியோர் எனது கவனத்திற்கு கொண்டு வந்தனர். பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர் மற்றும் நகர சபை உறுப்பினர்களும் எனது கவனத்துக்கு கொண்டு வந்து இப்பிரச்சினைக்கு உடனடி தீர்வு வழங்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

## அரிசி உற்பத்தியில் தன்னிறைவு...

சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் மஹிந்த அமரவீர இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் மஹிந்த அமரவீர, “விவசாயம் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அபிவிருத்திக்கான இலக்குகளை நோக்கிய வேலைத்திட்டத்தை இவ்வருடம் ஆரம்பித்துள்ளோம்.

2023 இல், நாட்டில் சிறு போகத்திலும் பெரும் போகத்திலும் உரங்களை கொள்வனவு செய்வதற்கு 22 பில்லியன் ரூபாவை செலவிட்டோம். அத்துடன் நெல் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் 13 பில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது. இதன்படி 2022இல்,எட்டு மெற்றிக்தொன் அரிசி இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட போதிலும் 2023ஆம் ஆண்டு அரிசி இறக்குமதி செய்யப்படவில்லை. நம் நாட்டு விவசாயிகள் உற்பத்தி செய்த அரிசியை இந்த நாட்டு மக்கள் வருடம் முழுவதும் உட்கொண்டார்கள் என்றே கூற வேண்டும். நெருக்கடியான நிலையிலும், அரிசியில் தன்னிறைவு பெற்றுள்ளதால், இந்த ஆண்டு அரிசியை இறக்குமதி செய்ய எதிர்பார்க்கவில்லை. கடந்த ஆண்டைப் போலவே வரட்சி மற்றும் வெள்ளத்தால் நெல் விளைச்சல் பாதிக்கப்பட்டது. வரட்சியால் 65,000 ஏக்கரும், கனமழையால் 100,000 ஏக்கரும் சேதமடைந்துள்ளன. வரட்சியால் ஏற்பட்ட பயிர் சேதங்களுக்கு இழப்பீடு வழங்க அரசாங்கம் 1,000 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. சுமார் 700 மில்லியன் ரூபா ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. கனமழையால் பாரியளவில் மரக்கறிப் பயிர்கள் அழிந்ததால், மரக்கறிகளின் விலைகள் உயர்ந்தன . சில விவசாயிகள் ஒரே விவசாய நிலத்தில் பலமுறை காய்கறி விதைகளை பயிரிட்டனர். ஆனால் அவை மழையால் அழிந்துவிட்டன. விவசாயிகளுக்கு நாங்கள் வழங்கிய "நெட் ஹவுஸ்'களில் பயிர் செய்தததால், ஓரளவுக்கு மரக்கறிகள் சந்தைக்கு வந்தன.

இன்னும் இரண்டு மாதங்களில் மரக்கறிகளின் விலை இயல்பு நிலைக்குத் திரும்பும். 2024 ஆம் ஆண்டில், நமது தேசிய நுகர்வு இலக்கை அடைய நெல், சோளம், உருளைக்கிழங்கு மற்றும் மிளகாய் ஆகிய 04 வகையான பயிர்களின் உற்பத்திக்கு முன்னுரிமை அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆனாலும் ஏனைய பயிர் உற்பத்திகளை ஊக்குவிப்பதோடு, இந்த 4 வகைப் பயிர்களை முக்கிய இலக்காகக் கொண்டுள்ளோம்.

# தேசிய கல்வி நிறுவகம்
# பட்டமளிப்பு விழா 2024
## ஜனவரி 30, 31 BMICH இல்

## கல்வித்துறையில் புதிய கருத்தியல்களை வலுப்படுத்த வேண்டிய நேரம் இது

முன்னெப்போதும் இல்லாத அளவிலான உள மற்றும் உலகளாவிய சவால்களுடன் இலங்கையின் கல்வி கட்டமைப்பில் நம் அனைவருக்கும் கடினமான மற்றும் சவாலான காலங்களாக கடந்த சில வருடங்கள் இருந்தன. இந்தச் சூழ்நிலையில், சமூகபொருளாதார பண்பாட்டு மாற்றத்தில் ஒரு புரட்சியை நாம் எதிர்பார்க்கும் நிலையில், தற்போதுள்ள கல்வி முறை அதன் நோக்கங்களை எட்டும் என்பது சாத்தியமில்லை.

பாடசாலை வகைப்படுத்தல் கட்டமைப்பு, மதிப்பீட்டு முறைகள், கற்பித்தல்கற்றல் முறைமைகள் மற்றும் தொகுதிகளுடன் கூடிய பாடத்திட்டத்தை நவீனமயமாக்கல் உட்பட முழு கல்வி முறைமையும் இந்த அம்சங்களைக் கொண்டு செயல்படுத்தப்பட உள்ளது.

தேசிய கல்வி நிறுவகம் இந்த சீர்திருத்தங்களில் எப்போதும் முன்னணியில் உள்ளது என்பதுடன் MPhil, MEd, Bed, PGDE மற்றும் PGDEM போன்ற நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக தத்துவத்தைப் பகிர்ந்துகொள்வதன் மூலம் இந்த கல்வி முறைமையில் புதிய சித்தாந்தத்தில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் அதிகாரம் அளிக்கும் முயற்சியை இது மேற்கொண்டுள்ளது.

நாட்டின் வளர்ச்சிக்கு பரந்த அளவில் பங்களிக்கும் மீள் தன்மையுடனான, நெகிழ்வான மற்றும் நேர்மறை மனப்பான்மை கொண்ட திறமையான நபர்களை உருவாக்கவும் நாட்டின் இளைய தலைமுறையினரின் சிறப்புத் திறன்களை அடையாளம் காணவும் உங்கள் கற்பித்தலில் ஒரு படி முன்னேற வேண்டும் என்று நான் உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று பட்டம் பெறும் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன், ஏனெனில் நீங்கள் எதிர்காலத்துக்கான ஒரு தொலைநோக்கு பார்வையை உருவாக்கியுள்ளதுடன் உங்கள் திறமைகளை மேம்படுத்த இந்த குறிப்பிடத்தக்க நடவடிக்கையைத் தொடங்கியுள்ளீர்கள். உங்களின் சாதனை,



கலாநிதி சுசில் பிரேமஜயந்த்
கல்வி அமைச்சர்

நீங்கள் பெற்ற பட்டத்தில் மட்டுமல்லாமல் உழைக்கும் பெரியவர்களாக நீங்கள் மேற்கொண்ட விடாமுயற்சி மற்றும் கடின உழைப்பில் தங்கியுள்ளது.

## உலகளாவிய கல்வித் தரத்துக்கு ஏற்ப புதிய மறுசீரமைப்புகளை கொண்டு செல்லுங்கள்

மனிதகுலத்தின் கூட்டு அறிவு எப்போதும் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு மாற்றப்படுகிறது. இதன் விளைவாக பல நூற்றாண்டுகளாக கல்வி படிப்படியாக முறைப்படுத்தப்பட்டது.

21ஆம் நூற்றாண்டின் மூன்றாம் தசாப்தத்தின் முதல் பாதியில், சமூக வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதன் ஒரு அம்சம் கல்வியாகும். கல்வி முறையும் கடந்த சில ஆண்டுகளாக மிகப்பெரிய மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது. டிஜிட்டல் மாற்றம், மேம்படுத்தப்பட்ட யதார்த்தம், விளையாட்டுக் கல்வி, திறந்த கல்வி வளம் என ஏற்கனவே கணிக்கப்பட்டுள்ள பல மாற்றங்களை எதிர்காலம் கொண்டுள்ளது. இந்த எதிர்கால கற்றல் வாய்ப்புகளில் மாணவர்கள் தங்கள் கற்றல்' செயற்பாடுகளில் சுறுசுறுப்பாகவும் ஆர்வத்துடனும் ஈடுபடுவதையும் அவர்களின் பாடசாலை அனுபவங்களை மேம்படுத்தும் பல தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்துவதையும் நாம் பார்க்கலாம்.

இலங்கையின் கல்வி கட்டமைப்பு இந்த யதார்த்தத்தை புறக்கணிக்க முடியாது. எனவே, புதிய சீர்திருத்தங்கள் திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளன என்பதுடன் உலகளாவிய கல்வித் தரங்களின் தேவைகளுக்கு ஏற்றவாறு முழுமையான ஆளுமைகளைக் கொண்ட நபர்களை உருவாக்குவதற்கும் தயாராக உள்ளன. இந்த மாற்றத்தில், புதிய வகுப்பறையில் ஆசிரியரின் பங்கு மிக முக்கியமான இடத்தை வகிக்கிறது. இந்த தேவையை பூர்த்தி செய்வதற்காக தேசிய கல்வி நிறுவனமானது பல்வேறு பட்டப்படிப்பு திட்டங்களை நாட்டின் கல்வி சமூகத்தின் தொழில் முறை வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டும், எதிர்கால வேலை செய்யும் உலகுக்கு குடிமக்களை உருவாக்குவதற்கு தேவையான இலக்குகளை வெற்றிகரமாக அடைவதற்கும் வழங்குகிறது.

தங்களது பட்டப்படிப்பை வெற்றிகரமாக நிறைவுசெய்த அனைத்து பட்டதாரிகளையும் வாழ்த்துவது எனது பாக்கியம். கல்வியின் புதிய பாதையில் வருங்கால சந்ததியினரை வழிநடத்த முன்வருமாறு கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் உங்கள் கல்வி இலக்குகளை கற்று உணர்ந்து கொள்வதற்கான உங்கள் அர்ப்பணிப்புக்காக நான் உங்களைப் பாராட்டுகிறேன்.



திருமதி வசந்தா பெரேரா
செயலாளர்,
கல்வி அமைச்சு

## தொழில் திறமையை மேம்படுத்த வேண்டியது பிரதான 03 திறன்களின் அடிப்படையிலேயே

இலங்கையின் பொதுக் கல்வியின் பிரதானமான ஒரு பங்காளியான தேசிய கல்வி நிறுவகத்தின் 2024 பொதுப் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறும் உங்கள் அனைவரையும் வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

தொடர்ச்சியான ஆசிரியர் விருத்துக்கு ஊக்கமளிப்பதன் மூலம் கல்வியில் புதிய போக்குகளை உருவாக்குவதற்காக தேசிய கல்வி நிறுவகம் சதாவும் செயற்படுகிறது. கல்வி என்பது மனித உரிமையும் அபிவிருத்திக்கான ஓர் உந்துசக்தியும் வறுமையைக் குறைத்து நாட்டுமக்களின் சுகாதாரம், பாலின சமத்துவம், சமாதானம், உறுதிப்பாடு ஆகியவற்றை ஏற்படுத்தத்தக்க ஒரு கருவியும் வருமானம் உட்பட பாரிய பயன்களைத் தொடர்ச்சியாகத் தரத்தக்க ஒரு வழியும் ஆவதோடு சமத்துவத்தையும் உட்படுத்தலையும் ஏற்படுத்தத்தக்க மிக முக்கியமான காரணியும் ஆகும்.

கடந்த பல வருடங்களாக கல்விமாணி, பட்டப் பின் கல்வி டிப்ளோமா,கல்வி முதுமாணி ,தத்துவமாணி போன்ற பல்வேறு ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் பாண்டியத்தியம் மிக்க விரிவுரையாளர்களின் துணையுடன் தேசிய கல்வி நிறுவக ஆசிரியர் துறையினால் நடத்தப்படுகின்றன.

சமகால ஆசிரியர்கள் நாட்டின் தற்போதைய நிலைமையைக் கவனத்திற் கொண்டு,முன்னிலும் பார்க்கக் கூடுதலான முனைப்புடன் மாற்றமடைந்துவரும் கல்விமுறைமையில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளல் வேண்டும். ஆசிரியர்கள் மூன்று பிரதான தேர்ச்சிகளைக் கொண்டிருத்தல் வேண்டுமென நான் நம்புகிறோம். வெறுமனேஅறிவைச் சொல்லிக் கொடுப்பதற்குப் பதிலாக கற்போனை நன்கு அவதானிக்கும் தன்மை, மலர்ச்சியான தன்மை, பொறுமை ஆகியவை அவையாகும்.

தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளர் நாயகம் என்ற வகையில் தகைமை வாய்ந்த பட்டம் பெற்ற ஆசிரியர்களாகிய நீங்கள் ஒவ்வொருவரும் கருணையுள்ளம் கொண்ட கல்வி வழங்குனர்களாக இலங்கை கல்வி முறையை மீள நிலைநிறுத்தி எமது எதிர்கால சந்ததிகளதும், முழு நாட்டினதும் விருத்திக்காக பூரண ஆதரவை வழங்குவீர்களெனப் பெரிதும் எதிர்பார்க்கின்றேன்.



பேராசிரியர் பிரசாத் சேதுங்க
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

## மாணவ, மாணவிகளின் திறன்களை வெளிக்கொணர்வது ஆசிரியர்களின் பொறுப்பு

ஆழ்ந்து சிந்திப்பதற்கும் தீவிரமாகச் சிந்திப்பதற்கும் கற்பித்தலே கல்வியின் பணியாகும் என்பது தற்போது இனங்காணப் பட்டுள்ளது. கல்வியின் உண்மையான இலக்கு அறிவாற்றலும் ஒழுக்கமும் ஆகும்.

இலங்கைக் கல்வி முறைமையைச் சேர்ந்த பல்வேறு ஆளணியினருக்குத் தேவையான வாண்மைத்துவப் பயிற்சியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, தேசிய கல்வி நிறுவக ஆசிரியர் கல்வித்துறை தாபிக்கப்பட்டது. இலங்கையில் கல்வித் துறையில் ஈடுபட்டுள்ள கல்வியாளர்களுக்குப் பொருத்தமான பல நிகழ்ச்சித் திட்டங்களை தேர்ச்சிமிக்க விரிவுரையாளர்களைக் கொண்டு அது நடத்திவருகிறது.

கல்வி என்பது விடாமுயற்சியையும் அயராத உழைப்பையும் வேண்டிநிற்கும் ஒன்றாகும். இன்றைய இந்த நிகழ்வு உங்களது இலக்கை அடைவதற்கு உங்களுக்குத் துணை நின்ற குடும்பத்தவர்கள் நண்பர்கள் அனைவருக்கும் உரித்ததொன்றாகும். உங்களது இந்த சிறப்பானஅடைவு குறித்து நாம் அனைவரும் பெருமையடைகின்றோம். தேசிய கல்வி நிறுவகத்தில் நாம் ஆசிரிய மாணவர்களின் மறைந்துள்ள ஆற்றல்களை வெளிப்படுத்தி வெவ்வேறு பாதைகளில் வெற்றிநடைபோட வகை செய்து வருகின்றோம். இன்றைய உங்களது அடைவானது ஒளிமயமான எதிர்காலத்துக்கான வாண்மைத்துவப் பாதையில் உங்களை இட்டுச் செல்லவல்லது. உங்களது இந்தஅடைவுகள் குறித்து பெருமைப்படுவதோடு புதிய இலக்குகளை வகுத்து அவற்றை அடைய ஊக்கத்துடன் செயற்பட திடசங்கற்பம் பூணுமாறும் சதாவும் மாறி வருகின்ற சவால்கள் மிக்க இந்த உலகில் கல்வி முறையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான உங்களது பல்வேறுபட்ட திறனையும் அறிவையும் பிரயோகிக்குமாறு வேண்டிநிற்கிறோம்.

நீங்கள் உங்களது வாழ்க்கைப் பயணத்தில் முக்கியமாக ஒரு மைக்கல்லை அடைந்துள்ளீர்கள். இந்த அடைவை மனதில் நிறுத்தி உங்களது வாண்மை வாழ்க்கைப் பாதை குறித்து நேர் வகையான ஊக்கத்துடன் வீறுநடை போடுமாறு வேண்டி நிற்கிறேன். இன்றையதினம் பட்டம்பெறும் உங்கள் அனைவரையும் மனதார வாழ்த்துகிறோம்.



எம்.ஆர்.டபிள்யூ.மத்துும,
பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
ஆசிரிய கற்கைளுக்கான பீடம் மற்றும் மாற்றுக் கற்கைநெறிகள்.



திருமதி ஜி.எச்.அசோகா ,
பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடம்.

## நீங்கள் பெற்ற அனுபவ அறிவினூடாக கல்வித்துறையை மேம்படுத்துவோம்

வாழ்க்கையின் முக்கியமான ஒருமைல் கல்லைக் கடக்கும் பட்டதாரிகளான உங்களை மனதார வாழ்த்துகிறோம். கல்வித் துறையுடன் தொடர்புடையஅனைவருடனும் இந்த அடைவை தாராளமாகப் பகிர்ந்துகொள்வோம்.

சமகால கோளமய கேள்விகளுக்குப் பொருத்தமானவாறு புதிய கல்வி மறுசீரமைப்புகளை இலங்கைக் கல்விமுறைமையில் அறிமுகம் செய்யத் திட்டமிடப்படும் இவ்வேளையில், இந்த நிகழ்வு நடைபெறுவதென்பது அதன் முக்கியத்துவத்தை மேலும் அதிகரிக்கின்றது.

புதிய கல்வி உலகின் சவால்களை எதிர்கொள்ளத்தக்கவர்களாக ஆசிரியர்களை உருவாக்கும் முயற்சியில் தேசிய கல்வி நிறுவக ஆசிரியர் கல்வித்துறை அயராது உழைத்து வருகின்றது. உட்படுத்தலுடனான பொருத்தமான முழுமையான கல்விச் சட்டகத்தில் நீங்கள் நன்கு பங்களிப்புச் செய்வீர்கள் எனும் நம்பிக்கையை இதயத்தில் தாங்கியவாறு உங்களை நாம் வழியனுப்பி வைக்கின்றோம்.

அன்பார்ந்த பட்டதாரிகளே, கல்வி என்பது“சுய திறனில் நிறைவு” பெறுவதற்கான தொடர்ச்சியான ஒரு பயணமாகும். உலகில் வாய்ப்புக்களும் சவால்களும் நிறைந்து காணப்படுவதோடு அவை உங்களுக்காகக் காத்துநிற்கின்றன.

நீங்கள் உங்களது எதிர்பார்ப்புக்களைப் படிப்படியாக அடையும் போது, பெறும் வெற்றிகள் உங்களைச் சூழக் காணப்படும். ஏனையோருக்கு குறிப்பாக இளம் பருவக் கற்போருக்கு உந்துசக்தியாக அமையட்டும்.

கல்வித் துறையைச் சேர்ந்த எம் அனைவருக்கும், ஆசிரிய வாண்மையின் மையக் குறிக்கோளை அதாவது, சேவை மனப்பாங்கையும் எதிர்கால உலகுக்கான எதிர்பார்ப்புக்களையும் கொண்டவர்களாக இளம் சந்ததியினரை உருவாக்குதல் எனும் இலக்கை இது நினைவு கூறி நிற்கின்றது. உங்கள் எதிர்கால முயற்சிகள் யாவும் வெற்றியடையுமென மீண்டும் வாழ்த்துகிறோம்.



டி.என்.கொடிதுவக்கு,
பணிப்பாளர்,
ஆசிரிய கல்வி திணைக்களம்



கலாநிதி துமினா லெல்லுபிட்டிய,
பதில் பணிப்பாளர்,
கல்வி நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி திணைக்களம்

NATIONAL INSTITUTE OF EDUCATION SRI LANKA
www.nie.ac.lk



# கிழக்கின் குரல்



## தேசிய நிர்மாண துறையினருக்கு திருகோணமலையில் கௌரவமளிப்பு





திருகோணமலையில் நிர்மாண துறையில் தேர்ச்சிப் பெற்றவர்களை கௌரவிக்கும் நிகழ்வு திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி குழு இணைத்தலைவர் கபில அத்துக்கோரல தலைமையில் நடைபெற்றது.

வளங்கள் தேசிய நிர்மாண சங்கத்தின் திருகோணமலை மாவட்ட கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான சிவ.சந்திரகாந்தன், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோரும் விசேட அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக், கிழக்கு மாகாண சபை செயலாளர் ரத்நாயக்க உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். மேலும் மாவட்டத்தில் நிர்மாணத் துறையை கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பு வழங்கியவர்கள் அதிதிகளால் இந்நிகழ்வில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## கவனிப்பாரின்றி கிடக்கும் மூதூர் கட்டபறிச்சான் சந்தைக் கட்டடத்தொகுதி

**(தோப்பூர் தினகரன் நிருபர்)**



மூதூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கட்டபறிச்சான் வடக்கு கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீதியோரமாக அமைக்கப்பட்டுள்ள பிரமாண்டமான சந்தைக்கட்டடத்தொகுதி நீண்டகாலமாக எவ்வித பயன்பாடுமின்றி பாழடைந்து காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

பல இலட்சக்கணக்கான ரூபா நிதியைப் பயன்படுத்தி கட்டப்பட்ட சந்தைத்தொகுதி எந்தவித பயன்பாடுகளுமின்றி புற்புதர்கள் வளர்ந்து கவனிப்பாரின்றி சேதமடைந்து காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

சந்தைக்கட்டடத்தொகுதி தற்சமயம் ஆடு மாடுகளின் உறைவிடமாகவும் மாறிவருவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். அத்துடன் பாழடைந்த இக்கட்டடத்தொகுதி சமூக சீர்கேடான செயற்பாடுகளுக்கும் வழிவகுத்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

மூதூர் கிழக்குப்பகுதியில் சந்தை வசதிகள் இல்லாமையால் இதனை இயக்கச்செய்வதன் மூலம் இப்பகுதியிலுள்ள பொதுமக்கள், விவசாயிகள், வியாபாரிகள் என பலரும் பெரிதும் பயனடைவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியில் சந்தை வசதிகளின்மையால் மக்கள் மிக நீண்ட தூரத்துக்கு அப்பால் மூதூர் பொதுச் சந்தைக்கு சென்றுவரவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதால் வீண் செலவீனத்தையும் பெரும் அசௌகரியத்தையும் எதிர்கொள்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே உரிய தரப்பினர் இதுதொடர்பில் கவனம் செலுத்தி சந்தை கட்டடத்தொகுதிகளை இயங்கச்செய்யவேண்டுமென பொதுமக்களும் நலன் விரும்பிகளும் உரிய தரப்பினரிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

## மட்டக்களப்பு இலத்திரனியல் நூலகத்துக்கு வெளிநாட்டுப் புத்தகங்கள் வழங்க நடவடிக்கை

**(மட்டக்களப்பு விசேட நிருபர்)**

மட்டக்களப்பு புதிய இலத்திரனியல் நூலகத்துக்கு வெளிநாட்டுப் புத்தகங்கள் நிறுவனத்தினால் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான நூல்கள் வழங்க உறுதியளிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் மட்டக்களப்பு நூலக புத்தக வள ஒருங்கிணைப்புக் குழுவிற்கு முதற்கட்டமாக 30,000 நூல்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இச்செயற்பாட்டை முன்னெடுத்த புலம்பெயர்ந்து வாழும் எழுத்தாளர் எம்.செல்வராஜாவுக்கும் மற்றும் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தனுக்கும் மட்டக்களப்பு நூலக புத்தக வள ஒருங்கிணைப்புக் குழுவினர் நன்றியைத் தெரிவித்தனர்.

## கிழக்கின் முதலாவது குழந்தை நல மருத்துவப் பேராசிரியராக டொக்டர் விஜி திருக்குமார் தெரிவு

**(காரைதீவு குறூப் நிருபர்)**

கிழக்கின் முதலாவது குழந்தை நல மருத்துவப்பேராசிரியராக கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளரும், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் விசேட குழந்தை நல வைத்திய நிபுணருமான டொக்டர் விஜி திருக்குமார் தெரிவாகியுள்ளார்.

காரைதீவைச் சேர்ந்த வைத்திய கலாநிதி திருமதி விஜயகுமாரி திருக்குமார் கொழும்பு பல்கலைக்கழகம், லண்டன் றோயல் உயர் கல்லூரி என்பவற்றில் உயர் பட்டங்கள் பெற்றவர். MBBS, DCH, MD, FRCPCH எனப் பல மருத்துவ சேவைகள் பட்டங்கள் பெற்ற இவர், குழந்தை நலன் தொடர்பாக பல கட்டுரைகளையும் எழுதி வருகிறார்.



வரலாற்றில் இவர் தான் கிழக்கில் முதலாவது குழந்தை நல மருத்துவப்பேராசிரியர் என்ற பெருமையை பெறுகிறார். இவரது கணவர் வைத்திய கலாநிதி மார்க்கண்டு திருக்குமார் யாழ்.உரும்பிராயைச் சேர்ந்த மகப்பேற்று நிபுணராவார். அவரும் கிழக்கு பல்கலைக்கழக மருத்துவத் துறை பேராசிரியராவார்.

## பொத்துவில் பிரதேசத்தில் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம்

**(ஒலுவில் விசேட நிருபர்)**

பொத்துவில் பிரதேசத்தில் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறும் அதற்கான சிகிச்சையை பெற்றுக் கொள்ளுமாறும். பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி ஏ.யூ.அப்துல் ஸமட் அறிவித்துள்ளார்.

பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி பிரிவுக்குட்பட்ட சில பிரதேசங்களில் எலிக்காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்ட சிலர் அடையாளம் காணப்பட்டுள்ளதால் பொதுமக்கள் மிக அவதானத்துடன் செயற்படுமாறு



கேட்டுள்ளார். குறிப்பாக விவசாய செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் மற்றும் உப உணவுப்பயிர்ச் செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு இந்நோய் அதிகமாக பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

விவசாயிகள் தத்தமது பொதுச் சுகாதார பரிசோதகர்களுடன் தொடர்பு கொண்டு நோய் தடுப்பு தொடர்பான மாத்திரைகளை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

எலிக்காய்ச்சலினால் அடையாளம் காணப்பட்டுள்ளவர்களுக்கு மாத்திரைகள் வழங்கப்பட்டு வருவதோடு, விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கொதித்தாறிய நீரை பருகுமாறும் கேட்டுள்ளார்.

காய்ச்சல், தசைகளில் கடுமையான வலி, கண் விழி சிவப்பு நிறமடைதல், சிறுநீர் வெளியேற்றம் குறைவடைதல், சிறுநீருடன் இரத்தம் வெளியேறுதல் இந்நோயின் அறிகுறிகளாகும்.



கலாநிதி அலவி ஷரீப்தீன் கல்விச் சகாய நிதிய ஏற்பாட்டில் புத்தகப்பை வழங்கும் நிகழ்வு காத்தான்குடி ஹிஸ்புல்லா மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம். அமீர் பிரதம அதிதியாகவும் காத்தான்குடி கோட்ட கல்விப்பணிப்பாளர் ஏ.ஜீ.எம். ஹக்கீம் விஷேட அதிதியாகவும் மற்றும் பல அதிதிகள் அதிபர்கள் ஆசிரியர்கள் Dr.அலவி சரீப்தீன் நிர்வாகத்தினர் கலந்துகொண்டு மாணவர்களுக்கு புத்தகப் பைகளை வழங்கிவைத்தனர். (படங்கள்: புதிய காத்தான்குடி விசேட நிருபர்)

## கிண்ணியாவில் கிராமிய சிறுவர் அபிவிருத்திக்குழு உருவாக்கம்

**(கிண்ணியா தினகரன் நிருபர்)**

கிண்ணியா சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கிராம மட்டங்களில் கலந்தாலோசித்து தீர்த்துக்கொள்ளும் பொருட்டு கிராமிய சிறுவர் அபிவிருத்திக்குழு ஸ்தாபிக்கப்பட்டது.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம். கனி தலைமையில் காக்காமுனை கிராம உத்தியோகத்தர் பிரிவில் கிராம உத்தியோகத்தரின் ஒழுங்குபடுத்தலுடன் இந்நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர், பாடசாலை அதிபா'கள் மற்றும் பிரிவில் கடமையாற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், பொலிஸ் உத்தியோகத்தர், குழந்தை நல உத்தியோகத்தர், பொதுச் சுகாதார பரிசோதகர், பள்ளிவாசல் பரிபாலன உறுப்பினர்கள், சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், விளையாட்டு மற்றும் சிறுவர் கழக உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## ரஹ்மத் பவுண்டேசனால் நீர்த்தொட்டி அன்பளிப்பு



இறக்காமம் மஸ்ஜிதுல் இக்றாம் பள்ளிவாசலுக்கு 1000 லீற்றர் நீர் கொள்ளளவைக் கொண்ட நீர்த்தொட்டி மற்றும் தண்ணீர் மோட்டார் என்பன கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் மூலம் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன. இந்நிகழ்வில் பவுண்டேசன் உறுப்பினர்களுடன், பள்ளிவாசல் தலைவர் ஐ.எல். அனீஸ், ஆலோசகர் வீ.ரீ.ஹுஸ்னி, எஸ்.என். சிறாஜ் மற்றும் ஏனைய பள்ளிவாசல் நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டனர்.

(படம்: எம்.எம்.ஜெஸ்மின்)

## வை.எம்.எம்.ஏ. கிளையின் 25 ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வும்







மாத்தளை மாவட்டத்தில் நிககொல்ல வை.எம்.எம்.ஏ. கிளையின் 25 ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வும் நிககொல்ல மின்ஹாஜ் முஸ்லிம் மகா வித்தியாலய மண்டபத்தில் வை.எம்.எம்.ஏ. கிளையின் தலைவர் டி.எம். சனீர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் இஹ்சான் ஏ. ஹமீட் மற்றும் விசேட அதிதியாக அகில இலங்கை வை.எம்.எம். பேரவையின் முன்னாள் தலைவரும் தேசிய விவகாரங்களுக்கான தவிசாளருமான சஹீட் எம். ரிஸ்மி மற்றும் அதிபர் என்.எஸ். மஸ்பஹா, பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் எம்.எம். ரிஸ்வான், ஆலோசகர் எம்.ஜி.எம். லபீர் நளீமி, மாத்தளைக் கமால் ஆகியோர் கலந்து கொண்டு பரிசில் வழங்கி வைப்பதை இங்கு படங்களில் காணலாம்.

***(படங்கள்: மாவத்தகம, மாத்தளை சூழற்சி நிருபர்கள்)***

# மலைச்சாரல்



## கைதியொருவரிடமிருந்து ஐஸ் போதைப்பொருள் மீட்பு

**(அக்குறணை குறூப் நிருபர்)**

பல்லேகல தும்பர சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கைதியொருவரிடமிருந்து 04 கிராம் மற்றும் 900 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளை பொலிஸார் மீட்டுள்ளனர். கைதி போதைப்பொருள் குற்றச்சாட்டின் கீழ் தண்டனை பெற்று வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய கைதியொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக



மேலும் பொலிஸார் தெரிவித்தனர். பல்லேகல தும்பர சிறைச்சாலை புலனாய்வு அதிகாரிகளினால் தகவல் வழங்கப்பட்டு விசேட தேடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**தொழிலதிபர் எஸ் முத்தையா. மனித நேயமும் சிறந்த வியாபார ஆற்றலும் சமூக செயற்பாடும் புகழ்பெற்ற சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளீதரனின் அன்புத் தந்தையான இவர், தன் சமூகப்பணிகளால் ஏழை எளிய மக்களின் நெஞ்சங்களில் இடம்பிடித்தவர். ஒரு பிரபலமான வர்த்தகர் மட்டுமல்ல, ஒரு இலக்கியப் புரவலர், சமூகப் பணியாளர் மற்றும் இந்து சமய அறங்காவலர் என அவருக்கு பல சிறப்பு முகங்கள். சமூக இலக்கிய பணிகளுக்காக மத்திய மாகாண சாஹித்திய விழாவிலும் கல்வி அமைச்சினால் மாத்தளையில் நடத்தப்பட்ட அகில இலங்கை தமிழ் தின விழாவிலும் மற்றும் ஏனைய பெரு விழாக்களிலும் அதிகளவு பாராட்டுக்களைப் பெற்றுக் கொண்ட பெருமைக்குரியவர். வலது கையால் கொடுப்பதை இடது கைக்கு தெரியாமல் கொடுத்து அடுத்தவர்களை வாழ வைப்பவர். அவர் ஆற்றிய சாதனைகள் பல. 2017 இல் அவருடைய 75ஆவது பவள விழா. அவர் அறங்காவலராக உள்ள முருகமலை கோயிலில் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. இத்தகைய பல்வேறு சிறப்புக்களைப் பெற்ற பெரியார், புரவலர், தொழிலதிபர் எஸ் முத்தையா குறித்து மலையக கலை கலாசார சங்கத்தின் தலைவர் எஸ். பரமேஸ்வரன் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.**

# தனது சமூகப்பணிகளால் ஏழை, எளிய மக்களின் உள்ளங்களில் வாழ்பவர் 'தொழிலதிபர் முத்தையா'



**சர்வதேச புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர் முத்தையா முரளீதரனின் தந்தை தொழிலதிபர் எஸ். முத்தையா பற்றிய உங்கள் கருத்து என்ன?**

நம்மிடையே சமூகப் பற்றுறுதி கொண்டு செயற்படுகின்ற சமூகப் பணியாளர் மிக்க சிலரே இருக்கின்றனர். அவர்களை இனங் கண்டு கௌரவப்படுத்துவது மட்டுமல்ல அவர்களுடைய பணிகளைப் பதிவாகக் கொண்டுவருதல் வேண்டும்.

சமூகத் தொண்டுப் பணியில் பன்முக ஆற்றல் கொண்ட ஆளுமைமிக்க ஒரு சமூகச் செயற்பாட்டாளர்தான் தொழிலதிபர் எஸ். முத்தையா. இவரைப் பற்றி இன்றைய தலைமுறையினர்கள் அறிந்திருந்தாலும் நாளைய தலைமுறையினர்கள் அறிந்து கொள்ளக் கூடிய நல்ல உயர் பண்புகள் சிறப்பாகக் காணப்படுகின்றன. அவ்வாறாயின் அவரிடம் என்ன விசேட நல்ல உயர் பண்புகள் உள்ளன என்ற விடயத்தை தேடிப் படிக்க வேண்டிய நிலைமை நமக்கு ஏற்பட்டுள்ளது.

'சன்ரயிஸ்' பிஸ்கட் கம்பனியின் ஸ்தாபகரான தொழிலதிபர் எஸ். முத்தையா தன் வாழ்விடமாக குன்டசாலை நத்தரம்பொத்தையைக் கொண்டிருந்தாலும் இவரது சமூகப் பங்களிப்பை நாடளாவிய ரீதியில் செய்து வருவதை நாம் அறிந்து கொள்ளலாம். இவர் அடுத்தவர்களுக்கு தெரியாமல் மறைமுகமான முறையில் பங்களிப்புச்செய்பவர் என்றே கூற வேண்டும்.

நான் சிறுவர் பராயம் முதல் தொழிலதிபர் எஸ். முத்தையா அவர்களை நன்கறிவேன். அவரது தொடர்பு எனது இளமைக் காலம் முதல் சமூகப் பணிகளின் ஊடாகவே ஏற்பட்டது. அவர் தொடர்பு கொண்டுள்ள சமூகப் பணியாளர்களுடன் எனக்கும் தொடர்பு இருந்தது. சமூகப் பணிகளில் ஆர்வமிக்க என் போன்ற இளைய தலைமுறையினர்களுக்கு ஒளிவிளக்காக திகழ்ந்து வந்துள்ளார்.

முத்தையா அவர்கள் வாக்குறுதிகள் மீறாதவர். எந்தவொரு கடின கால கட்டத்திலும் நேர்மை தவறாதவர். நேரம் தவறாதவர். தன் கடமைகளை உரிய நேரத்தில் செய்து முடிப்பவர். அதிகம் பேச மாட்டார். எந்தவொரு காரியமாக இருந்தாலும் அவற்றை செய்து முடித்து விட்டுத்தான் மூச்சு விடுவார். நிறைய சாதனைகளுக்குச் சொந்தக்காரர். வர்த்தகத் துறையில் திறன்மிக்கவர். துணிவு மிக்கவர். இவர் சமூகப் பணிகளிலும் தனது நாமத்தை பதிவு செய்துள்ளார். அதுவே அவரது தனிச் சிறப்பாகும்.



**அவர் வர்த்தகத் துறைக்கு வந்ததற்கும் பிரபல வர்த்தகராவதற்கும் காரணமான பின்புலத்தை சொல்ல முடியுமா?**

அவர் தோட்டப் பிரதேசத்தில் மஸ்கெலியாவிலுள்ள ப்ளுபீல்ட் தோட்டத்தில் பிறந்தவர். கடும் பனியிலும் கடும் குளிரிலும் துயரின் சுகத்திலும் வாழ்ந்தவர். தம் தாய் தந்தையரின் இன்பமும் துன்பமும் நிறைந்த வாழ்வில் ஒட்டி வாழ்ந்தவர். அப்பா பெயர் சின்னச்சாமி கவுந்தர். அம்மா சின்னச்சாமி அங்கம்மாள். இந்த இருவரையும் தம் வீட்டிலே ஒரு சுமையெனப் பாராமல் முறையே 95, 105 வயதில் மரணம் அடையும் வரையிலும் அவர்களுடைய மனம் நோகாமல் பராமரித்து வந்தார். அன்று வாழ்ந்த கட்டத்தை இப்போது நினைத்துப் பார்க்கும்போது பெரும் ஆச்சரியமாக இருக்கிறது.

1956 களில் கல்வியின் பால் நாட்டம் கொண்டு கல்வி கற்பதற்காக கண்டி வந்தார். கண்டி கச்சேரிக்கு அருகில் அமைந்துள்ள பாரத மாதா என அழைக்கப்படும் இன்றைய விவேகானந்த தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றார். அவர் சிறிய பையன். அப்பொழுது அவர் கேசர் வீதியில் தங்கியிருந்தார். 1958களில் சிங்கள தமிழ் மக்களுக்கிடையிலான 'ஸ்ரீ' பிரச்சினை எழுந்தது. அதன் போது கண்டி நகரில் பல தமிழ் கடைகள் தாக்குதலுக்கு உள்ளாகி எரியூட்டப்பட்டன. தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டார்கள். இதனை அவர் தங்கியிருந்த இடத்தின் மேல்மாடியிலிருந்து அச்சத்துடன் பார்த்த ஞாபகம் இன்னும் இருக்கிறது. எனினும் தொடர்ந்து அப்பாடசாலையிலேயே எஸ். எஸ் சி வரையிலும் படித்தார். 1964 களில் கல்விக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டு வியாபாரத்துறைக்குச் சென்றார்.

அவர் சிறிய வயதில் 50 ரூபா சம்பளத்திற்கு வேலைக்கு சென்றவர். இதன் மூலம் குடும்ப பாரத்தையோ பொருளாதார நெருக்கடியினையோ சமாளிக்க முடியாது என்ற எண்ணம் அவர் மனதில் தொடர்ந்து இருந்து வந்தது என்றே கூற வேண்டும். பின்னர் தம்மோடு ஒன்றித்து வாழ்ந்த தோட்டத் தொழிலாளர் குடும்பங்கள் தம் குறைந்த வருமானத்தில் படும் அவஸ்தையை நேரடியாக கண்டு துயருற்றார். தன்னுடைய வாழ்வாதாரத்தை கட்டி எழுப்ப முடியாமல் அல்லல்படுவதை அவர் சின்ன வயதில் இருந்து அவதானித்து வந்தார். இப்படிப்பட்ட இந்த பொருளாதா நெருக்கடி நிலைக்குள் சிக்கிக் கொள்ளாமல் ஓர் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்ற இலட்சியமும் வர்த்தகத் துறையில் முன்னேற வேண்டும் என்ற ஈடுபாடும் அவருக்கு இருந்தது.

இந்த எண்ணங்கள் அவரின் உள்ளத்தில் திரும்பத் திரும்ப மீட்டிக் கொண்டே இருந்தது. அதன் பின்னர் 1964 களில் தனது அண்ணன் சின்னச்சாமி ராமசாமியுடன் நத்தரம்பொத்தவில் அமைந்துள்ள லக்கிலேண்ட் பிஸ்கட் கம்பனியில் இணைந்து கொண்டார். ஒரு சாதாரண குடிசைக் கைத்தொழில் துறையின் மூலம் வர்த்தகத்திற்குள் நுழைந்தார். அன்றிலிருந்து இன்று வரையிலும் 60 வருடங்கள் அயராது பாடுபட்டுழைத்து வந்துள்ளார்.

அதனை உயர் தர பிஸ்கட் கம்பனியாக வளர்ச்சி பெற்று பெரும் சாதனைகளுடன் உயரமான இடத்திற்கு கொண்டு வந்தார்.

இன்று அது உயர்ந்த நிறுவனமாகும். அதி நவீன தொழில்நுட்ப மின் இயந்திர உபகரணங்களுடன் 200 பேருக்கும் மேற்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கி இது செயற்பட்டு வருகின்றது. அக்கால கட்டத்தில் ஒரு இறாத்தல் பிஸ்கட் 50 சதத்திற்கு விற்பனை செய்திருக்கின்றார். அப்பொழுது நவீன தொழில்நுட்ப கருவிகள் இல்லை. எல்லா வேலைகளும் கைகளால் தான் செய்யப்படும். இப்பொழுது தனியாக 'சன் ரயிஸ்' பிஸ்கட் கம்பனி ஸ்தாபித்து சிறந்த முறையில் நடத்தி வருகின்றார்.

**அவரின் குடும்ப வாழ்வு பற்றி?**

அவர் குடும்ப வாழ்வியலும் இப்படித்தான் ஆரம்பமாயிற்று. 1971 ல் அவர் நல்லதொரு குடுபத் தலைவனாக வருவதற்கு அவர் மனைவி லக்ஷ்மியினை கைப்பிடித்துக் கொண்டார். லக்ஷ்மி நாவலப்பிட்டிவைச் சேர்ந்தவர். 'லக்ஷ்மி செல்வத்தின் செல்வம்' என்ற சொல்லுக்கு ஏற்றவாறு அதிஷ்டமிக்கவராகவும் அவருடைய வளர்ச்சிக்கு பெரும் பக்கபலமாகவும் இருந்துள்ளார்.

கிரிக்கெட் விளையாட்டு உலகின் முன்னணி வீரர்களின் பட்டியலில் இடம்பிடித்துள்ள முரளிதனை பெற்ற செல்வமும், கடந்த பாராளுமன்றத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் அவரது மகன் பிரபாகரனை மற்றும் இரு புதல்வர்களான ஸ்ரீதரன், சசிதரன் ஆகிய நான்கு புதல்வர்களையும் மண்ணுக் கொண்டு வந்ததும் மனிதனாக்கியதும் அவர் கைப்பிடித்த அன்பு மனைவியே. அவரது வெற்றிக்கும் அவர் மனைவிதான் காரணம் ஆகும்.




**வியாபாரப் பயணத்தில் தடைகள் எதையும் அவர் எதிர்நோக்க வில்லையா?**

என்னதான் காலத்துடன் போட்டி போட்டு பயணித்தாலும் ஏதோ ஒரு கட்டத்தில் ஒவ்வொரு மனிதனும் சூழ்நிலைக் கைதியாய்தான் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். அது அவருக்கும் ஏற்பட்டது. அதை நினைத்தால் மனசு அதிகமாய் கவலை கொள்ளத் தொடங்குகிறது. 1977 இல் இடம் பெற்ற சிங்கள தமிழ் இனக் கலவரத்தில் அவர் உயிர் தப்பிப் பிழைத்தவர் என்று தான் சொல்ல வேண்டும். இந்தக் கலவர தினம் தொழிற்சாலையில் அவர் மனைவி பிள்ளைகள் மட்டும்தான் இருந்தனர். தொழிற்சாலையில் வேலை செய்த பிள்ளைகள் எல்லோரும் ஓடிவிட்டார்கள். இரவில் பெரும் கூட்டத்தினர் அவரிடத்தை நோக்கி திரண்டு வந்தனர். அவர்கள் கேட்டை உடைத்து உள்நுழைந்தார்கள். அவர் தனியாக நின்று இருந்தார். அவரைத் தாக்கி விட்டு முதுகில் வாளால் வெட்டினார்கள். கையிலும் சிறு காயம். அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு முதுகில் எட்டுத் தையல்கள் போடப்பட்டிருந்தன. இதில் இப்படி பாதிக்கப்பட்டாலும் மீண்டும் மீட்சி பெற்று நீளும் பயணத்தின் எதிர்பார்ப்புக்களை வெற்றிக் கொள்வதற்கு உறுதியோடு உழைத்தார்.

நாட்டின் நடைமுறைக் கோணல்தான் காரணம் என உணர்ந்து சற்று கூர்மையாக சிந்தித்து சுற்று வட்டாரத்திலுள்ள பெரும்பான்மை சகோதர மக்களுடன் நெருக்கமான சிநேகத்துடன் தொடர்புகளையும் ஏற்படுத்திக் கொண்டார். பின்னர் 1983 ஜுலைக் கலவரம் இடம்பெற்றது. அதன் போது சுற்று வட்டாரத்திலுள்ள மக்களே திரண்டு வந்து பாதுகாப்பு வழங்கினார்கள். தொழிற்சாலை தமிழ் மக்களைப் பாதுகாக்கும் ஒரு கேந்திர நிலையமாக விளங்கியது. அக்கம் பக்கத்திலுள்ள தமிழ் மக்களுக்கு இங்குதான் அடைக்கலம் கொடுத்திருந்தார். பின்னர் பொலிஸார் இங்கு வந்து அவர்களை அகதி முகாமுக்கு அழைத்துச் சென்றார்கள். இது தான் உண்மை.

மலையகச் சூழலில் தமிழ் கலை இலக்கியத் துறையை ஊக்குவிப்பதற்கென அவர்கள் ஆற்றிய அளப்பரிய பங்களிப்பு சாட்சியாகவுள்ளது. வறிய நிலையிலுள்ள படைப்பாளிகளுக்கு அவர் விளம்பரம் இல்லாமல் கையைவிரித்து நிறைய கைகொடுத்து உதவியுள்ளார்கள். ஒரு கையால் கொடுப்பது மறுகைக்கு தெரியக் கூடாது என்ற பண்பு அவரிடம் நிறையக் காணலாம்.

**இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

மலையக எழுத்தாளர்களைப் பொறுத்தவரையிலும் ஈழத்து இலக்கியத்தில் மலையக இலக்கியம் ஒரு தனித்துவப் பிரிவாக வளர்ந்திருக்கிறது. மலையகத் தோட்டங்களில் தமது இரத்தத்தை சொறிந்து இலங்கையின் வணிகத்தை மேம்பாட்டுக்காக இந்தியவம்சாவளித் தமிழர்கள் படும் அவஸ்தையைப் பற்றி இந்த இலக்கியம் வெளிப்படுத்துகின்றது. தானும் ஒரு இந்திய வம்சாவளித் தமிழ் குடும்பத்தைச் சார்ந்தவன் என்ற வகையில் யதார்த்தபூர்வமாக ஒடுக்கப்பட்ட மக்களுக்காக இலக்கியம் படைக்கின்ற எழுத்தாளர்களை ஊக்குவிக்க வேண்டும் என்கிற எண்ணங்கள் அவருக்கு இயல்பாகவே உள்ளன.



அந்த அடிப்படையில் அதிகம் பேர் ஆக்கங்களை எழுதினாலும் அதனை நூலாகப் பதிப்பித்து வெளியிட முடியாத பொருளாதார நெருக்கடியான ஒரு சூழ்நிலையில் உள்ளனர். சிலர் நூல்களை மிக கஷ்டப்பட்டு பதிப்பித்து வெளிர்க்கொணர்ந்தாலும் அந்நூல்களை விநியோகம் செய்து போட்ட முதலைப் பெற்றுக் கொள்ள முடியாத போக்கையே காணக் கூடியதாக இருக்கிறது என்றால் அது ஒரு கவலையான செய்தியாகும். அவர், கண்டியில் இடம்பெறும் எந்தவொரு நூல் வெளியிட்டு விழாவாக இருந்தாலும் யார் அழைத்தாலும் தவறாமல் கலந்து கொள்வார். நூலின் முதல் பிரதிகளையும் பெற்றுக் கொள்வார். இன்னும் மலையகத்தில் இலைமறை காய்களாக எழுதி வரும் பல எழுத்தாளர்களுடைய நூல்களைப் பதிப்பிப்பதற்காக வேண்டி மறைமுகமான ரீதியில் பண உதவிகள் எவ்வளவோ செய்துள்ளார். அதனை அவர் மலையக தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காகத்தான் செய்தார். இதனையே அவர் பிரதான சமூகப் பணியாகவும் கொண்டு செயற்பட்டு வருகின்றார்.

கண்டியில் தமிழ் இலக்கியத் துறையில் ஒரு மறுமலர்ச்சிக் காலம் இருந்தது. அக்கால கட்டத்தில் மக்கள் கலை இலக்கிய ஒன்றியம், கண்டி தமிழ் சங்கம், மலையக கலை இலக்கியப் பேரவை போன்ற அமைப்புக்களின் ஏற்பாட்டில் தமிழ் இலக்கியத் துறையில் பல்வேறு இலக்கிய நிகழ்வுகள் இடம்பெறும். இதன் போது பல நூற்றுக் கணக்கான எழுத்தாளர்களின் நூல்களின் முதல் பிரதியினைப் பெற்று அந்நூல் வெளியிட்டு விழாவுக்கு பெருமை சேர்த்துள்ளார். பெறுமதி மிக்கப்படைப்பாளிகளின் திறமைக்கு ஊக்கமளிப்பதும், அதற்கு புத்துயிர் அளிப்பதும் தமது கடமையாகும். இது ஒவ்வொரு தமிழ் வர்த்தகப் பிரமுகர்களும் தமிழ் இலக்கியத்தின் மீது மேலான கவனம் செலுத்த வேண்டும் என்பதுதான் அவரின் கருத்து. இல்லையேல் எம்மால் முன்னோக்கி நகர முடியாமற் போய் விடும் என்கின்ற முக்கியமான செய்தியாகவும் அவர் சொல்லிக் கொள்ள விரும்புகின்றார்.

**அவர் மகன் முரளீதரன் பற்றி**

கிரிக்கெட் விளையாட்டுத் துறையில் அவர் மகன் முரளிதரனைப் பற்றி உலகில் அறியாதவர்கள் எவரும் இருக்க முடியாது எனக் கருதுகின்றேன். சுழல் பந்து வீச்சில் உலகிலே பேசப்பட்ட சிறந்த வீரர். பந்து வீச்சில் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்தவர். அவர் ஒரு நாள் போட்டில் 500 விக்கட்டுக்களையும், டெஸ்ட் போட்டிகளில் 800 விக்கட்டுகளையும் வீழ்த்தி சாதனை நிலைநாட்டியவர். 'தூஸ்ரா' பாணியிலான பந்து வீச்சில் புதுமை படைத்தவர். இதுவரையிலும் அதில் எந்தவீரரும் தேர்ச்சி பெறவில்லை. அவரது ஆளுமையையும் சிறப்பம்சங்களையும் நான் விலாவாரியாக விளக்கத் தேவையில்லை. அது உலகம் அறிந்து தரிசித்து வைத்துள்ள விடயம். மிக அமைதியானவர். கடின உழைப்பாளி. தன்னலம் பாராது சேவையாற்றக் கூடியவர். அவர் பற்றிய சினிமாத் திரைப்படமும் வெளி வந்துள்ளது.

கண்டி மெதமஹாநுவர முருகமலை ஸ்ரீ முருகன் தேவஸ்தானத்தின் அறங்காவலராக பணியாற்றி வருகின்றார்.

**அவர் இந்து சமய மேம்பாட்டுக்காக ஆற்றி வரும் பங்களிப்பு என்ன?**

இயல்பாகவே சமய பக்தி வழிபாடுகளில் அதீத ஈடுபாடு அவருக்கு இருக்கிறது. அது மட்டுமல்ல கோயில் நிர்மாணப் பணிகளுக்காக இல்லை எனச் சொல்லாமல் மனமுவந்து உதவி செய்வார். யார் கேட்டாலும் அவற்றை சரியாக உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் வழங்கி வருபவர். உழைப்பானது தனக்கு மட்டுமல்லாமல் பிறருக்கு கொடுத்து உதவியினால் மட்டும் தான் தொழிலின் விருத்தி அதிகரிக்கும். அதற்குப் பாதுகாப்பாகவும் அமையும். மற்றவர்களுக்கு கொடுத்துதவும் மனிதர்கள் ஒரு நாளும் தோல்வி அடையப் போவதில்லை. இதற்கு அவர் தொழில் நிறுவனத்தை எடுத்துக் கொண்டாலே போதுமானதாகும்.

மெதமஹாநுவர ஸ்ரீ முருகமலைக் கோயிலின் அறங்காவலாளராக கடந்த 20 வருடங்களாக சமயப் பணிகள் ஆற்றி வருகின்றார். ஆரம்பத்தில் தொழில் ரீதியாக சிரமங்கள் இருந்தன. ஆனாலும் சமயக் கடமை என்ற காரணத்தினால் முழுமையான பொறுப்பையும் ஏற்று சேவை புரிகின்றார்.

1. பிரசித்த நொத்தாரிசு ரண்பதி தேவகே ஷாலிகா குமாரி நரசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2019.04.02 திகதியிட்ட ஈட்டு முறி இல. 231இன் பேரில் தம்புத்தேகம, திஸ்பனபுர, இல. 14 எனும் முகவரியைச் சேர்ந்த திரு. வீரசூரிய கலபிட்ட கெதர ஜோதிரத்ன பண்டார, திரு.வீரசூரிய கலபிட்ட கெதர பிரசாத் நுவன் லங்கா வீரசூரிய மற்றும் திருமதி கங்கா பிரஹ்மன ஏக்கநாயக்க முதியன்சேலாகே வசந்தா பத்மினி ஏக்கநாயக்க ஆகியோரிடமிருந்து 1 ஆவது கடன் வசதி மீது 2023.11.09 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 24,139,704.96 (இருபத்து நான்கு மில்லியன் நூற்று முப்பத்தொன்பது ஆயிரத்து எழுநூற்று நான்கு ரூபாய் தொண்ணூற்றாறு சதமும்) அத்துடன் நிலுவை முதல் ரூ.13,500,000.00 (பதின்மூன்று மில்லியன் ஐந்நூறு ஆயிரம் ரூபாய்) மீது ஆண்டுக்கு இருபது தசம் இரண்டு ஐந்து (20.25%) வீதத்தில் 2023.11.10 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், 2 ஆவது கடன் வசதி மீது 2023.11.09 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 2,833,428.35 (இரண்டு மில்லியன் எண்ணூற்று முப்பத்து மூன்று ஆயிரத்து நானூற்று இருபத்தெட்டு ரூபாய் முப்பத்தைந்து சதமும்) அத்துடன் நிலுவை முதல் ரூ.1,500,000.00 (ஒரு மில்லியன் ஐந்நூறு ஆயிரம் ரூபாய்) மீது ஆண்டுக்கு இருபது தசம் இரண்டு ஐந்து (20.25%) வீதத்தில் 2023.11.10 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும், 2. பிரசித்த நொத்தாரிசு ரண்பதி தேவகே ஷாலிகா குமாரி நரசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2019.04.02 திகதியிட்ட ஈட்டு முறி இல. 231இன் பேரில் 1 ஆவது கடன் வசதி மீது 24,139,704.96 (இருபத்து நான்கு மில்லியன் நூற்று முப்பத்தொன்பது ஆயிரத்து எழுநூற்று நான்கு ரூபாய் தொண்ணூற்றாறு சதமும்) 2 ஆவது கடன் வசதி மீது ரூ. 2,833,428.35 (இரண்டு மில்லியன் எண்ணூற்று முப்பத்து மூன்று ஆயிரத்து நானூற்று இருபத்தெட்டு ரூபாய் முப்பத்தைந்து சதமும்) அத்துடன் 2023.11.10 தொடக்கம் விற்பனைத் திகதி மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியும் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் முதலாவது அட்டவணையில் விபரித்த சொத்தை இரண்டாவது அட்டவணையில் விபரித்த விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கமையவும் இங்கு கீழ் மூன்றாவது அட்டவணையில் விபரித்த இயந்திர சாதனங்களையும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3 விஹார மாவத்தை, மாவத்தை, கொலன்னாவை எனும் முகவரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. MHT கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி தம்புத்தேகம கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை**

வடமேல் மாகாணம் அநுராதபுரம் மாவட்டம் தம்புத்தேகம பிரதேச செயலகப் பிரிவில் தலாவ பிரதேச சபை எல்லைகளுள் எப்பாவல கோரளையில் திஸ்பனபுர 428ஆம் இலக்க கிராம சேவகர் பிரிவில் திஸ்பனபுர கிராமத்தில் அமைந்த "அரசாங்கக் காணி" என அழைக்கும் காணி அளவையாளர் நாயகம் அதிகாரமளித்த எப்.சீ.பீ. 59 இல் (மிகவும் சரியானது எப்.சீ.பீ.டபிள்யு.59) எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 278 என அடையாளமிட்ட காணித்துண்டு 278, வடக்கில் காணித்துண்டுகள் 292, 279 உம், கிழக்கில் காணித்துண்டு இல. 279, 275 உம் தெற்கில் காணித்துண்டு இல. 275, 277 உம் மேற்கில் காணித்துண்டு இல. 277, 292 உம் எல்லைகளாகக் கொண்டு ஹெக்டெயர்கள் பூச்சியம் தசம் இரண்டு நான்கு ஆறு (ஹெக். 0.246) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மண், மரங்கள் பயிர்கள் கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி அநுராதபுரம் மாவட்ட காணிப்பதிவகத்தில் LDO P/07/95 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறிய காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். பாலேந்திரன் தயாரித்த 2008.05.21 திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் 2008/41இன் பிரகாரம் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய திஸ்பனபுர கிராமத்தில் அமைந்த "கும்புக்வெவ கெலே" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். பாலேந்திரன் தயாரித்த 2008.05.21 திகதியிட்ட வரைபடம் இல. 2008/41இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு "A" என அடையாளமிட்ட காணித்துண்டு A, வடக்கில் எப்.சீ.பீ.டபிள்யு 59 இன் காணித்துண்டுகள் 292, மற்றும் 279 உம், கிழக்கில் எப்.சீ.பீ.டபிள்யு 59 இன் காணித்துண்டு இல. 279 மற்றும் 275 உம் தெற்கில் எப்.சீ.பீ.டபிள்யு 59 இன் காணித்துண்டு இல. 275 மற்றும் 277 உம் மேற்கில் எப்.சீ.பீ.டபிள்யு 59 இன் காணித்துண்டு இல.277 மற்றும் 292 உம் எல்லைகளாகக் கொண்டு ஹெக்டெயர்கள் பூச்சியம் தசம் இரண்டு நான்கு ஆறு (ஹெக். 0.246) அல்லது இரண்டு றூட் பதினேழு தசம் இரண்டு ஆறு பேர்ச்சுகள் (ஏ.0, றூ.2, பே.17.26) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மண், மரங்கள் பயிர்கள் கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும்.

**மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை.**

**ஒதுக்கங்கள்:**

1. இக்காணியில் அல்லது அதற்கு மேலுள்ள கனிமங்கள் (இவ்வனுமதியில் விலைமதிப்புள்ள கல் எனக் குறிப்பிடப்படும்) அனைத்தினதும் உரிமையும் அத்தகையவற்றை தோண்டுவதற்கும், தேடுவதற்கும், அங்கு பணியாற்றுவதற்கும் மற்றும் எடுத்துச் செல்வதற்குமான உரிமையும் அரசுக்கே உரியதாகும்.
2. காணி உரிமையாளருக்கு காணி மீதுள்ள உரிமையானது இவ்வனுமதித் திகதியில் தற்போதுள்ள எந்தவொரு வழியுரிமைக்கும் அல்லது பிற சேவக உரிமைக்கும் உட்பட்டதாகும்.

**நிபந்தனைகள்:**

1. உரிமையாளர் இங்கு குறிப்பிட்டுள்ள மேட்டு நிலத்தில் 0.101 ஹெக்டெயர்கள், நீர்ப்பாசன நிலத்தில் ஹெக்டயார்கள்/ஏக்கர்கள் துணைப்பிரிவின் அலகினை விட பரப்பளவில் குறைவான இக்காணியின் பிரிக்கப்பட்ட பங்கொன்றினை விற்பனை செய்யலாகாது.
2. உரிமையாளர் இங்கு குறிப்பிட்டுள்ள குறைந்தபட்சப் பகுதியை விடக் குறைவான பங்கின் அதாவது 1/2 பிரிக்கப்படாத பங்கினை விற்பனை செய்யக்கூடாது.
3. நிபந்தனை 1இல் குறிப்பிடப்பட்டுள்ள துணைப்பிரிவின் அலகினை விட பரப்பளவில் குறைவான இக்காணியின் பிரிக்கப்பட்ட பங்கொன்றிற்கு எந்வொரு நபரும் உரிமையாளராக முடியாது.
4. நிபந்தனை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள இக்காணியின் குறைந்தபட்சப் பகுதியை விடக் குறைவான பிரிக்கப்படாத பங்கொன்றிற்கு எந்தவொரு நபரையும் உரிமையாளராக்க முடியாது.
5. இக்காணியோ அல்லது அதன் எந்தவொரு பகுதியோ நீர்ப்பாய்ச்சத்தகு பிரதேசமாகவிருப்பின் அல்லது ஏற்கனவே கட்டுமானத்தின்போது கட்டப்பட்ட அல்லது இனிமேல் கட்டப்படவிருக்கும் நீர்ப்பாசனப் பணியின்போது நீர்ப்பாசனத்திற்கு உட்படுமாயின், உரிமையாளர் நீர்ப்பாசனப் பகுதியைப் பொறுத்து நீர்ப்பாசனக் கட்டளை (அத்தியாயம் 453) ஏற்பாடுகளுக்கும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளுக்கும் இணங்க வேண்டும்.
6. அரச முகவரின் எழுத்திலான அனுமதியையும் உரிய அதிகார சபையிடம் உரிமத்தினையும் பெற்றாலே ஒழிய உரிமையாளர் இக்காணியில் அல்லது அதன் உள்ளிருக்கும் கனிமங்களைத் தோண்டவோ தேடவோ எடுக்கவோ, உபயோகப்படுத்தவோ, விற்கவோ இல்லையெனில் அப்புறப்படுத்தவோ கூடாது.
7. பிரதேச செயலாளரின் எழுத்து மூலமான முன் அனுமதியின்றி காணியினது அல்லது அதன் எந்தவொருப் பகுதியையும் கைமாற்றக்கூடாது.

**மேற்குறிப்பிட்ட மூன்றாவது அட்டவணை.**

மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணையில் விபரித்த காணிக்கும் நிலமனைக்கும் பொருத்தப்பட்டுள்ள பொருத்து மற்றும் இயந்திர சாதனங்கள் உதிரிப்பாகங்களுடன் பின்வருமாறு.

| No. | Description | Quantity | Country |
|---|---|---|---|
| 1 | Paddy Drier 10,000 Kg (Rs.1,500,000/-) | 1 | |
| 2 | Boiler 40' x 12' (Rs. 500,000/=) | 1 | |
| 3 | Steam boiler, 2nd hand | 1 | Indian |
| 4 | Box Boiler (07 Years) | 1 | Local |
| 5 | Paddy steam tanks (@250 Kg) (07 Years) | 3 | Local |
| 6 | Huller (08 Years) | 1 | China |
| 7 | Polisher (20 hp) (09 Years) | 1 | China |
| 8 | Polisher (25 hp) (07 Years) | 1 | China |
| 9 | Separator (07 Years) | 1 | Local |
| 10 | Stoner (09 Years) | 1 | India |
| 11 | Dust fan (07 Years) | 1 | Local |
| 12 | Blower (08 Years) | 1 | Local |
| 13 | Flour grinder (07 Years) | 1 | India |
| 14 | Husk fan (07 Years) | 1 | Local |
| 15 | Elevator (07 Years) | 5 | Local |

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி

**திருமதி எம்.எம்.எஸ். சஞ்ஜீவனி**
**முகாமையாளர்**
**இலங்கை வங்கி**
**தம்புத்தேகம கிளை.**

**21.12.2023**

1975 BOC www.boc.lk A (lka) Fitch Rating, AAA Brand Finance Rating. Bank of Ceylon is a Licensed Commercial Bank supervised by the Central Bank of Sri Lanka.
Head Office, BOC Square, No.1, Bank of Ceylon Mawatha, Colombo 1.
BANK OF CEYLON BOC Bankers to the Nation

# இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.11.21 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு திருமதி எச்.எம்.யூ.பீ. ஹேரத் அத்தாட்சிப்படுத்திய 2019.06.04 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 560 இன் பேரில் கண்டி, ஸ்ரீமத் குடா ரத்வத்த மாவத்தை, இல. 191/56, எனும் முகவரியில் அமைந்த எக்மோ என்ரபிரைசஸ் பிரைவேற் லிமிடெற்றிடமிருந்து ரூபாய் எட்டு மில்லியன் கடன் மீது 2023.10.02 வரை முதலும் வட்டியும் ரூ. 6,267,439.90 (ஆறு மில்லியன் இருநூற்று அறுபத்தேழு ஆயிரத்து நானூற்று முப்பத்தொன்பது ரூபாய் தொண்ணூறு சதமும்) அத்துடன் ரூ. 5,066,674.00 (ஐந்து மில்லியன் அறுபத்தாறு ஆயிரத்து அறுநூற்று எழுபத்து நான்கு ரூபாய்) மீது ஆண்டுக்கு பதின்மூன்று தசம் எட்டு ஆறு (13.86%) வீதத்தில் 2023.10.03 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் ரூபாய் மூன்று மில்லியன் கடன் மீது 2023.10.02 வரை முதலும் வட்டியும் ரூ.1,453,223.39 (ஒரு மில்லியன் நானூற்று ஐம்பத்து மூன்று ஆயிரத்து இருநூற்று இருபத்து மூன்று ரூபாய் முப்பத்தொன்பது சதமும்) அத்துடன் ரூ. 1,166,674.00 (ஒரு மில்லியன் நூற்று அறுபத்தாறு ஆயிரத்து அறுநூற்று எழுபத்து நான்கு ரூபாய்) மீது ஆண்டுக்கு பதின்மூன்று தசம் எட்டு ஆறு (13.86%) வீதத்தில் 2023.10.03 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், இருநூற்று ஐம்பது ஆயிரம் ரூபாய் கடன் மீது 2023.10.02 வரை முதலும் வட்டியும் ரூ.312,670.85 (முந்நூற்றுப் பன்னிரெண்டு ஆயிரத்து அறுநூற்று எழுபது ரூபாய் எண்பத்தைந்து சதமும்) அத்துடன் ரூ.250,000.00 (இரு நூற்று ஐம்பது ஆயிரம் ரூபாய்) மீது ஆண்டுக்கு பன்னிரெண்டு (12%) வீதத்தில் 2023.10.03 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், ஒரு மில்லியன் நானூற்று எழுபத்திரெண்டு ஆயிரத்து ஐந்நூற்று நாற்பத்து நான்கு ரூபாய் தொண்ணூற்று நான்கு சதம் கடன் மீது 2023.10.02 வரை முதலும் வட்டியும் ரூ. 1,694,458.82 (ஒரு மில்லியன் அறுநூற்று தொண்ணூற்று நான்கு ஆயிரத்து நானூற்று ஐம்பத்தெட்டு ரூபாய் எண்பத்திரெண்டு சதமும்) அத்துடன் ரூ. 1,472,544.94 (ஒரு மில்லியன் நானூற்று எழுபத்திரெண்டு ஆயிரத்து ஐந்நூற்று நாற்பத்து நான்கு ரூபாய் தொண்ணூற்று நான்கு சதம்) மீது ஆண்டுக்கு ஆறு தசம் ஒன்பது மூன்று (6.93%) வீதத்தில் 2023.10.03. தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், இரண்டு மில்லியன் அறுநூற்று இருபத்தொன்பது ஆயிரத்து எழுநூற்று ஐம்பத்து இரண்டு ரூபாய் பதினாறு சதம் கடன் மீது 2023.10.02 வரை முதலும் வட்டியும் ரூ.3,028,545.18 (மூன்று மில்லியன் இருபத்தெட்டு ஆயிரத்து ஐந்நூற்று நாற்பத்தைந்து ரூபாய் பதினெட்டு சதமும்) அத்துடன் ரூ. 2,629,752.16 (இரண்டு மில்லியன் அறுநூற்று இருபத்தொன்பது ஆயிரத்து எழுநூற்று ஐம்பத்திரெண்டு ரூபாய் பதினாறு சதம்) மீது ஆண்டுக்கு ஆறு தசம் ஒன்பது மூன்று (6.93%) வீதத்தில் 2023.10.03 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் இரண்டு மில்லியன் ஐந்நூறு ஆயிரம் ரூபாய் நிரந்தர மேலதிகப்பற்று மீது 2023.10.02 வரை முதலும் வட்டியும் ரூ.3,919,371.63 (மூன்று மில்லியன் தொள்ளாயிரத்து பத்தொன்பது ஆயிரத்து முந்நூற்று எழுபத்தொரு ரூபாய் அறுபத்து மூன்று சதமும்) அத்துடன் ரூ. 2,500,000.00 (இரண்டு மில்லியன் ஐந்நூறு ஆயிரம் ரூபாய்) மீது ஆண்டுக்கு இருபத்தெட்டு தசம் ஏழு ஐந்து (28.75%) வீதத்தில் 2023.10.03 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,
2. பிரசித்த நொத்தாரிசு திருமதி எச்.எம்.யூ.பீ. ஹேரத் அத்தாட்சிப்படுத்திய 2019.06.04 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 560 இன் பேரில் ரூபாய் எட்டு மில்லியன் கடன் மீது ரூ. 6,267,439.90 (ஆறு மில்லியன் இருநூற்று அறுபத்தேழு ஆயிரத்து நானூற்று முப்பத்தொன்பது ரூபாய் தொண்ணூறு சதமும்) ரூபாய் மூன்று மில்லியன் கடன் மீது ரூ. 1,453,223.39 (ஒரு மில்லியன் நானூற்று ஐம்பத்து மூன்று ஆயிரத்து இருநூற்று இருபத்து மூன்று ரூபாய் முப்பத்தொன்பது சதமும்), ரூபாய் இருநூற்று ஐம்பது ஆயிரம் கடன் மீது ரூ. 312,670.85 (முந்நூற்றுப் பன்னிரெண்டு ஆயிரத்து அறுநூற்று எழுபது ரூபாய் எண்பத்தைந்து சதமும்), ஒரு மில்லியன் நானூற்று எழுபத்திரெண்டு ஆயிரத்து ஐந்நூற்று நாற்பத்து நான்கு ரூபாய் தொண்ணூற்று நான்கு சதம் கடன் மீது ரூ. 1,694,458.82 (ஒரு மில்லியன் அறுநூற்று தொண்ணூற்று நான்கு ஆயிரத்து நானூற்று ஐம்பத்தெட்டு ரூபாய் எண்பத்திரெண்டு சதமும்), இரண்டு மில்லியன் அறுநூற்று இருபத்தொன்பது ஆயிரத்து எழுநூற்று ஐம்பத்து இரண்டு ரூபாய் பதினாறு சதம் கடன் மீது ரூ. 3,028,545.18 (மூன்று மில்லியன் இருபத்தெட்டு ஆயிரத்து ஐந்நூற்று நாற்பத்தைந்து ரூபாய் பதினெட்டு சதமும்) இரண்டு மில்லியன் ஐந்நூறு ஆயிரம் ரூபாய் நிரந்தர மேலதிகப்பற்று மீது ரூ. 3,919,371.63 (மூன்று மில்லியன் தொள்ளாயிரத்து பத்தொன்பது ஆயிரத்து முந்நூற்று எழுபத்தொரு ரூபாய் அறுபத்து மூன்று சதமும்) அத்துடன் 2023.10.03 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை எனும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T.&.H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இவ் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி கட்டுகஸ்தோட்டைக் கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பட்ட அட்டவணை.**

மத்திய மாகாணம் கண்டி மாவட்டம் கண்டி மாநகர சபை நகர எல்லைகளுள் கங்கவட்ட கோரளை பிரதேச செயலகப் பிரிவில் வட்டாரன்தன்ன கிராம சேவகர் பிரிவில் வட்டாரன்தன்னயில் அமைந்த "வட்டாரன்தன்ன எஸ்டேற்" என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. குமாரசாமி தயாரித்த 1974.01.01 திகதியிட்ட வரைபடம் இல. 5631 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 01 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட மேற்குறித்த காணித்துண்டு 1 மேற்கூறிய வரைபடத்தின் படி வடக்கில் இக்காணியின் மீதிப்பாகமும், கிழக்கில் இக்காணியின் மீதிப்பாகம் எனினும் ஜயவர்தன உரிமை கோரும் காணி என பதிவு செய்திருப்பதும் தெற்கில் இக் காணியின் மீதிப்பாகம் ஜயவர்தனவுக்கு சொந்தமான காணி எனினும் வட்டாரன்தன்ன பெசேஜ் என பதிவுசெய்யப்பட்டிருப்பதும் மேற்கில் வட்டாரன்தன்ன பெசேஜ் எனினும் இக்காணியின் மீதிப்பாகம் என பதிவுசெய்யப்பட்டிருப்பதும் எல்லைகளாகக் கொண்டு முப்பது பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0, பே.30) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் கட்டிடம் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி கண்டி காணிப்பதிவகத்தில் பக்கம் A 668/127 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறிய காணி அண்மையில் மீளளவை செய்து பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாணம் கண்டி மாவட்டம் கண்டி மாநகர சபை நகர எல்லைகளுள் கங்கவட்ட கோரளை பிரதேச செயலகப் பிரிவில் வட்டாரன்தன்ன கிராம சேவகர் பிரிவில் வட்டாரன்தன்னயில் அமைந்த "வட்டாரன்தன்ன எஸ்டேற்" என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் சுசிரி ஏக்கநாயக்க தயாரித்த 2012.08.07 திகதியிட்ட வரைபடம் இல. 4786 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 01 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட மேற்குறித்த காணித்துண்டு 1 மேற்கூறிய வரைபடத்தின் படி வடக்கில் வட்டாரன்தன்ன வத்தயும், கிழக்கில் வட்டாரன்தன்ன வத்தயும் தெற்கில் வட்டாரன்தன்ன வத்தயும் மேற்கில் தொடன்வல - கண்டி பாதையும் எல்லைகளாகக் கொண்டு இருபத்தொன்பது தசம் இரண்டு ஐந்து பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0, பே.29.25) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் கட்டிடம் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி கண்டி காணிப்பதிவகத்தில் பக்கம் A 668/135 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

**இலங்கை வங்கி,**
**கட்டுகஸ்தோட்டை**

**எஸ்.எம்.ஆர்.எஸ். யாப்பா பண்டார**
**கிளை முகாமையாளர்**

1975 BOC CALL CENTRE www.boc.lk A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

The Housewives' companion
Classifieds on
Daily News

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

### கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை

# அலுவலக விடயங்களை கணனி மயப்படுத்தலுக்கான ஆலோசனை சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரல்

**Procurement No - PR 28/2023**

கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் அலுவலக விடயங்களை கணனி மயப்படுத்தலுக்காக ஆலோசனை சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. தகைமையுள்ள ஆலோசனை சேவைகளை வழங்க வேண்டியது, கீழே தரப்பட்டுள்ள மென்பொருள் மற்றும் சேவை ஸ்தாபிக்கும் செயற்றிட்டங்களுக்காகும்.

1. காலத்தின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் உத்தியோகபூர்வ இணைய தளத்தை உருவாக்குதல்.
2. கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் அலுவலக விடயங்களை கணனி மயப்படுத்தலுக்கு பொருத்தமான மென்பொருள் அமைப்பை ஸ்தாபித்தல்.

அவ் விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளும் போது கடைப்பிடிக்க வேண்டிய நிபந்தனைகள் மற்றும் விதிகள் கீழ்க்காணுமாறு அமையும்.

1. விலைக்கோரல் அரச பெறுகை வழிகாட்டல் செயற்பாட்டின் பிரகாரம் இடம்பெறும்.
2. மேற்படி சேவைகளுக்காக ஆலோசனைகளை வழங்குதல் சம்பந்தமாக 05 வருட அனுபவத்துடன் இருப்பதுடன் அதில் குறைந்த பட்சம் 03 வருடத்திற்குள் அரச துறை அல்லது தனியார் துறையின் நிறுவனங்களுக்காக தகவல் சேவை ஆலோசனைகளை வழங்குதல் சம்பந்தமாக அனுபவத்துடன் தகைமையுள்ள கேள்விதாரர்களுக்கு விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.
3. தனிநபர் ஆலோசகர்களுக்கு இதற்காக விலைமனுக்களை சமர்ப்பிக்க முடியாது.
4. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் (ஆலோசனை சேவை நிறுவனங்கள்) நிதிப்பிரிவு, கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபைக்கு 2024.01.30 முதல் 2024.02.12 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை அதிகாரசபையின் காசாளரிடம் மீளளிக்கப்படாத ரூ. 3500/- (+ அரச வரி) கட்டணம் செலுத்துவதன் மூலம் கேள்வி ஆவணத் தொகுதியைப் பெற்றுக் கொள்ளலாம்.
5. கேள்விக்கு முன்னரான கூட்டம் மற்றும் துறைசார் பரிசீலனை 2024.02.14 மு.ப. 10.00 இற்கு கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் கூட்ட மண்டபத்தில் நடைபெறும்.
6. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பொறியிடப்பட்ட கேள்வி ஆவணங்களை " பொது முகாமையாளர், கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை, 1ம் மாடி, தேசிய வீடமைப்பு திணைக்கள கட்டிடம், சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்த, கொழும்பு - 02" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது, கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
7. கீழ்க்காணும் முகவரிக்கு 2024.02.28 பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன்பு விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களைத் திறத்தல் அன்றே பி.ப. 2.00 இற்கு ஆரம்பிக்கப்படுவதுடன் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு இவ் வேளையில் சமுகமளிக்கலாம்.

**பொது முகாமையாளர்,**
**கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை,**
**முதலாம் மாடி,**
**தேசிய வீடமைப்பு திணைக்கள கட்டிடம்,**
**சேர். சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்த, கொழும்பு - 02**

---

Sri Lanka
YOU'LL COME BACK FOR MORE

## இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
## சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு
## இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம்

# விலைமனுக்கோரல்

## தேசிய போட்டிமுறையிலான ஏலம் (NCB)

**கொள்முதலின் பெயர் - 2024/2025 ஆம் ஆண்டுக்கான சர்வதேச ஊடகங்களை ஒழுங்கமைப்பதற்காக ஊக்குவிப்பாளர்கள், திரைப்பட இருப்பிட முகாமையாளர்கள் மற்றும் பிற வர்த்தகங்களை சுற்றுலா நோக்காககொண்ட முகாமைத்துவ நிறுவனத்தை தேர்வுசெய்தல்**

1. SLTPB இன் திணைக்களத்தின் கொள்முதல் குழுவின் தலைவரினால் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்திற்கு பணியமர்த்துவதற்காக 2024/2025 ஆம் ஆண்டுக்கான சுற்றுலா பயணங்களை ஏற்பாடு செய்வதற்காக இலக்கு முகாமைத்துவ நிறுவனத்தை (DMP) தெரிவு செய்வதற்கான முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.
2. மனுதாரர்கள் பின்வரும் தகுதிகளையும் அனுபவத்தையும் பெற்றிருக்க வேண்டும். கேள்வி மனுவுடன் மனுதாரர் பின்வரும் தேவைகளை சமர்ப்பிக்க வேண்டும்.

   i) 2024 ஆம் ஆண்டு உட்பட கடந்த 10 வருடங்களுக்குள் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தில் (SLTDA) பதிவு செய்யப்பட்ட சுற்றுலா நிறுவனமாக இருக்க வேண்டும். (2024 ஆம் ஆண்டு உட்பட கடந்த 10 வருடங்களுக்கான இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தில் (STDA) பதிவு செய்வதற்கான உரிமங்களின் பிரதிகளை இணைக்கவும்).

   ii) நிறுவப்பட்ட இலக்கு மேலாண்மை நிறுவனமாக உள்நாட்டு சுற்றுலா சேவைகளை கையாள்வதில் குறைந்தது 10 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

   iii) இதில் சமர்ப்பிக்கப்படும் ஆவண படிவத்தின்படி இந்தியா, சீனா, ஜெர்மனி, பிரான்ஸ், ஐக்கிய இராச்சியம், ரஷ்யா, மத்திய கிழக்கு, ஜப்பான், ஸ்காண்டிநேவியா, பெனெலக்ஸ், ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் உள்ளிட்ட முக்கிய ஆதார சந்தைகளில் முக்கிய/அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச சுற்றுலா செயற்பாட்டு நிறுவனங்களுடன் (நிறுவனங்களின் பெயர்களைக் குறிப்பிடவும்). பணிபுரியும் (2014 முதல் ஒப்பந்த ஒப்பந்தத் தகவல் மட்டுமே பரிசீலிக்கப்படும்) வேறு ஏதேனும் அரசு நிறுவனங்களுடன் துணை ஆவணங்களாக வெளிநாட்டு பயணங்கள்/பிரதிநிதித்துவங்கள் அனுபவம்

   (சர்வதேச ஊடகங்கள், இராஜதந்திரிகள் போன்றவற்றைக் கையாள்வது.) போன்ற உத்தியோகபூர்வ ஆதாரங்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டும்.

   iv) உள்ளூர் அல்லது சர்வதேச சுற்றுலா நிறுவனங்களின் உறுப்பினர் என்பதற்கான (சான்றிதழ்கள் அல்லது பிற சான்றுகளை வழங்கவும்).

   v) நிறுவனம் இலங்கையில் சட்டப்பூர்வ நிறுவனமாக பதிவு செய்யப்பட வேண்டும். (பதிவுச் சான்றிதழின் நகல் சமர்ப்பிக்கப்பட வேண்டும்).

   2.1 பிற தேவைகள் - உள்நாட்டு அல்லது சர்வதேச சுற்றுலா விருதுகளை வைத்திருப்பது கூடுதல் தகுதியாக இருக்கும் (சான்றிதழ்கள் அல்லது பிற சான்றுகளை வழங்கவும்)

3. தேசிய கொள்முதல் வழிகாட்டி 2006 ன் கீழ் தேசிய போட்டி ஏல முறையை பின்பற்றி ஏலம் நடாத்தப்படும். **https://www.treasury.gov.lk/web/procurement-guidelines-and-manuals/section/ procurement%20guidelines**
4. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **nithinip@srilanka.travel** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு கோரிக்கை ஒன்றினை அனுப்பி மற்றும் அதன் பிரதியை **procurement@srilanka.travel** என்ற முகவரிக்கு அனுப்புவதன் மூலம் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரிடமிருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.
5. ஆர்வமுள்ள மனுதாரர்கள் மனு ஆவணங்களை **www.srilanka.travel** எனும் இணையத்தளதினூடாக எவ்வித கட்டணமுமின்றி இலவசமாக பரிசீலனை செய்துக்கொள்ளலாம்.
6. எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை **2024.02.16 ஆம் திகதிக்கு** முன்னர் மீளச்செலுத்தப்படாத **ரூ.20,000/=** (இருபதாயிரம் ரூபாய்) மீள்செலுத்தப்படாத **கட்டணத்துடன் இலங்கை வங்கி - கூட்டுறவு கிளை 007119985 எனும் கணக்கிலக்கத்தில்** இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் பெயரில் எனும் பெயரில் வைப்பிலிட்ட இரசீதின் அசல் பிரதியுடன் மனு ஆவணத்தை **nithinip@srilanka.travel** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
   - மனுதாரரின் பெயர்
   - தொடர்புகொள்ள வேண்டிய நபரின் பெயர் மற்றும் மனுதாரரின் தொடர்பு விபரங்கள்.
   - தொடர்புகொள்ள வேண்டிய நபரின் மின்னஞ்சல் முகவரி.
7. மனுக்கு முந்திய கூட்டமானது **2024.02.08 ஆம் திகதி மு.ப 11.00** மணிக்கு இல.78, காலி வீதி, கொழும்பு 03 இலுள்ள இலங்கை சுற்றுலாத்துறை சமுத்ரா ஹோட்டல் (கீழ் மாடியில் கூட்ட அறையில்) இடம்பெறும்.
8. அனைத்து விலைமனுக்களும் நிபந்தனைகளற்று மனுப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிணைத்தொகையுடன் காணப்படுவதோடு பத்திரத்தில் உள்ளவாறு முகாமைத்துவ பணிப்பாளர், இலங்கை சுற்றுலாத்துறை மேம்படுத்தல் பணியகம், இல.80, காலி வீதி, கொழும்பு 03 க்காக இலங்கை ரூபா நான்கு இலட்சம் பெறுமதியான **(ரூ.1,000.000.00)** தொகை இலங்கையில் பதிவினையுடைய **A** தர கொமர்ஷல் வங்கியிலிருந்து வெளியிடப்பட்டதாக காணப்பட வேண்டும். அவை விலைமனுக்கோரல் முடிவுத்திகதியிலிருந்து **119 நாட்கள் வரை** செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
9. கேள்வி மனுக்களை தலைவர், திணைக்களத்தின் பெறுகைக்குழு, இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம், இல 80, காலி வீதி, கொழும்பு 03 சமர்ப்பித்தல் வேண்டும், மனுக்கள் கொள்முதல் பிரிவு (கீழ்மாடி), இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம், இல 80, காலி வீதி, கொழும்பு 03 எனும் முகவரிக்கு **2024.02.19 ஆம் திகதி பி.ப.02.00** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பி வைத்தல் வேண்டும். மனுக்கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் அதே முகவரியில் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
10. மனு ஆவணங்களை மாற்ற முடியாது.
11. காலதாமதமாக கிடைக்கப்பெறும் மனுக்கள் நிராகரிக்கப்படும்
12. மேலதிக விபரங்களுக்கு கொள்முதல் தலைவரிடம் **(nithinip@srilanka.travel , 0112426800 (Ext 117)** ஊடாக அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளலாம்.
13. விலைமனுக்கோரல் அல்லது மனுக்கோரலை நிறுத்துதல் போன்ற அனைத்து அதிகாரமும் வழங்கல் சபைக்கு உண்டு.

தலைவர்,
அமைச்சின் கொள்முதல் குழு,
**இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம்,**
இல-80, காலி வீதி,
கொழும்பு 03.

SELACINE

---

# INVITATION FOR BIDS (IFB)

**DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE**

## NANATTAN PRADESHIYA SABHA

**EUROPEAN UNION (EU) & WORLD BANK (WB) FUNDED**

## LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received Fund from European Union (EU) and from World Bank (WB) towards the cost of Local Development Support Project (LDSP), and intends to apply part of the proceeds of this fund to payments under the LDSP PT3.
2. The Chairman of Local Authority Procurement Committee (LAPC) on behalf of Nanattan Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified Bidders for the Work(s) listed in the table below;

| No | Contract No. | Name of the Contract | TEC Rs. in Mn | CIDA | Required Bid Security | | Contract Period |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Bid Bond Amount (Rs.) | Validity Period | |
| 01 | LDSP/NP/MN/ NAPS/2024/PT3/02 | Renovation of Nanattan Sub Office of Nanattan PS | 4.958 | Buildings C8 or above | 75,000.00 | 2024.05.29 | 84 Days |
| 02 | LDSP/NP/MN/ NAPS/2024/PT3/04 | Renovation of Public Library at Vankalai Sub Office of Nanattan PS | 3.512 | Buildings C8 or above | 50,000.00 | 2024.05.29 | 84 Days |

3. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) Procedure.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been required valid CIDA Registration in Buildings Construction for the Grade C8 or above and possess valid Business or Company Registration.
5. Qualification requirements to qualify for contract award is given in Section 4 of the Qualification Information and Section 5 of the Schedule in the Bidding Document.
6. Interested bidders may obtain further information from the Chairman, Nanattan Pradeshiya Sabha [Telephone No: 0232050652 / Fax No: 0232051720 / Email ID: nanattanpsabha@gmail.com] and inspect Bidding Documents at address Nanattan Pradeshiya Sabha, Nanattan, Mannar from 08:30 hrs to 16:15 hrs.
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested Bidders on the submission of a written application to the Chairman, Nanattan Pradeshiya Sabha from 30th of January 2024 until 27th of February 2024 from 09:00 hrs to 15:00 hrs on normal working days upon payment of a non-refundable fee of Rupees Four Thousand (Rs. 4,000.00). The method of payment will be by Cash.
8. Duly Completed and Signed **Bids** in 02 copies indicating "Original" and "Duplicate" should be delivered by Registered Post to the address at the Chairman, Nanattan Pradeshiya Sabha, Nanattan, Mannar or should be deposited in the Tender Box kept in the Main Office of the Nanattan Pradeshiya Sabha, Nanattan, Mannar on or before 28th of February 2024 at 10:30 hrs. The top left-hand corner of the envelope enclosing the Bids should be marked with Contract No: and Name of the Contract. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
9. Bids shall be valid up to 01st of May 2024.
10. All bids shall be accompanied by a Bid-Security, as mention in the table above. Bid Security shall be valid up to the date mentioned in the table above, shall be same as Schedule Clause 16.
11. The Pre-Bid Meeting will be held on 20th of February 2024 at 10:30 hrs at the Main Office of Nanattan Pradeshiya Sabha, Nanattan, Mannar.

The address(es) referred to above is (are):

Chairman,
Local Authority Procurement Committee (LAPC)
Nanattan Pradeshiya Sabha
Nanattan, Mannar.

Tel No: 0232050652
Fax No: 0232051720
Email ID: nanattanpsabha@gmail.com

---

# பெறுகை அறிவித்தல்

## மாகாண கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
## தொழில்நுட்ப கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்
## கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல

**நிதி வழங்குதல் — சர்வதேச அபிவிருத்திக்கான OPEC நிதி மற்றும் இலங்கை அரசு (GOSL)**

**இங்கு கீழ்க்காணும் செயற்றிட்டத்திற்காக வடமத்திய மாகாண கல்வித் திணைக்கள பெறுகைக்குழுவின் தலைவரால் பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.**

| தொடர் இல | விபரம் | கேள்விப் பிணையின் பெறுமதி (இலங்கை ரூபா) | மீளளிக்கப் படாத கட்டணம் (இலங்கை ரூபா) | ஒப்பந்தக் காலம் நாட்கள் | பதிவுத் தரம் |
|---|---|---|---|---|---|
| 01 | பொ/விஜித மத்தியமகா வித்தியாலயத்தின் மூன்று மாடி தொழில்நுட்பப் பீடம் நிர்மாணித்தல் (மிகுதிவேலைகள்) | 1,250,000.00 | 15,000.00 | 280 நாட்கள் | C04 அல்லது அதற்கு மேல் |

01. கேள்வி வைத்தல் தேசிய போட்டி கேள்விகோரல் மூலம் இடம்பெறும்.
02. கேள்வி சமர்ப்பிக்கும் சகல கேள்விதாரர்களும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) பதிவுசெய்த செல்லுபடியாகும் ஒப்பந்தக்காரராக இருப்பதுடன் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருத்தல் வேண்டும்.
03. நிர்மாண ஒப்பந்தங்களுடன் சம்பந்தப்பட்ட சகல கேள்விப் பத்திரங்களையும் பரீட்சித்தல் அநுராதபுரத்தில் அமைந்துள்ள வடமத்திய மாகாண கல்வி திணைக்களத்தின் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் (நிதி) இடம் (தொ.பே. இலக்கம் : 025-2222432 பெக்ஸ் : 0252222432) மற்றும் மின்னஞ்சல் ncpedro@gmail.com) மற்றும் பொலன்னறுவை வலய கல்விப் பணிமனையின் கணக்காளரிடம் (தொ.பே. இல: 027-2226982) அலுவலக நேரங்களில் (மு.ப.9.00 முதல் பி.ப. 3.00 இற்கிடையில்) 2024 பெப்ரவரி 20 வரை மேற்கொள்ளலாம்.
04. நிர்மாண ஒப்பந்தத்துடன் சம்பந்தப்பட்ட சகல வேலை விபரங்கள் மற்றும் வரைபடம் பற்றிய தகவல்களை அநுராதபுரத்தில் அமைந்துள்ள வடமத்திய மாகாணத்தின் மாகாண பொறியியல் திணைக்களத்தின் பாடசாலை கட்டிட வேலை பற்றிய பொறியிலாளரிடம் பெற்றுக்கொள்ள முடிவதுடன், அவ் அலுவலகத்தின் தொடர்பாடல் வசதிகள் கீழ் தரப்பட்டுள்ளது. தொ.பே. இலக்கம் : 025-2225916
05. தகைமையுடைய கேள்விதாரர்களுக்கு அநுராதபுரம் வடமத்திய மாகாணத்தின் மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதம கணக்காளருக்கு எழுத்துமூல விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து மற்றும் பொலன்னறுவை வலயக்கல்விப் பணிமனையின் கணக்காளருக்கு எழுத்துமூல விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட கேள்வி பத்திரங்களை கொள்வனவு செய்ய முடிவதுடன், கேள்விப் பத்திரங்களை விநியோகித்தல் 2024 ஜனவரி 30 முதல் 2024 பெப்ரவரி 20 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையாகும்.
06. கேள்வி பத்திரத்தின் "மூலப்பிரதி" மற்றும் "இரண்டாம் பிரதியை" வேறுவேறு உறைகளில் இட்டு பொறியிட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையின் செயற்றிட்டம் மற்றும் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தை குறிப்பிட்டு மூலப்பிரதி மற்றும் இரண்டாம் பிரதியை ஒரே உறையில் இட்டு தலைவர், பெறுகைக்குழு, மாகாண கல்வித் திணைக்களம், வட மத்திய மாகாணம், அநுராதபுரம் என்ற முகவரிக்கு குறித்த தினம், குறித்த நேரத்திற்கு முன்பு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் (நிதி)இன் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
07. கேள்விகளின் செல்லுபடி காலம், தகைமை மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட நிபந்தனைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
08. கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் 2024 பெப்ரவரி 21 பி.ப. 2.00 இற்கு முடிவடைவதுடன், சமர்ப்பிக்கப்படும் நிபந்தனையற்ற கேள்விப் பிணைமுறியை கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்படும் மாதிரிக்கு அமைவாக மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி அல்லது நிர்மாண பாதுகாப்பு நிதியிலிருந்து பெற்றுக்கொள்ளல் வேண்டும். இல்லையெனில் அத்தொகையிலும் செலுத்தலாம். கேள்விப் பிணைமுறியை இங்கு கேள்வி ஆவணங்கள் குறிப்பிடப்படும் தினம் வரை செல்லுபடியாவதுடன், உள்நாட்டில் காசாக்கக்கூடிய ஆற்றல் இருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி குறித்த நேரம் தாண்டியவுடன் கேள்விப்பத்திரங்கள் திறத்தல் ஆரம்பிக்கப்படுவதுடன், அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
09. கேள்விக்கு முன்னரான கூட்டம் 2024.02.14 மு.ப. 10.00 இற்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் நடைபெறும்.
10. கிடைக்கப்பெற்றுள்ள கேள்விகள் ஒன்று அல்லது சகலதையும் ஒப்பந்தங்கள் வழங்குவதற்கு முன்னர் எவ்வேளையிலும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கு உள்ள உரிமை திணைக்கள பெறுகைக் குழுவிற்கு உரித்தாவதுடன், அதன் காரணமாக கேள்விதாரர் / கேள்விதாரர்களுடன் எந்த இணக்கப்பாடு அல்லது பொறுப்பும் இல்லை என்பதுடன் அவ்வாறு தீர்மானிப்பதற்கு காரணமான விடயங்கள் பற்றி தெரிவிப்பதற்கும் எந்த இணக்கப்பாடும் இல்லை.

**தலைவர் / மாகாண கல்விப் பணிப்பாளர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**மாகாண கல்வித் திணைக்களம்,**
**வடமத்திய மாகாணம்,**
**அநுராதபுரம்.**
**திகதி : 2024.01.30**

### இளையோர் உலகக் கிண்ணம்:

# சுப்பர் சிக்ஸில் இலங்கை இன்று மேற்கிந்திய தீவுகளுடன் மோதல்

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் 19 வயதுக்கு உட்பட்ட உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் சுப்பர் சிக்ஸ் சுற்றுக்கு முன்னேறி இருக்கும் இலங்கை அணி தனது முதல் போட்டியில் இன்று மேற்கிந்திய தீவுகளை எதிர்கொள்ளவுள்ளது.

கிம்பர்லியில் நடைபெறும் இன்றைய ஆட்டம் தொடரின் அரையிறுதிக்கு முன்னெறுவதற்கு தீர்க்கமானதாக அமையவுள்ளது.

இலங்கை இளையோர் அணி நேற்று முன்தினம் (28) நடைபெற்ற அவுஸ்திரேலிய இளையோர் அணிக்கு எதிரான சி குழுவுக்கான கடைசிப் போட்டியில் 6 விக்கெட்டுகளால் தோல்வி அடைந்தது சுப்பர் சிக்ஸ் சுற்றில் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

குழு நிலையில் சுப்பர் சிக்ஸ் சுற்றுக்கு முன்னேறும் அணியுடனான வெற்றி மூலம் பெறும் புள்ளிகள் சுப்பர் சிக்ஸ் புள்ளிப் பட்டியலில் சேர்க்கப்படும். எனினும் இலங்கை அணி குழுநிலையில் சிம்பாப்வேயுக்கு எதிராக பெற்ற வெற்றியினால் 2 புள்ளிகளுடனேயே சுப்பர் சிக்ஸ் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

இந்நிலையில் சுப்பர் சிக்ஸ் சுற்றில் ஓர் அணி மற்ற அணியுடன் இரண்டு போட்டிகளில் ஆடும். இதில் இன்று மேற்கிந்திய தீவுகளை எதிர்கொள்ளும் இலங்கை இளையோர் அணி எதிர்வரும் பெப்ரவரி 2 ஆம் திகதி போட்டியை நடத்தும் தென்னாபிரிக்காவை எதிர்கொள்ளும்.

12 அணிகள் இரண்டு குழுக்களாக பிரிக்கப்பட்டு நடைபெறும் சுப்பர் சிக்ஸ் சுற்றுப் போட்டியில் இரண்டு குழுக்களிலும் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகளே அரையிறுதிக்கு முன்னேறும்.

இதில் இலங்கை இளையோர் அணி சுப்பர் சிக்ஸ் சுற்றின் புள்ளிப் பட்டியலில் அவுஸ்திரேலியாவுக்கு அடுத்து இரண்டாவது இடத்தில் காணப்படுகிறது. என்றாலும் அரையிறுதிக்கு முன்னேறுவதற்கு இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெறுவது தீர்க்கமானதாக அமையும்.



# இலங்கை டெஸ்ட் போட்டிக்கான ஆப்கானிஸ்தான் அணி அறிவிப்பு



இலங்கைக்கு எதிரான ஒரே ஒரு டெஸ்ட் போட்டிக்கான 16 பேர் கொண்ட ஆப்கானிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் உபாதைக்கு உள்ளான முன்னணி சுழற்பந்து வீச்சாளர் ரஷித் கான் அணியில் இடம்பெறவில்லை.

இலங்கை மற்றும் ஆப்கான் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் போட்டி கொழும்பு, எஸ்.எஸ்.சி. மைதானத்தில் எதிர்வரும் பெப்ரவரி 2 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இதனைத் தொடர்ந்து இரு அணிகளும் மோதும் தலா மூன்று ஒருநாள் மற்றும் டி20 போட்டிகள் நடைபெறவுள்ளன. இந்த தொடரில் பங்கேற்பதற்கான ஆப்கான் அணி இன்று (30) இலங்கை வரவுள்ளது.

இந்நிலையில் அறிவிக்கப்பட்டிருக்கும் ஆப்கான் டெஸ்ட் அணியில் ரஷீத் கான் இடம்பெறாத நிலையில் சுழற்பந்து வீச்சாளர் காயிஸ் அஹமது அழைக்கப்பட்டுள்ளார். தவிர துடுப்பாட்ட வீரர் நூர் அலி, இடது கை சுழற்பந்து வீச்சாளர் சியா உர் ரஹ்மான், விக்கெட்காப்பு துடுப்பாட்ட வீரர் முஹமது இஷாக் மற்றும் வேகப்பந்து வீச்சாளர் நவீட் சத்ரான் புதுமுக வீரர்களாக அழைக்கப்பட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தான் அணி கடைசியாக கடந்த 2023 ஜூன் மாதம் டெஸ்ட் போட்டி ஒன்றில் ஆடியபோது, அந்த அணி பங்களாதேஷிடம் 546 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை சந்தித்தது. அந்த அணி டெஸ்ட் போட்டி ஒன்றில் இலங்கை அணியை எதிர்கொள்வது இது முதல்முறையாக அமையவுள்ளது.

**ஆப்கான் அணி:** ஹஷ்மதுல்லா ஷஹிதி (தலைவர்), இப்ராஹிம் சத்ரான், அப்துல் மலிக், நூர் அலி சத்ரான், ரஹ்மத் ஷா (உப தலைவர்), பாஹிர் ஷா, நாசிர் ஜமால், இக்ராம் அலிகில் (வி.கா.), முஹமது இஷாக் (வி.கா.), கைஸ் அஹமது, சியா உர் ரஹ்மான், சாஹிர் கான், யாமின் அஹமட்சாய், நிஜாத் மசூத், முஹமது சலீம் மற்றும் நவீட் சத்ரான்.

# சர்வதேச செய்திகள்

## மோனாலிசா ஓவியம் மீது ஆர்வலர்கள் 'சூப்' வீச்சு

ஓவியர் லியோனார்டோ டாவின்சியின் பிரபல மோனாலிசா ஓவியத்தின் மீது இரு பெண் ஆர்வலர்கள் சூப்பைத் தெளித்துள்ளனர். ஆனால் ஓவியம், குண்டு கூடப் புக முடியாத கனத்த கண்ணாடிச் சட்டத்தால் மூடப்பட்டிருப்பதால் சேதம் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை. 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மோனாலிசா ஓவியம் உலகின் மிகச் சிறந்த ஓவியங்களுள் ஒன்றாகும்.

அந்தச் சம்பவம் பிரான்ஸ் தலைநகரான பாரிஸில் உள்ள லூவர் அருங்காட்சியகத்தில் நேற்று முன்தினம் (28) நடந்தது.

“எது முக்கியம்? கலையா? ஆரோக்கியமான, நிலைத்தன்மையுடன் உணவுப் பொருட்களை உண்பதற்கான உரிமையா?” என்று இரு பெண்களும் ஓவியத்துக்கு முன் நின்று கேள்வி எழுப்பியதாகத் தெரிவிக்கப்பட்டது. பிரான்ஸ் விவசாயிகள் வேலையிடத்தில் உயிரிழப்பதை அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.



கடந்த சில நாட்களாக பிரான்ஸ் விவசாயிகள் கூடுதல் சம்பளம், வரிக்கழிவு கேட்டுப் போராட்டம் நடத்தி வருகின்றனர். விதிமுறைகளைத் தளர்த்தும்படியும் அவர்கள் கோருகின்றனர்.

அதை எதிரொலிக்கப் பெண்கள் இச்செயலில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது.

## ஜோர்தான் தாக்குதல்: அமெ. குற்றச்சாட்டை ஈரான் மறுப்பு

மூன்று அமெரிக்க இராணுவத்தினர் கொல்லப்பட்ட ஜோர்தானில் இடம்பெற்ற ஆளில்ல விமானத் தாக்குதலில் ஈரான் ஆதரவு போராட்டக் குழுக்கள் தொடர்புபட்டிருப்பதாக அமெரிக்கா மற்றும் பிரிட்டன் சுமத்தும் குற்றச்சாட்டை ஈரான் மறுத்துள்ளது.

“பிராந்தியத்தின் யதார்த்தத்தை மாற்றும் பிரத்தியேக அரசியல் இலக்குகளுடன் தொடர்புபட்டே இந்தக் கூற்றுகள் மேற்கொள்ளப்படுகின்றன” என்று ஈரான் வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் நாசர் கனானி அந்நாட்டின் உத்தியோபூர்வ இர்னா செய்தி நிறுவத்திற்கு தெரிவித்துள்ளார்.

எனினும் ஈராக்கில் இயங்கும் ஈரான் ஆதரவு போராட்டக் குழுக்களில் ஒன்றான இஸ்லாமிய எதிர்ப்பாளர்கள் அமைப்பு இந்தத் தாக்குதலுக்கு பொறுப்பேற்றுள்ளது.

சிரியா மற்றும் ஈராக்கில் இயங்கும் கடும்போக்கு ஈரான் ஆதரவு குழுக்கள் இந்தத் தாக்குதலின் பின்னணியில் உள்ளன என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நேற்று முன்தினம் குறிப்பிட்டார்.

இது அடிப்படையற்றது என்று கனானி நேற்று தெரிவித்தார்.



சிரிய எல்லையில் ஜோர்தானில் உள்ள அமெரிக்க தளம் ஒன்றின் மீது நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த ஆளில்லா விமானத் தாக்குதலில் மூன்று அமெரிக்க படையினர் கொல்லப்பட்டதோடு மேலும் 34 பேர் காயமடைந்தனர்.

சிரியா மற்றும் ஈராக்கில் அமெரிக்காவின் தொடர்ச்சியான தாக்குதல்கள் அதேபோன்று காசாவில் தொடரும் போர் பிராந்தியத்தின் ஸ்திரமற்ற நிலையை தீவிரப்படுத்தும் என்று ஈரான் வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் எச்சரித்தார்.

எதிர்ப்புக் குழுக்கள் ஈரானிடம் இருந்து உத்தரவுகளை பெறுவதில்லை என்றும் கனானி குறிப்பிட்டார்.

காசா போரை ஒட்டி ஏற்கனவே மத்திய கிழக்கில் பதற்றம் தீவிரம் அடைந்திருக்கும் சூழலிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேலுடன் தொடர்புபட்ட நால்வருக்கு ஈரானில் தூக்கு

இஸ்ரேலின் உளவு நடவடிக்கையுடன் தொடர்புபட்டதாக கூறப்பட்ட நால்வருக்கு ஈரானில் நேற்று (29) மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இவர்களின் உச்ச நீதிமன்ற மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டதை அடுத்து மரண தண்டனை நிறைவேற்றப்பட்டிருப்பதாக ஈரானிய அரச ஊடகம் கூறியது. இஸ்ரேலிய மொசாட் உளவுப் பிரிவின் உத்தரவின்படி குண்டு வைக்க முயன்றதாகவே இந்த நால்வர் மீதும் குற்றம்சாட்டப்பட்டது.



ஆயுதப் படைகளுக்கான தளபாடங்களை உற்பத்தி செய்யும் மத்திய நகரான இஸ்பஹானில் உள்ள தொழில்சாலை ஒன்றை தாக்குவதற்காக இவர்கள் ஈராக்கின் வடக்கு குர்திஷ் பிராந்தியத்தில் இருந்து ஈரானுக்கு சட்ட விரோதமாக ஊடுருவி இருப்பதாக குற்றம்சாட்டப்பட்டது. கடந்த 2022 கோடைகாலத்தில் இந்த நடவடிக்கைக்கு திட்டமிடப்பட்டிருந்தபோதும் ஈரான் உளவுப் பிரிவு இதனை முறியடித்துள்ளது.

கடந்த டிசம்பர் பிற்பகுதியிலும் இஸ்ரேலின் மோசாட்டுடன் தொடர்புபட்டதாக கூறி ஒரு பெண் மற்றும் மூன்று ஆண்டவர் மீது ஈரானில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# காசாவுக்கான ஐ.நா உதவி நிறுவனத்தின் நிதிகள் நிறுத்தப்பட்டதால் பாரிய மனிதாபிமான நெருக்கடி

## போர் நிறுத்தத்தில் ஹமாஸ் நிலைப்பாட்டில் உறுதி

தெற்கு காசாவில் இஸ்ரேலிய படை தொடர்ந்து உக்கிர தாக்குதல்களை நடத்தி அங்கு உயிர்ச் சேதங்கள் அதிகரித்து வரும் சூழலில் காசாவில் இயங்கும் ஐ.நாவின் மிகப்பெரிய நிறுவனமாக பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனத்திற்கு நிதி அளிப்பதை மேலும் பல நாடுகள் நிறுத்தியுள்ளன.

இது ஏற்கனவே பாரிய மனிதாபிமான நெருக்கடியை சந்தித்திருக்கும் காசாவில் நிலைமையை மேலும் மோசமடையச் செய்துள்ளது.

ஐ.நா நிறுவனத்திற்கு நிதி அளிப்பதை இடை நிறுத்தியதாக ஜப்பான் மற்றும் ஆஸ்திரிய நாடுகளும் அறிவித்துள்ளன. ஏற்கனவே அமெரிக்கா, பிரிட்டன் போன்ற முக்கிய நாடுகள் தனது நிதியை இடைநிறுத்தியுள்ளன.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலில் 12 ஐ.நா பணியாளர்கள் தொடர்புபட்டிருப்பதாக குற்றம்சாட்டப்பட்டதை அடுத்தே மேற்குல நாடுகள் பல அந்த ஐ.நா நிறுவனத்திற்கான நிதியை இடைநிறுத்தின.

இது தொடர்பி பல ஊழியர்களை பணி நீக்கம் செய்த ஐ.நா நிறுவனம் விசாரணைகளை ஆரம்பித்திருப்பதாகவும் கூறியது.

இதில் நன்கொடையை நிறுத்தி இருக்கும் நாடுகள் 2022 இல் மொத்தம் 667.2 மில்லியன் நிதியை அளித்திருப்பதோடு இதனுடன் ஒப்பிடுகையில் மற்ற நன்கொடை நாடுகள் 496.5 மில்லியன் டொலர்களையே வழங்கி இருப்பதாக பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இது பெரும் அவநம்பிக்கையை ஏற்படுத்தி இருப்பதாகவும் காசாவில் மனிதாபிமான தேவைகள் ஒவ்வொரு மணித்தியாலமும் அகதிகரித்து வருவதாகயும் அந்த ஐ.நா நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

நிதியை இடைநிறுத்திய நாடுகள் பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனத்தின் தொடர்ச்சியான செயற்பாடுகளை உறுதி செய்ய வேண்டும் என்று ஐ.நா. செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ் எக்ஸ் சமூகதளத்தில் வலியுறுத்தியுள்ளார்.

சாசாவில் உள்ள சுமார் 2 மில்லியன் மக்களின் நாளாந்த வாழ்வு இந்த ஐ.நா நிறுவனத்திலேயே தங்கியுள்ளது.

இந்நிலையில் காசாவில் கான் யூனிஸ் நகரை மையப்படுத்தியே தற்போது மோதல் தீவிரம் அடைந்துள்ளது. இஸ்ரேலிய படையினர் மற்றும் பலஸ்தீன போராளிகள் தரைவழி மோதலில் ஈடுபட்டிருக்கும் சூழலில் இஸ்ரேலிய போர் விமானங்கள் குண்டுகளை வீசி வரும் அதேநேரம் இஸ்ரேலின் பீரங்கி தாக்குதல்களும் உக்கிரம் அடைந்துள்ளன.

மறுபுறும் வடக்கு காசாவின் ஷட்டி அகதி முகம் ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல் ஒன்றில் 10 பேர் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சு கூறியது. காசா நகரில் உள்ள அல் ரிமால் பகுதியில் குறைந்தது ஐந்து வீடுகள் மீது நடத்தப்பட்ட வான் தாக்குதல்களில் பலர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா கூறியது.

காசா மீதான உக்கிர தாக்குதல்களில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு தொடக்கம் 140 பேர் வரை கொல்லப்பட்டிருப்பதோடு இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 20 பேர் பலியாகி இருப்பதாக காசா சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடக்கம் காசா மீது இஸ்ரேல் நடத்தி வரும் சரமாரித் தாக்குதல்களில் கொல்லப்பட்டோர் எண்ணிக்கை 26,500ஐ தாண்டி அதிகரித்து வருகிறது. இதில் 70 வீதத்திற்கும் அதிகமானவர்கள் பெண்கள் மற்றும் சிறுவர்களாவர்.

காசாவில் தொடரும் தாக்குதல்களால் அங்குள்ள 2.4 மில்லியன் மக்கள் தொகையில் அனைவரும்போல் தமது வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். ஆரம்பத்தில் வடக்கு காசாவில் போர் உக்கிரம் அடைந்தபோதும் அங்கிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் தெற்கு காசாவில் குறிப்பாக கான் யூனிஸ் நகரில் அடைக்கலம் பெற்றனர்.

தற்போது கான் யூனிஸ் நகரில் தாக்குதல் தீவிரம் அடைந்திருக்கும் நிலையில் மக்கள் மேலும் தெற்காக எகிப்து எல்லையை ஒட்டிய ராப பகுதியில் அடைக்கலம் பெற்று வருகின்றனர்.

காசா மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் புதிய குடியேற்றங்களுக்கு அழைப்பு விடுக்கும் இஸ்ரேலில் இடம்பெற்ற தீவிர வலதுசாரிகளின் மாநாடு ஒன்றில் இஸ்ரேலிய அரசின் பல உறுப்பினர்களும் பங்கேற்றுள்ளனர்.

ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு ஜெரூசலத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த மாநாட்டை தீவிர வலதுசாரி நஹால் அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. “குடியேற்றவாசிகள் பாதுகாப்பு மற்றும் வெற்றியை கொண்டுவருவர்” என்ற தொனிப் பொருளிலேயே இந்த மாநாடு இடம்பெற்றது.

இதில் காசாவில் இஸ்ரேலிய குடியேற்றங்களை மீளமைப்பது மற்றும் காசாவில் இருந்து பலஸ்தீனர்களை அகற்றுவதற்கு ஆதரவு வெளியிடப்பட்டதோடு இந்த மாநாட்டில் குறைந்தது 12 இஸ்ரேலிய அமைச்சர்கள் பங்கேற்றிருந்தனர்.

காசாவில் 38 ஆண்டு ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டுவந்து கடந்த 2005 இல் இஸ்ரேலிய படைகள் மற்றும் குடியேற்றவாசிகள் அங்கிருந்து வெளியேறினர். இந்நிலையில் காசா மீதான இஸ்ரேலின் போருக்குப் பின்னர் அந்தப் பகுதியை யார் ஆட்சி புரிவது என்ற விவாதம் வலுத்துள்ளது.

இந்நிலையில் காசாவில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு அங்கிருந்து அனைத்துப் படைகளும் வாபஸ் பெறுவது உறுதி செய்யப்பட்டாலேயே பணயக்கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்று ஹமாஸ் அமைப்பு மீண்டும் ஒரு முறை தமது நிலைப்பாட்டை வலியுறுத்தியுள்ளது.

“காசா பகுதியில் விரிவான ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஆக்கிரமிப்பாளர்களின் (இஸ்ரேலின்) இணக்கத்திலேயே பாரிஸ் சந்திப்பின் வெற்றி தங்கியுள்ளது” என்று ஹமாஸ் மூத்த அதிகாரியான சமி அபூ சுஹ்ரி ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.



காசாவில் நிரந்தரமாக நிலைகொள்ளும் எண்ணம் இல்லை என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு குறிப்பிட்டபோதும், அந்தப் பகுதியின் பாதுகாப்பு இஸ்ரேல் கட்டுப்பாட்டில் நீடிக்கும் என்று கூறி வருகிறார்.

காசாவில் ஹமாஸ் அமைப்பின் பிடியில் தொடர்ந்தும் 132 இஸ்ரேலிய பணயக் கைதிகள் இருப்பதாக நம்பப்படுகிறது. இவர்களை விடுவிப்பதற்கு இஸ்ரேலிய சிறையில் இருக்கும் ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்களை விடுவிக்க ஹமாஸ் நிபந்தனை விதித்து வருகிறது.

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவது மற்றும் பணயக்கைதிகளை விடுவிப்பது தொடர்பில் மத்தியஸ்த முயற்சியில் ஈடுபட்டிருக்கும் கட்டார், எகிப்து மற்றும் அமெரிக்க மூத்த அதிகாரிகள் பாரிஸ் நகரில் பேச்சுவார்த்த நடத்தி வருகின்றனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜனவரி மாதம் 30ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.